# பகுதி 4

**இலங்கை மத்திய வங்கியினதும், வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும், தொழிற்பாடுகளையும் பற்றிய 1978 ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்.**


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் | (I) |
| 2. | 1978ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க பிறெட்டன் வூட்சு உடன்படிக்கைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | (VIII) |
| 3. | 1978ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க மோட்டார்க்கார்கள் (கைமாற்றல்கள்) மீதான வரிச் சட்டம் | (XX) |
| 4. | 1978ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஏற்றுமதிகள் (சிறப்பு வரிச்) சட்டம் | (XXV) |
| 5. | 1978ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க நாட்டிடை நிதிக் கூட்டுத்தாபன உடன்படிக்கை (திருத்த)ச் சட்டம் | (XXXII) |
| 6. | 1978ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்த)ச் சட்டம் | (XXXIII) |
| 7. | 1978ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வரி மன்னிப்புச் சட்டம் | (LXXXX) |
| 8. | 1978ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டம் | (LXXXXVII) |
| 9. | 1978ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் | (CX) |

[illegible] 197[illegible] [illegible]

1. 1978[illegible]

2. 197[illegible]

3. [illegible]

5. 1978[illegible] (XX[illegible])

6. [illegible] (XXII)

7. 1978[illegible] (XXX[illegible])

[illegible] (XVII)

9. 1978[illegible] (C[illegible]

# 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு

*[1978, சனவரி 31ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும், குடியரசின் பொருளாதார விருத்திக்கும் எழுச்சிக்கும் அவசியமான தத்துவங்களைச் சொல்லப்பட்ட ஆணைக்குழுவுக்கு உரித்தாக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்.

1. இச்சட்டமானது, 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அது, அதன் எல்லா ஏற்பாடுகள் தொடர்பிலும் அல்லது எவையேனும் ஏற்பாடுகள் தொடர்பில், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு என அழைக்கப்படும் ஆணைக்குழுவொன்று (இது இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1)ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு, இடையறுவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடைய கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும். அது அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரைக்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுக்களால், சட்டத்தின்மூலம் புரியப்படக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்களையும் அது புரியலாம்.

3. ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் பின்வருவனவாகும் :—

(அ) குடியரசின் பொருளாதார விருத்தியைப் பேணிவளர்த்தலும் உருவாக்குதலும் ;

(ஆ) குடியரசின் பொருளாதார அடித்தளத்தை விரிவுபடுத்தலும் பலப்படுத்துதலும் ;

(இ) குடியரசுக்குள் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும் ;

(ஈ) வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் மூலங்களைப் பன்முகப்படுத்துதலும், ஏற்றுமதி வருவாய்களைப் பெருக்குதலும் ;

(உ) குடியரசுக்குள் கைத்தொழில் முயற்சிகளும் வர்த்தக முயற்சிகளும் தாபிக்கப்படுவதையும் விருத்தி செய்யப்படுவதையும் ஊக்குவித்தலும் பேணி வளர்த்தலும் ;

(ஊ) நாலாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படடுள்ள அதிகார இடப்பரப்பின் அலுவல்களை நிருவகித்தலும் ; அத்துடன்

(எ) மேற்கூறிய குறிக்கோள்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தலும்.

4. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அதிகார இடப்பரப்பானது இதற்கான "அ" என்னும் அட்டவணையில் தரப்பட்டிருக்கின்ற வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள இடப்பரப்பாக இருத்தல் வேண்டும்.

5. ஆணைக்குழுவானது —

(1) அதிகார இடப்பரப்பிலும், அதன்மீதும்; அத்துடன்

(2) ஏதேனும் உரிமம்பெற்ற தொழில்முயற்சியிலும், அதன்மீதும்,

நியாயாதிக்கம் உடையலாதல் வேண்டும்.

16. இச்சட்டத்தினால் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஆணைக்குழுவானது —

(அ) ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அல்லது உகந்ததாகக் கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கும் அல்லது அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ;

(ஆ) கைத்தொழில் அமைவிடங்களின் நோக்கங்களுக்காக, ஊழியர்களின் பயன்பாட்டுக்காக அல்லது பொதுவான பொருளாதார விருத்திக்காகக் காணியைக் கொள்வதற்கும் விற்பதற்கும் அல்லது குத்தகைக்கு விடுவதற்கும் ;

(இ) விற்பதற்காக அல்லது குத்தகைக்கு விடுவதற்காக கைத்தொழிற் பேட்டைகளின் அமைப்பைத் திட்டமிடுவதற்கும் ;

(ஈ) தொழில் முயற்சிகளுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கும் ;

(உ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படும் அல்லது குறித்தொதுக்கப்படும் அல்லது கையளிக்கப்படும் அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் ஆற்றுவதற்கும் ; அத்துடன்,

(ஊ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தல், புரிதல், அத்துடன் ஆற்றுதல் தொடர்பில் இடைநேர்விளைவான அல்லது அவற்றின் விளைவாந்தன்மையினவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் பொதுவாகச் செய்வதற்கும்,

தத்துவமுடையதாதல் வேண்டும்.

17. (1) ஆணைக்குழுவானது, அதிகார இடப்பரப்பினுள் அல்லது அதிகார இடப்பரப்பிற்கு வெளியேயுள்ள ஏதேனும் தொழில் முயற்சியோடு உடன்படிக்கைகள் செய்துகொள்வதற்கும் இதற்கான "ஆ" என்னும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் சட்டத்திலிருந்து விலக்களிப்பதற்கும், அல்லது அமைச்சரினால் ஆக்கப்படக்கூடிய அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க அத்தகைய தொழில் முயற்சிகளுக்கு அத்தகைய எவையேனும்

சட்டங்கள் ஏற்புடையனவாதலைத் திரிபுபடுத்துவதற்கும் அல்லது வேறுபடுத்துவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) அத்தகைய உடன்படிக்கை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அதனை ஆணைக்குழுவிடம் பதிவுசெய்துகொண்டதன்மேல், ஆணைக்குழுவுக்கும் தொழில் முயற்சிக்கும் இடையில் செல்லுபடியானதும் பிணிக்கின்றதும் ஆன ஒப்பந்தமொன்றாக அமைதலும்வேண்டும்.

18. (1) ஆணைக்குழுவானது, ஏதேனும் கட்டணத்தை விதிப்பதற்கு அல்லது விதிப்பனவை அறவிடுவதற்குள்ள தத்துவம் உட்பட, ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தல், புரிதல், ஆற்றுதல் என்பன தொடர்பிலும், அத்துடன் எக்கருமத்துக்காக விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமம் ஏதேனும் தொடர்பிலும், அமைச்சரது அங்கீகாரத்துடன் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும் கசற்றில் வெளியிடப்பட்டதன்மேல் வலுவுக்கு வருதல்வேண்டும்.

19. ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும், அரசாங்கத்தின் பொதுவான கொள்கையோடு இணங்கியொழுகுதல் வேண்டும்.

20. (1) இதற்கான "இ" என்னும் அட்டவணையில் அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்டுள்ள எழுத்திலான சட்டங்களானவை, கீழே கூறப்படும் துணை விதிகளை, ஒழுங்குவிதிகளை, கட்டளைகளை அல்லது அறிவிப்புகளை ஆக்குவதற்கு அல்லது விடுப்பதற்கு, அல்லது கீழே கூறப்படும் தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது ஆற்றுவதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரி பற்றி, அலுவலர் பற்றி அல்லது ஆள் பற்றி அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ள குறிப்பீடுகள், ஆணைக்குழு பற்றிய குறிப்பீடுகள் என்றாற்போன்று அதேவிதத்தில், ஆணைக்குழு —

(அ) அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏதேனும் துணைவிதியை, ஒழுங்குவிதியை, கட்டளையை அல்லது அறிவிப்பை அதிகார இடப்பரப்பு முழுவதற்குமாக அல்லது குறித்துரைக்கப்பட்ட அதன் ஏதேனும் பாகத்துக்காக ஆக்குதலும் அல்லது விடுத்லும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஆளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்டுள்ள எல்லாத் தத்துவங்களையும் அல்லது பணிகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும் அதிகார இடப்பரப்பில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் பிரயோகித்தலும் ஆற்றுதலும்,

சட்டமுறையானதாயிருத்தல் வேண்டுமென்ற திரிபுக்கமைய, அதிகார இடப்பரப்பில் பயனுறுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியை ஆணைக்குழுவின் சார்பில் பிரயோகிப்பதற்

கென அல்லது ஆற்றுவதற்கென எவரேனும் அலுவலரை அல்லது ஆளை விதி மூலம் பதவிகுறித்து நியமிக்கலாம்.

21. (1) ஆணைக்குழுவானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அதிகார இடப்பரப்புக்குள், மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் மாநகரசபை யொன்றுக்கும் அதன் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் உள்ள எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் ஆற்றுதலும் வேண்டும்,

(2) மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் (Iஆம், IIஆம், IIIஆம், IXஆம், Xஆம், XIஆம், XIVஆம் பாகங்களில் அடங்கியுள்ள ஏற்பாடுகளைத் தவிரவும் அவை நீங்கலாகவும்) இச்சட்டத்தின் ஏற்பாடுகளோடு ஒவ்வாதனவாகவுள்ள அத்தகைய ஏற்பாடுகளைத் தவிர, ஏற்றமாற்றங்களுடன் அதிகார இடப்பரப்புக்குள் ஏற்புடையனவாதல்வேண்டும்; அத்துடன், அத்தகைய கட்டளைச்சட்டத்தில் மாநகரசபை பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் ஆணைக்குழு பற்றிய ஒரு குறிப்பீடாகக் கருதப்படுதல்வேண்டும்; மாநகர இடப்பரப்புப் பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் அதிகார இடப்பரப்புப் பற்றிய ஒரு குறிப்பீடாகக் கருதப்படுதல் வேண்டும்; அமைச்சர் பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் இச்சட்டத்தினை நிருவகித்தல் என்ற விடயமும் பணியும் எவ்வமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் பற்றிய ஒரு குறிப்பீடாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தினால் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஆளுக்கு உரித்தாக்கப்படும் அல்லது குறித்தொதுக்கப்படும் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை அதிகார இடப்பரப்புக்குள் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் ஆற்றுவதற்கும் எவரேனும் அலுவலரை அல்லது ஆளை விதிமூலம் பதவி குறித்து நியமிக்கலாம்.

(4) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ளூர் அதிகார சபையொன்று பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும், அதிகார இடப்பரப்பில் ஆணைக்குழு பற்றிய ஒரு குறிப்பீடாகக் கருதப்படுதல்வேண்டும்.

22. (1) அதிகார இடப்பரப்பானது, மாநகரசபைகள் கட்டளைச்சட்டம், நகரசபைகள் கட்டளைச்சட்டம், பட்டினசபைகள் கட்டளைச்சட்டம், அல்லது கிராமசபைகள் கட்டளைச்சட்டம் என்பவற்றின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நிருவாக இடப்பரப்பு முழுவதையும் உள்ளடக்குகின்றதான ஏதேனும் விடயத்தில், இச்சட்டத்தின் 4ஆம் பிரிவு நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து அத்தகைய நிருவாக இடப்பரப்புத் தொடர்பிலான எல்லா நோக்கங்களுக்காகவும் ஆணைக்குழுவே அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் வழியுரிமையாளராய் அமையுமெனக் கருதப்படுதல்வேண்டும்; அத்துடன், அத்தேதிக்கு நேர்முந்திய தேதியன்று அத்தகைய உள்ளூர் அதிகார சபை குலைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படலும் வேண்டும்.

(2) அதிகார இடப்பரப்பானது, அத்தகைய ஏதேனும் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிருவாக இடப்பரப்பு முழுவதையும் உள்ளடக்காத ஏதேனும்

விடயத்தில், அமைச்சரானவர், உள்ளூராட்சி எனும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளானவை, அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதிவிலக்குகள், இசைவாக்கங்கள், அத்துடன் திரிபுகள் (எவையேனும் இருப்பின்), அவற்றுடன் அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள இடப்பரப்பிற்கு ஏற்புடையனவாதல் வேண்டுமெனப் பணிக்கலாம்; அத்துடன், குறிப்பாக, இப்பிரிவை ஏற்புடையதாக்கும்போது எழக்கூடிய எச்சூழ்நிலைகளுக்கும் ஏற்பாடு செய்யும் அல்லது எப்பிரச்சினையையும் அல்லது எக்கருமத்தையும் தீர்மானிக்கும் அல்லது சரிசெய்யும் நோக்குடன், அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிப்புகளையும் அத்தகைய கட்டளைமூலம் விடுக்கலாம்.

*(3)* இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று ஏதேனும் இடப்பரப்பில் வலுவில் இருந்து வருகின்றனவும் ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையினால் ஆக்கப்பட்டனவுமான எல்லாத் துணைவிதிகளும், அவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளோடு ஒவ்வாதனவாக இல்லாதவரையில், அவ்விடப் பரப்பில் தொடர்ந்தும் வலுவிலிருந்து வருதல் வேண்டுமென்பதுடன், அவை, எல்லா நோக்கங்களுக்குமாக இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட துணைவிதிகளாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**23.** ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், ஆற்றுவதிலும், அமைச்சரால் விடுக்கப்படும் ஏதேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

24. *(1)* அமைச்சர், ஒழுங்குவிதியினால்—

(அ) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கும் ஏதேனும் தொழில் முயற்சிக்கும் இடையில் செய்யப்படும் ஏதேனும் எழுத்திலான உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கக் கூடிய அல்லது இணைக்கப்பட்டிருக்கக் கூடிய இதற்கான "ஆ" என்னும் அட்டவணையில் தரப்பட்டுள்ள எழுத்திலான சட்டங்களுள் எதனதும் ஏதேனும் விலக்கின் அல்லது திரிபின் நோக்கெல்லையும் அளவையும் தீர்மானிக்கலாம்;

(ஆ) அதிகார இடப்பரப்புக்கு இதற்கான "இ" என்னும் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தை ஏற்புடையதாக்கும்போது, அச்சட்டத்தின் ஏற்பாடுகளைத் திரிபுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்; அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் அதிகார இடப்பரப்புக்கு ஏற்புடையனவான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் அத்தகைய ஏற்பாடுகள் எவற்றையும் திரிபுபடுத்தலாம்;

(இ) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு அவசியமென அவரால் கருதப்படும் ஏதேனும் கருமத்துக்கு ஏற்பாடு செய்யலாம்.

*(2)* இச்சட்டத்தின் கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அது, அத்தகைய வெளியீட்டின்மேல் அல்லது அவ் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அதன் வெளியீட்டுத் தேதிக்குப் பின்னர் இயன்றளவு விரைவாக, தேசிய அரசுப் பேரவையின் அங்கீகாரத்துக்கென அதன் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் எழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்படும் தேதியிலிருந்து, ஆனல் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

25. (1) எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், ஆணைக்குழுவானது 17 ஆம் பிரிவின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், வங்கித் தொழிலைக் கொண்டுநடத்துகின்ற ஏதேனும் தொழில் முயற்சி, இலங்கைப் பிரசைகளல்லாத ஆட்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டிருப்பதற்கும், அத்தகைய ஆட்களிடமிருந்து நடப்புக் கணக்குகளின் மீது அல்லது வேறு வகையாக வைப்புக்களை ஏற்பதற்கும் அத் தொழில் முயற்சிக்கு அதிகாரமளிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) (அ) அத்தகைய வங்கித் தொழில் நிறுவனம் எதுவும் இலங்கைப் பிரசைகளல்லாத கணக்கு வைத்திருப்பவரின் இரகசிய இலக்கங்களைக் கொண்ட கணக்குகளை வைத்திருப்பதற்கும் ஆணைக்குழு அதிகாரமளிக்கலாம்.

(ஆ) அத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளவிடத்து, இரகசிய இலக்கமிடப்பட்ட அக்கணக்கை அடையாளம் காட்டும் விபரம் எதுவும், இலங்கை அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் ஏதேனும் நீதிமன்றத்திற்கு, நிறுவனத்திற்கு, அமைப்புக்கு, திணைக்களத்துக்கு அலுவலருக்கு, முகவருக்கு அல்லது பிரதிநிதிக்கு, அல்லது வேறு சட்டப்படியான அல்லது இயற்கை ஆள் எவருக்கும் அடியோடு வெளிவிடப்படுதலாகாது; அத்துடன், அதற்கிணங்க, அத்தகைய கணக்குகள் பற்றிய தகவல் எதையும் வெளிவிடுகின்ற எந்த ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதோடு ஒரு மாவட்ட நீதிமன்றத்தின் முன்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், அத்தகைய நீதிமன்றத்தின் சாதாரண நியாயாதிக்கம் எவ்வாறிருப்பினும், ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு மறியற்றண்டனைக்கு; அல்லது இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(இ) அத்தகைய இரகசியம் பற்றிய விபரம், நிறுவனத்தால், அல்லது அந்த நிறுவனத்தின் முகவர்கள் அல்லது சேவையாளர்கள் எவராலும், அங்ஙனம் தொழிலில் இருக்கும்போதோ அல்லது தொழிலிலிருந்து விலகிய பின்னரோ ரோ வெளிவிடப்படும் செயல்களைத் தவறுகள் ஆக்கியும் அவற்றுக்கான தண்டனையை ஏற்பாடு செய்தும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட வங்கி நிறுவனத்தால் ஏற்கப்படும் வைப்புக்கள் யாவும், இலங்கை நாணயம் தவிர்ந்த வேறு நாணயங்களாகவே இருத்தல் வேண்டும்.

27. (1) ஆணைக்குழுவானது, அதிகார இடப்பரப்பில் சுங்க அலுவலகங்கள் தாபிக்கப்படுதலை அனுமதித்தல் வேண்டும் என்பதுடன், அதிகார இடப்பரப்புக்குள் அல்லது அதன் சுற்றெல்லையில் அவர்கள் சமுகமாகவிருப்பது அவர்களது கடமைகளின் காரணமாக அவசியமாகவுள்ள சுங்க அலுவலர்களுக்குப் போதிய வசதிகளை ஏற்பாடு செய்தலும் வேண்டும். ஆணைக்குழு, அவசியமானவிடத்து, ஏதேனும் இடப்பரப்புத் தொழில் முயற்சியின் அல்லது உரிமம் பெற்ற தொழில்முயற்சியின் வளவுக்குள் அவற்றையொத்த வசதிகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(2) (அ) ஆணைக்குழுவுடன் செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையின் கீழ் அதன்கண் அடங்கியுள்ள நியதி நிபந்தனைகட்கமைய அதிகாரமளிக்கப் பட்டிருந்தால் தவிர, இடப்பரப்புத் தொழில் முயற்சி அல்லது உரிமம்பெற்ற தொழில்முயற்சி எதனுலும் மொத்த வியாபாரம் அல்மது சில்லரை வியாபாரம் எதுவும் நடாத்தப்படுதலாகாது.

(ஆ) ஆணைக்குழுவுடன் செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையின் நியதிகளுக்கு இணங்கவல்லாது வேறு எத்தன்மையிதான எம்முறையிலும் அத்தகைய ஏதேனும் தொழில்முயற்சியின் வளவுக்கு வெளியே எடுத்துச் செல்லப்படும் எவையேனும் பொருட்கள், பண்டங்கள் அல்லது வியாபாரப் பொருள்கள் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், பறிமுதல், தண்டங்கள், தவறுகள் ஆகியவை தொடர்பான ஏற்பாடுகள் உட்பட, சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய பொருட்கள், பண்டங்கள் அல்லது வியாபாரப் பொருள்கள் தொடர்பில் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

28. (1) ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலுள்ள ஏதேனும் அக்கறை, ஆணைக்குழுவின் நோக்கங்களில் எதற்காகவும் அதற்குத் தேவைப் படுமிடத்து, அக்காணி அல்லது அதிலுள்ள அக்கறை, ஆணைக்குழுவுக்காக அரசாங்கத்தினுல் காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் கொள்ளப்படலாம் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தவிர, அக்காணியை அல்லது அதிலுள்ள அக்கறையைக் கொள்ளும் நோக்கங்களுக்காக ஏற்புடையனவாதலும் வேண்டும். காணிகொள்ளுதற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய காணி அல்லது அதிலுள்ள அத்தகைய அக்கறை, ஒரு பொது நோக்கத்துக்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து தொடங்கும் ஐந்து ஆண்டுக் காலத்தினுள் எந்நேரத்திலும், அக்காணியை அல்லது அதிலுள்ள அக்கறையைக் கொள்ளுதற்கான உளக்கருத்தைக் காட்டும் பகிரங்க அறிவித்தல், காணி கொள்ளுதற் சட்டத்தினுல் தேவைப்படுத்தப் பட்டவாறு வெளியிடப்பட்டுள்ள அத்தகைய ஏதேனும் கொள்ளுதலின், விடயத்தில் காணி கொள்ளுதற் சட்டத்தில் இதற்கு முரணுக எது எப்படியிருப் பினும், அக்காணியின் அல்லது அதிலுள்ள அக்கறையின் சந்தைப்பெறுமதி யானது, 1977, யூலை 22 ஆம் தேதியன்று, அக்காணி அல்லது அதில் உள்ள அக்கறை பெற்றிருக்கக் கூடிய சந்தைப் பெறுமதியும், அந்தத் தேதிக்குப் பின்னர் அந்தக் காணியில் எவையேனும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பின் அச்சீர்திருத்தங்களுக்கான நியாயமான ஒரு தொகையும் சேர்ந்த ஒரு தொகை யாகக் கருதப்படுதல் வேண்டும்.

29. இடப்பரப்பு தொழில்முயற்சி அல்லது உரிமம் பெற்கு தொழில் முயற்சி எதனுலும் ஆணைக்குழுவோடு செய்துகொள்ளப்படும் உடன்படிக்கையில் வெளிப்படையாக வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, இதன் கீழ் தரப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகள் அத்தகைய தொழில்பயிற்சி எதற்கும் ஏற்புடையனவாகாது:—

(அ) 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழிற் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டம்;

(ஆ) 1974 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கம்பனிகள் (சிறப்பு ஏற் பாடுகள்) சட்டம்.

# 1978 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பிறெட்டன் ஊட்சு உடன்படிக்கைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

(1978, ஏப்பிரல் 11 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

இலங்கையை ஓர் உறுப்புநாடாகக் கொண்ட நாட்டிடை நாணய நிதிய உடன்படிக்கையின் உறுப்புரைகளுக்கு மேலதிகத் திருத்தங்களை ஏற்றுக்கொள்வதென இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள முடிவுக்கு வலுவும் பயனும் கொடுக்கும் வகையில், பணச் சட்டத்தில் தரப்பட்டுள்ள பிறெட்டன் ஊட்சு உடன்படிக்கையைத் திருத்துவதன்மூலம் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்கானதொரு சட்டம்.

நாட்டிடை நாணய நிதியத்தில் இலங்கை உறுப்புநாடாக உள்ளதாதலாலும், அந்நிதியத்தின் உடன்படிக்கையினது மூல உறுப்புரைகளின் அகப்பகுதியானது, அத்தகைய ஓர் உறுப்புநாடாக இலங்கை ஆகுவதற்கு உரித்தளித்த (424 ஆம் அத்தியாயமான) பிறெட்டன் ஊட்சு உடன்படிக்கைகள் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டதாதலாலும்:

அத்துடன், சிறப்புப் பற்று உரிமைகளின் அடிப்படையிலான வசதியொன்றினை ஏற்படுத்துவதற்கு வழி செய்யும் வகையில் நிதிய உடன்படிக்கையினது மூல உறுப்புரைகள் திருத்தப்பட்டன ஆதலாலும் அத்துடன் அத்திருத்தத்தின் அகப்பகுதியானது, அத்தகைய திருத்தத்தினை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கையை இயலச்செய்ததான 1969 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, பிறெட்டன் ஊட்சு உடன்படிக்கைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே பாராளுமன்றத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டதாதலாலும்:

அத்துடன், புதியதொரு நாட்டிடை நாணய அமைப்புமுறைமையைத் தாபித்து அதன் தொழிற்பாடுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் ஒரு பொதுப்பகுதி மூலமும் சிறப்புப் பற்று உரிமைகள் பகுதி மூலமும்கொண்டு நடாத்தும் வகையில், மூலஉறுப்புரைகளுக்கு மேலதிகத் திருத்தங்களை, (இந்த முன்னுரையில் "உத்தேசத் திருத்தங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நாட்டிடை நாணய நிதியத்தின் ஆளுநர்கள் சபை தீர்மானமொன்றின் மூலம் அங்கீகரித்துள்ளதாதலாலும்:

அத்துடன், உத்தேசத் திருத்தங்களை உட்படுத்துகின்றதான நிதிய உடன்படிக்கையினது உறுப்புரைகளின் அகப்பகுதி 1978 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 4 ஆம் தேதியன்று தேசிய அரசுப் பேரவையின் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டதாதலாலும்:

அத்துடன், தாபிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய நாட்டிடை நாணய அமைப்புமுறைமையில் இலங்கை அரசாங்கம் பங்குபற்றுவதனை இயலச்செய்கின்றவாறு உத்தேசத் திருத்தங்களை ஏற்றுக்கொள்வதென இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாதலாலும்:

அத்துடன், அத்தகைய முடிவுக்கு முழுவலுவும் பயனும் கொடுப்பதற்கு இதனகத்துப்பின்னர் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளை ஆக்குதல் அவசியமாகவுள்ளதாதலாலும்:

ஆகவே, இப்பொழுது, இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம், 1978 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பிறெட்டன் ஊட்சு உடன்படிக்கைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (அ) புதியதொரு நாணய அமைப்புமுறைமையைத் தாபித்து, குறித்த சில மாற்றங்களைச் செய்யும் வகையில் நாட்டிடை நாணய நிதிய உடன்படிக்கையின் உறுப்புரைகளுக்குச் செய்வதற்கென உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தமானது (இத்திருத்தம், 1978 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 4 ஆம் தேதியன்று தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிய உடன்படிக்கையின் உறுப்புரைகளினது அகப்பகுதியோடு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது), இலங்கை அரசாங்கத்தினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டதெனக் கூறுகின்ற ஏற்றுக்கொள்ளற் சாதனமொன்றையும்; அத்துடன்

(ஆ) அத்தகைய திருத்தத்தை ஏற்றதன்மேல் விளைவாந்தன்மையினவான எல்லாக் கடப்பாடுகளையும் இலங்கை அரசாங்கம் அதன் சட்டத்துக்கிணங்கப் பொறுப்பேற்கின்றதெனவும், அத்துடன் அத்தகைய எல்லாக் கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதனையும் புரிவதனையும் இயலச்செய்வதற்கு அவசியமாகக் கூடியவாருன அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் அது எடுத்துள்ளதெனவும் கூறுகின்ற சாதனமொன்றையும்,

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நாட்டிடை நாணய நிதியத்தின் வைப்பிலிடுவதற்கு, அத்தகை சாதனங்களில் பெயர் குறிப்பிடப்படக் கூடியவாருன அத்தகைய ஆளுக்குத் தமது கைப்பட்ட சாதனங்கள் மூலம் தத்துவமளிப்பதற்கு சனுதிபதி இத்தால் அதிகாரமளிக்கப்படுகிறுர்.

3. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிறெட்டன் ஊட்சு உடன்படிக்கைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:–

''நாட்டிடை நாணய நிதியத்துக்கான ஒப்பப்பணம்

3. (1) நிதிய உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 1 ஆம், 4 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செலுத்தப்படக் கூடியவாருன இலங்கையினது ஒப்பப்பணங்களின் அத்தகைய பாகம், இலங்கை நாணயமாக, அல்லது சிறப்புப் பற்று உரிமைகளாக, அல்லது நிதியத்தால் குறித்துரைக்கப்படக் கூடியவாருன அத்தகைய வேறு நாணயமாக இலங்கையின் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) இலங்கைக்கான கோட்டா அதிகரிக்கப்பட்டதன் விளைவாக, நாட்டிடை நாணய நிதியத்துக்கான இலங்கையின் ஒப்பப் பணத் தொகை அதிகரிக்கப்படுமிடத்து, அத்தகைய ஒப்பப் பணத்தில் ஏற்பட்ட அதிகரிப்புத் தொகையை நிதிய உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 3 ஆம் பிரிவின் கீழ் இலங்கை நாணயமாக, அல்லது சிறப்புப் பற்று உரிமைகளாக, அல்லது நிதியத்தால் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் நாணயமாகச்

செலுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பணத் தொகைகள் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) நிதிய உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4 ஆம் பிரிவின் கீழ், நிதியமானது, இலங்கையின் ஒப்பப் பணத்தின் ஏதேனும் பாகத்துக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளத் தீர்மானிக்கின்றதும், அவ்வாறு ஏற்றுக்கொள்ளாவிட்டால் இலங்கை நாணயமாகச் செலுத்தப்படவேண்டியதும் ஆன அத்தகைய எவையேனும் வட்டிபெறாக் கைமாறத்தகா நாணயத் தாள்களை அல்லது வேறு கடப்பாடுகளை உருவாக்கி அவற்றைத் தக்கதென அவர் நினைக்கும் அத்தகைய மாதிரியாக நாட்டிடை நாணய நிதியத்தின் பொது வளங்கள் கணக்கிற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தின் சார்பில் அமைச்சருக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது."

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

"நாட்டிடை நாணய நிதியத்துக்கான ஏனைய கொடுப்பனவுகள்

4. (1) இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்:

(அ) நிதிய உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் II ஆம் பிரிவின் கீழ் (இப்பிரிவு உறுப்பு நாடுகளின் நாணயங்களின் பரிவர்த்தனைப் பெறுமதிகளின் மாற்றங்கள் பற்றிப் பேசுகின்றது) நாட்டிடை நாணய நிதியத்தின் பொதுவளங்கள் கணக்கிற்குச் செலுத்தப்படற் பாலனவான எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) நிதிய உடன்படிக்கையின் XIII ஆம் உறுப்புரையின் 3 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட உத்தரவாதத்தை நடைமுறைக்கிடுவதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும், அதாவது சொல்லப்பட்ட உறுப்புரையின் கீழ் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நம்பகனின் தவறுகையால் அல்லது தப்பிதத்தால் விளைகின்ற நட்டத்துக்கெதிராக நிதியச் சொத்துக்களுக்கு உத்தரவாதம்;

(இ) இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு, நிதியத்தின் பொது வளங்கள் கணக்கிற்கு வழங்கப்பட்ட எவையேனும் நாணயத்தாள்களை அல்லது கடப்பாடுகளை மீண்டு கொள்வதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும்;

(ஈ) நிதியத்துக்கு அல்லது நிதியத்தின் ஏதேனும் உறுப்பு நாட்டுக்கு, நிதிய உடன்படிக்கையின் ஒ என்னும் அட்டவணையின் கீழ் (இது நிதியத்திலிருந்து உறுப்புநாடுகள் விலகுதல் பற்றிப் பேசுகின்றது) அல்லது 4 ஆம் அட்டவணையின் கீழ் (இது, நிதியத்தை முடித்துக்கட்டல் பற்றிப் பேசுகின்றது) கொடுப்பதற்குத் தேவையான ஏதேனும் நட்டஈடு;

(உ) நிதிய உடன்படிக்கையின் XVI ஆம் உறுப்புரையில் 2 ஆம் பிரிவின் கீழ் இலங்கையின் சார்பில் மத்திய வாங்கியால் செலுத்தப்பட்டதும், அவ்வாறு கொடுபடற்பாலதென நிதிய உடன்படிக்கையின் XX ஆம் உறுப்புரையின் 4 ஆம் பிரிவின் கீழ் மதிப்பிடப்பட்டதுமான எல்லாப் பணத் தொகைகளும், மத்திய வங்கிக்கு;

(ஊ) நிதிய உடன்படிக்கையின் ஐ என்னும் அட்டவணையின் 8 ஆம் பிரிவின் கீழ் (இது அந்தப் பகுதியை முடித்துக்கட்டலுக்கான நிருவாகம் பற்றியது) அந்த நிதியத்தின் சிறப்புப்பற்று உரிமைகள் பகுதியின் எவரேனும் பங்குபற்றுநருக்குச் செலுத்துவதற்கு இலங்கை தேவைப்படுத்தப் பட்டுள்ள அல்லது கடப்பாடு உடையதாயுள்ள ஏதேனும் நட்டஈடு; அத்துடன்

(எ) நிதியத்தின் சிறப்புப் பற்று உரிமைகள் பகுதியின் பங்கு பற்றுநர் என்ற தன்மையில் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அந்த நிதியத்துக்கு அல்லது அதன் ஏதேனும் உறுப்புநாட்டுக்கு எத்தொகையைச் செலுத்தும்படி இலங்கை தேவைப்படுத்தப்பட்டிருக்குமோ அல்லது செலுத்துவதற்குக் கடப்பாடு உடையதாயிருக்குமோ அந்த (ஊ) என்ற பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நட்டஈட்டுத்தொகை நீங்கலாக எல்லாப் பணத்தொகைகளும்.

(2) அமைச்சர், அவ்வாறு செய்வது தக்கதென எண்ணினால் அரசாங்கத்தின் சார்பில், நாட்டிடை நாணய நிதியத்தின் பொது வளங்கள் கணக்கிற்கு, அவர் தக்கதென எண்ணும் அத்தகைய மாதிரியாக, இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் கூறப்பட்ட நிதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகளுள் எவற்றின் கீழும் அந்நிதியத்துக்குச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் இலங்கை நாணயத்துக்குப் பதிலாக ஏற்றுக்கொள்வதற்கு அந் நிதியமானது, நிதிய உடன்படிக்கையின் IIIஆம் உறுப்புரையின் 4ஆம் பிரிவின்கீழ்த் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய எவையேனும் வட்டிபெறாக் கைமாறத்தகா நாணயத்தாள்களை அல்லது வேறு கடப்பாடுகளை உருவாக்கி வழங்கலாம.''.

5. (1969 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப் பட்டதான) முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

''சிறப்புப்பற்று உரிமைகள் பகுதியில் நடைபெறும் தொழிற்பாடுகள் தொடர்பாக மத்திய வங்கி தொடர்பிலான சிறப்பேற்பாடுகள்

8 அ. (1) நாட்டிடை நாணய நிதியத்திலுள்ள சிறப்புப் பற்று உரிமைகள் பகுதியிலான சிறப்புப் பற்று உரிமைகளைக் கொள்ளுவதற்கு, வைத்திருந்து தொழிற்படுத்துவதற்கு, அல்லது கையாளுவதற்கு மத்தி வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது

(2) மத்திய வங்கி கீழ்க்கண்டவற்றைச் செய்ய இத்தால் பின்வருமாறு அதிகாரமளிக்கப்படுகின்றது:—

(அ) நாட்டிடை நாணய நிதியத்திலுள்ள சிறப்புப் பற்று உரிமைகள் பகுதியிலான சிறப்புப் பற்று உரிமைகள் தொடர்பில் நிதிய உடன்படிக்கையில் XX ஆம் உறுப்புரையின் 2 ஆம் பிரிவின் கீழ் அந்நிதியத்துக்குச் செவித்தப்படற்பாலனவான எவையேனும் கட்டணங்களைச் செலுத்தும் நோக்கத்துக்காகத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளையும் கொடுப்பனவு செய்தல்; அத்துடன்

(ஆ) சொல்லப்பட்ட XX ஆம் உறுப்புரையின் 1 ஆம் பிரிவின் கீழான அத்தகைய சிறப்புப் பற்று உரிமைகள் தொடர்பில் அந்நிதியத்தினால் செலுத்தப்படற்பாலதான வட்டியைப் பெற்றுக்கொள்ளுதலும் அதனை அதன் சொந்த நிதிகளில் வரவு வைத்தலும்.''

6. முதன்மை சட்டவாக்கத்தின் 8 அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது; இது அச்சட்டவாக்கத்தின் 8 ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும்:—

''நாட்டிடை நாணய நிதியத்தின் பொது வளங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான சிறப்பேற்பாடு

8 ஆ. மத்திய வங்கி பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது:—

(அ) நிதிய உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 3 (உ) என்னும் பிரிவுக்கிணங்க, நாட்டிடை நாணய நிதியத்தின் ஓர் உறுப்பு நாட்டினால் அந்நிதியத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை நாணயத்தினது மீதிகள், கொள்வனவு செய்யப்படும் நேரத்தில் அத்தகைய உறுப்புநாட்டினால், இலங்கையினால் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுப்பாடின்றிப் பயன்படுத்தத்தகு நாணயத்திற்காகப் பரிமாறப்படலாம் என்பதை உறுதிப்படுத்துதலும்; அத்துடன்

(ஆ) அதன் சொந்த நாணயத்தையே நிதியத்திடமிருந்து மீளக்கொள்வனவு செய்யும் நிதியத்தின் ஏதேனும் உறுப்புநாடு, நிதிய உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 7 (ஒ) என்னும் பிரிவுக்கிணங்க மீளக்கொள்வனவு செய்யும் நேரத்தில், இலங்கையினால் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுப்பாடின்றி பயன்படுத்தத்தகு நாணயத்திற்காக (அம்மீளக்கொள்வனவுக்கென நிதியத்தினால் இலங்கை நாணயம் குறித்துரைக்கப்பட்டிருப்பின்) இலங்கை நாணயத்தைப் பெறலாம் என்பதை உறுதிப்படுத்துதலும்.''

7. (1969ம் ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப் பட்டதான) முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ "நிதிய உடன்படிக்கை" என்பதன் வரைவிலக்கணத்திற்கு நேர் முன் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம்:—

"மத்திய வங்கி" என்பது பணச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்'; அத்துடன்

(ஆ) "நிதிய உடன்படிக்கை" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:—

"நிதிய உடன்படிக்கை" என்பது, தொடக்கத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவையும், பின்வரும் நோக்கங்களுக்காகப் பின்னர்த் திருத்தப்பட்டவையுமான நாட்டிடை நாணய நிதியத்தின் உடன்படிக்கை உறுப்புரைகள் என்று பொருளாகும்:—

(அ) சிறப்புப் பற்று உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு வசதியொன்றினை ஏற்பாடு செய்வதற்கும் (இத்திருத்தத்தின் அகப்பகுதி. 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் ஆம் தேதியன்று பிரதிநிதிகள் சபை முன்னர் சமர்ப்பிக்கப்பட்டது); அத்துடன்

(ஆ) புதிய நாட்டிடை நாணய அமைப்புமுறைமையொன்றைத் தாபிப்பதற்கும் (இத்திருத்தம் 1978 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 4 ஆம் தேதியன்று தேசிய அரசுப் பேரவையின் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட நிதிய உடன்படிக்கை உறுப்புரைகளின் அகப்பகுதியோடு ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது);

௮. பணச் சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.—

(1) அச்சட்டத்தின் 3 ஆம் பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவை இடுவதன் மூலமும்: -

"ரூபாவின் சம அளவுப் பெறுமதி

3. (1) இலங்கை ரூபாவின் சம அளவுப் பெறுமதியானது, சிறப்பு பற்று உரிமைகளின் நியதிகளின்படி, அல்லது நாட்டிடை நாணய நிதியத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பொதுப் பகு எண்ணின் நியதிகளின்படி தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென நாணயச் சபையானது, அதன் ஏகமனதான முடிபு ஒன்றின் மூலம் அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும். அத்தகைய விதப்புரையில் மேல் அமைச்சர், கசேற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய விதப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளுக்கிணங்க இலங்கை ரூபாவின் சம அளவுப் பெறுமதியினைத் தீர்மானித்து வெளிப்படுத்துதல் வேண்டும்.

ஆயின், எவ்வாருயினும், நாட்டிடைப் பொருளாதார நிலைமைகள், நிலையான ஆனல் சரிப்படுத்தக்கூடிய சம அளவுப் பெறுமதிகளை அடிப்படையாகக்கொண்ட பரிவர்த்தனை ஒழுங்குகள் உட்புகுத்தப்படுவதனை அவசியப்படுத்தவில்லை என நாணயச் சபை கருதுமெனில், அது ஏகமனதான முடிவின் மூலம் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் தீர்மானம் எதுவும் செய்யப்படலாகாதென, அல்லது இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை எதுவும் ஒழிக்கப்பட வேண்டுமென அமைச்சருக்கு விதந்துரைக்கலாம். அத்தகைய ஏதேனும் விதப்புரையின் மேல், இப்பிரிவின் கீழ் கட்டளை ஒன்று ஆக்கல்படுவதனை அமைச்சர் தவிர்த்தல் வேண்டும். அல்லது விடயத்திற்கேற்ப இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை எதனையும் ஒழித்தல் வேண்டும்.

(2) பின்வரும் எவையேனும் சூழ்நிலைகளில் இலங்கை ரூபாவின் சம அளவுப் பெறுமதி மாற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென நாணயச்சபை அபிப்பிராயப்படின், அது ஏகமனதான முடிபின் மூலம், அத்தகைய சம அளவுப் பெறுமதியினை மாற்றும்படி அமைச்சருக்கு விதந்துரைக்கலாம்; அதாவது—

(அ) ஏற்கனவேயுள்ள சம அளவுப் பெறுமதி, உயர்ந்த மட்டத்திலான உற்பத்தியையும். ஊழியத்தையும் உண்மையான வருமானத்தையும், இலங்கையின் உற்பத்தி வளங்களின் முழுமையான அபிவிருத்தியையும் எய்துவதற்கு அல்லது, அவற்றைப் பேணுவதற்கு முறையற்றவகையில் முட்டுக்கட்டையிடுமெனில், அல்லது முட்டுக்கட்டையிடும் சாத்தியம் உடையதாகவிருக்குமெனில், அல்லது மத்திய வங்கியின் நாட்டிடை ஒதுக்கு நிதியத்தில் அல்லது இலங்கையின் வேறு பயன்படுத்தத்தக்க வெளிநாட்டுச் சொத்துக்களில் பாரதூரமான வீழ்ச்சியை ஏற்படுத்துமெனில், அல்லது அவ்வீழ்ச்சியை ஏற்படுத்தும் சாத்தியமுடையதாகவிருக்குமெனில், அல்லது அத்தகைய வீழ்ச்சியானது—

(i) இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களை அதிகமான அளவில் அதிகரிப்பதன் மூலமாகவன்றி; அல்லது

(ii) நடப்புக் கொடுக்கல் வாங்கல்களைக் கொடுத்துத் தீர்ப்பதில் ரூபாவை வெளிநாட்டு நாணயங்களாக மாற்றுவதில் மட்டுப்பாடுகளை இடைவிடாது விதிப்பதன் மூலமாகவன்றி அல்லது

(iii) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாரிய ஏற்றுமதித் தொழில்களுக்குத் தகாத உதவியை அல்லது தொடர்ச்சியான உதவியை அரசாங்கம் அளிப்பதன் மூலமாகவன்றி; அல்லது

(iv) அத்தியாவசிய வியாபாரப் பொருட்களின் இறக்குமதி அளவை மட்டுப்படுத்துவதற்கெனக் கருதப்பட்ட நடவடிக்கைகளை நீடித்த காலத்திற்குப் பயன்படுத்துவதன் மூலமாகவன்றி

வேறுவகையில் தடுக்க முடியாததாகவிருக்குமெனில்; அல்லது

(ஆ) ஏற்கனவேயுள்ள சம அளவும் பெறுமதியைப் பேணிவருதலானது, நடப்புக் கணக்கில் மீதான கொடுப்பனவு நிலுவைகளில் தொடர்ச்சியான மேன்மிகையையும், இச்சட்டத்தினுல் அதிகாரமளிக்கப்பட்ட வேறு அரசாங்க நடவடிக்கையினுல் அல்லது மத்திய வங்கி நடவடிக்கைளினுல் போதிய அளவு சரிப்படுத்தப்பட முடியாததான பணஞ்சார் நடுநிலைமையின்மையையும் ஏற்படுத்துமெனில், அல்லது ஏற்படுத்தும் சாத்தியமுடைவதாகவிருக்குமெனில். அல்லது

(இ) நாட்டிடை நாணய நிதியத்தினுல் அதன் உறுப்பு நாடுகளின் நாணயங்களின் சம அளவுப் பெறுமதிகளின் ஒருசீரான விகிதாசார மாற்றங்கள் செய்யப்படுமெனில்:

அத்துடன் அத்தகையை விதப்புரையின் மேல் அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம். அத்தகைய விதப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளுங்கிணங்க (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையைத் திருத்தலாம்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை. அது வெளியீடப்பிடப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களைக்கொண்ட காலத்துக்குப் பின்னர், அக்காலத்துக்குள் தேசிய அரசுப் பேரவையினுல் அத்தகைய கட்டளை அங்கீகரிக்கப்பட்டாலொழிய, பயனில்லாதொழிதல் வேண்டும்;

ஆயின், எவ்வாருயினும், அக்கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று தேசிய அரசுப் பேரவையின் அமர்வுகள் நடைபெறவில்லையெனின், தேசிய அரசுப் பேரவையின் அடுத்த

கூட்டம் நடைபெறும் தேதியிலிருந்து பத்து நாட்களைக் கொண்ட காலத்துக்குப் பின்னர், அக்காலத்துக்குள் தேசிய அரசுப் பேரவையினால் அத்தகைய கட்டளை அங்கீகரிக்கப் பட்டாலொழிய பயனில்லாதொழிதல் வேண்டும்.";

(2) அச்சட்டத்தின் 5 ஆம் பிரிவில்—

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின் வரும் பந்தியை இடுவதன்மூலமும்:—

"(ஆ) இலங்கை ரூபாவின சம அளவுப் பெறும்தி தீர் மானிக்கப்பட்டிருக்குமெனின், இலங்கை ரூபா வின் சம அளவுப் பெறுமதியைப் பாதுகாத்தலும், நாட்டிடை நடப்புக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ரூபாவைத் தாராளமாகப் பயன்படுத்துதலும்;";

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின் வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(ஆஆ) இலங்கை ரூபாவின் சம அளவுப் பெறுமதி தீர் மானிக்கப்படவில்லையெனின், வெளிநாட்டு நாணயங்கள் தொடர்பில் இலங்கை ரூபாவின் பரிவர்த்தனை வீதத்தின் உறுதிநிலையைப் பாது காத்தல்;'';

(3) அச்சட்டத்தின் 65ஆம் பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவை இடுவதன்மூலமும்:—

"நாட்டிடை நாணயக் கொள்கையைத் தீர்மானித்தலை ஆளுகின்ற கோட்பாடுகள்

65. நாணயச் சபை அதனது நாட்டிடை நாணயக் கொள்கைகளைத் தீர்மானித்தலில், இலங்கை ரூபாவின் சம அளவுப் பெறுமதியைப் பேணுவதற்கு எத்தனித் தல் வேண்டும், அல்லது 3 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய சம அளவுப் பெறுமதி பற்றிய தீர்மானம் எதுவும் செய்யப்படாதவிடத்து, நாட்டில் நிலவும் உள்ளார்ந்த போக்குகளோடு ஏற்புடையனவான அத்தகைய பரி வர்த்தனை ஒழுங்குகளைப் பேணுதல் வேண்டும் என்ப துடன், நாட்டிடை நடப்புக் கொடுக்கல் வாங்கல் களுக்கென அதன் தாராளமான பாவனையை உறுதிப் படுத்தும் வண்ணம் வேறு நாணயங்களோடு அதன் பரிவர்த்தனையை அவ்வாறு தொடர்புபடுத்துதலும் வேண்டும்.'';

(4) அச்சட்டத்தின் 66 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(2) நாணயச் சபையானது, நாட்டிடை ஒதுக்குநிதியத்தின் போதுமான தன்மையை நிருணயிக்கும்போது, இலங்கையினால் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டுச் செலாவணி வரவுகள், கொடுப்பனவுகள் ஆகியவற்றின் மதிப்பீடுகளாலும், வெளி நாட்டு நாணயங்களில் மத்திய வங்கியின் சொந்தப் பொறுப்பு

களினது அளவாலும் முதிர்வாலும், அத்துடன், அரசாங்கத்தினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் வேறு ஆட்களினதும் வெளிநாட்டுச் செலாவணிச் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பனவற்றின் அளவாலும் முதிர்வாலும் (அவை பற்றி அறியப்பட்டுள்ள அல்லது அவை மதிப்பிடப்படக்கூடிய அளவுவரையில்), வழிகாட்டப்படல் வேண்டும். இலங்கையின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் ஏதேனும் பாகம், நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ சிறப்புப் பற்று உரிமைகளாக அல்லது நாட்டிடை நாணய நிதியத்தினுல் விதிக்கப்பட்ட அத்தகைய வேறு பொதுப்பகு எண்ணுக அல்லது நாட்டிடைக் கொடுக்கல் வாங்கல்களில் தாராளமாகப் பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு நாணயங்களாக, மத்திய வங்கியினுல் தாராளமாக மாற்ற முடியாதவையான நாணயங்களாக வைத்திருக்கப்படும் வரையில், அல்லது அவை ஒரு நிலைப்படுத்தப்படும் வரையில், இந்நிகழ்வினையும், நாணயச் சபையானது, மத்திய வங்கியின் நாட்டிடை ஒதுக்கு நிதியத்தின் போதுமாந்தன்மையை நிருணயிக்கும்போது கவனத்திற்கெடுத்தலும் வேண்டும்.'';

(5) அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:—

''(iii) நாட்டிடை நாணய நிதியத்தின் சிறப்புப் பற்று உரிமைகள் பகுதியிலுள்ள அத்தகைய பற்று உரிமைகளின் வைத்திருக்கையில் (நாணயச் சபையினுல் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியதற்கிணங்க) அவற்றின் முழுமையுமோ அல்லது முழுமையின் அத்தகைய உச்சளவு சதவீதமோ;'':

(6) அச்சட்டத்தின் 69 ஆம் பிரிவை நீக்குவதன் மூலமும்;

(7) அச்சட்டத்தின் 72 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்துக்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும்:—

''ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள தெதுவும்' நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ சிறப்புப் பற்று உரிமைகளாக, அல்லது நாட்டிடை நாணய நிதியத்தால் விதிக்கப்பட்ட அத்தகைய வேறுபொதுப பகு எண்ணுக, அல்லது நாட்டிடைக் கொடுக்கல் வாங்கல்களில் தாராளமாகப் 'பயன்படுத்தப்படக்கூடிய வெளிநாட்டு நாணயங்களாக மத்திய வங்கியினுல் தாராளமாக மாற்றத் தக்கதல்லாத ஏதேனும் நாணயமாக, நாட்டிடை நடப்புக் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்கின்ற நோக்கத்துக்கென அத்தகைய நாணயத்துக்குப் போதுமான கோரிக்கை (உண்மையான அல்லது எதிர்பார்க்கப்படும்) உண்டென நாணயச் சபை அபிப்பிராயப்பட்டாலொழிய,

அல்லது அத்தகைய நாணயத்தைக் கொள்ளுதல், தேசிய நலனுக்கு உகந்ததெனஅமைச்சரின் ஒருப்பாட்டுடன் நாணயச் சபை தீர்மானமொன்றினைச் செய்தாலொழிய, அந்நாணயத்தைக் கொள்வனவு செய்யும்படி மத்திய வங்கியைத் தேவைப் படுத்தாது.'';

(8) அச்சட்டத்தின் 73 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், அவ்வுட் பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(ஆ) நாட்டிடை நாணய நிதியத்தின் ஓர் உறுப்புநாடல்லாத நாடொன்றின் நாணயமானது, ரூபாவுடனான அதன் சரிசம மதிப்பு அந்நாணயத்துக்கு நாட்டிடைச் சந்தைகளில் நிலவும் பரிவர்த்தனை வீதங்களின் அடிப்படையில் கணிக்கப்பட்டதாய் இருத்தல் வேண்டும்; அத்துடன், நாட்டிடைச் சந்தைகளில் கூறப்படும் வீதங்களின் இடையே வேறுபாடிருக்குமாயின், சரிசம மதிப்பினைத் தீர்மானித்தலுக்கு எவ்வீதங்களைப் பயன்படுத்தல் வேண்டும் என்பதை ஆளுநர் தீர்மானிக்கலாம்.'';

(9) அச்சட்டத்தின் 74 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(2) அவ்விடத்திலேயே நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களுக்கென (1) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படும் வீதங்கள், வெளிநாட்டு நாணயத்தாள்களினதும் நாணயக் குற்றிகளினதும் கொள்வனவுகளுக்கும் விற்பனைகளுக்கும் ஆன வீதங்களின் விடயத்தில் தவிர, (இவ்விடயத்தில் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் அல்லது அவற்றின் இடைநேர் வினைவான மேலதிகச் செலவுகளைச் சபை கவனத்திற்கெடுக்கலாம்). 73 ஆம் பிரிவின் கீழ்த் தீர்மானிக்கப்படும் சட்டப்படியான சரிசம மதிப்புகளிலிருந்து நாலரைச்சத வீதத்துக்கு அதிகமாக வேறுபடலாகாது.'';

(10) அச்சட்டத்தின் 76ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

''(1) வர்த்தக வங்கிகள் ஆகக் குறைந்த எவ்வீதத்தில் செலாவணியை அவ்விடத்திலேயே வாங்கலாம் என்பதையும் அவை எந்த உச்சளவு வீதத்தில் செலாவணியை அவ்விடத்திலேயே விற்கலாம் என்பதையும் நாணயச்சபை தீர்மானித்தல், வேண்டும். நாணச் சபை, 73 ஆம் பிரிவுக்கிணங்க நாணயமொன்றின் சட்டப்படியான சரிசம மதிப்பினைச் சான்றுப்

படுத்தியிருக்குமிடத்து, அத்தகைய நாணயத்துக்கெனத் தாபிக்கப்பட்ட உச்சவளவானவையும் ஆகக் குறைந்தவையுமான பரிவர்த்தனை வீதங்கள் அத்தகைய சரிசம மதிப்பிலிருந்து நாலரைச் சதவீதத்துக்கு அதிகமாக வேறுபடுதலாகாது.''; அத்துடன்

(11) அச்சட்டத்தின் 79 ஆம் பிரிவில்—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(1) மத்திய வங்கியினால் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ சிறப்புப் பற்று உரிமைகளாக, அல்லது நாட்டிடை நாணய நிதியத்தால் விதிக்கப்படும் அத்தகைய வேறு பொதுப்பகு எண்ணுகை அல்லது வெளிநாட்டுக் கொடுக்கல்வாங்கல்களில் தாராளமாகப் பயன் படுத்தத்தக்க வெளிநாட்டு நாணயங்களாகத் தாராளமாக மாற்றப்படக்கூடிய வெளிநாட்டு நாணயங்களில் உள்ளவையும், அத்துடன் இலங்கை ரூபா தொடர்பில் அத்தகைய நாணயங்களின் இலங்கை ரூபாவினது சம அளவுப் பெறுமதியில், அல்லது சட்டப்படியான சரிசம மதிப்பில், அல்லது மத்திய வங்கியின் பரிவர்த்தனை வீதங்களில் உண்டாகும் மாற்றங்களிலிருந்து எழுகின்றவையுமான தம்து நிகர சொத்துக்களின்மீதும் பொறுப்புக்களின்மீதும் வங்கித் தொழில் நிறுவனங்களால் பெறப்படும் மீளமதிப்பிடப்பட்ட எவையேனும் இலாபங்களும் அல்லது அவ்வங்கித் தொழில் நிறுவனங்களால் உறப்படும் மீளமதிப்பிடப்பட்ட எவையேனும் நட்டங்களும் அவற்றின் முழு அளவில் மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்படல் வேண்டும் என்பதுடன். அதற்கிணங்க வரவு வைக்கப்படலும் வேண்டும் அல்லது பற்று எழுதப்படலும் வேண்டும்.''; அத்துடன்

(ஆ) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும் :—

"வங்கித்தொழில் நிறுவனங்களால் வைத்திருக்கப்படும் வெளிநாட்டுச் செலாவணி மீதான மீளமதிப்பிடப்பட்ட இலாபங்களும் நட்டங்களும்.''.

# 1978 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மோட்டார்க் கார்கள் (கைமாற்றல்கள் மீதான வரிச்) சட்டம்

*[1978, மே மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**குறித்த சில மோட்டார்க் கார்களைக் கைமாற்றுவதன்மேல் வரியொன்றை விதிப்பதற்கும் அறவிடுவதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்.**

1. இச்சட்டம், 1978 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மோட்டார்க் கார்கள் (கைமாற்றல்கள் மீதான வரிச்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.

2. (1) இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் காரின் பதிவுசெய்யப் பட்ட முதலாவது சொந்தக்காரரான ஆள் எவரும், பதிவாளரின் எழுத்திலான அங்கீகாரத்தை முன்கூட்டியே அவர் பெற்றிருந்தாலொழிய, அத்தகைய மோட்டார்க் காரை, அத்தகைய மோட்டார்க் காரின் முதலாவது பதிவுத் தேதியிலிருந்து ஏழு ஆண்டுகளைக்கொண்ட காலமொன்றுக்குள் கைமாற்று தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் காரின் பதிவுசெய்யப்பட்ட முதலாவது சொந்தக்காரரான ஆளொருவருக்கு, அந்தக் காரின் விற்பனைதொடர்பில், 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 110ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையில் கணக் கிடப்பட்ட பணத்தொகையொன்று பதிவாளருக்குச் செலுத்தப்பட்டிருக்கு மெனின், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும் ஏற்புடைய தாதலாகாது:

ஆயின், மேலும், இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் காரின் பதிவு செய்யப்பட்ட முதலாவது சொந்தக்காரர், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், விற்பனை தவிர்ந்த வேறு வகையில் அத்தகைய மோட்டார் காரைக் கைமாற்றுவதிலிருந்து தடைசெய்யப்படுகிறாரென இப்பிரிவின் முற்போந்த ஏற் பாடுகளிலுள்ள எதுவும் வாசிக்கப்பட்டுப் பொருள்கொள்ளப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செய்யப்படும் இச் சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் காரொன்றின் கைமாற்றலொன்று, அத்தகைய கைமாற்றம் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் நடை பெறுவதாயினுஞ்சரி அல்லது அதற்குப் பின்னர் நடைபெறுவதாயினுஞ் சரி, வெற்றும் வறிதுமாதல் வேண்டுமென்பதுடன், சட்டப்பயனற்றதாலும் வேண்டும்.

3. இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் காரின் பதிவுசெய்யப் பட்ட முதலாவது சொந்தக்காரரான ஆளொருவர், உத்தேசக் கைமாற்றம் பெறுநர் என ஒரு விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆளொருவருக்கு அந்த மோட்டார்க் காரைக் கைமாற்றுவதற்கான பதிவாளரின் எழுத்திலான அங்கீகாரத்திற்கெனப் பதிவாளரால் அந்நோக்கத்துக்காக ஏற்பாடுசெய்யப்

படக்கூடியவாறுன அத்தகைய படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்கின்ற விடத்து, இச்சட்டம் ஏற்புடையதாகும். மோட்டார்க் காரைக் கைமாற்று வதன்மேல் செலுத்தப்படற்பாலதான இயைபான வரியை உத்தேசக் கை மாற்றம்பெறுநரென அவ்விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆள் பதிவாளருக்குச் செலுத்தினுல், செலுத்தினுல் மட்டுமே, பதிவாளர் அத்தகைய அங்கீகாரத்தை வழங்குதல் வேண்டும்.

4. இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் காரைக் கைமாற்றுவதன் மேல் செலுத்தப்படற்பாலதான இயைபான வரியானது பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

(அ) எரிபொருள் நிரப்பப்படாத நிலையில் அத்தகைய மோட்டார்க்காரின் எடை பதினேழு அந்தர்களை விஞ்சாதிருக்குமெனின், ஐயாயிரம் ரூபாவும்; அத்துடன்

(ஆ) எரிபொருள் நிரப்பப்படாத நிலையில் அத்தகைய மோட்டார்க் காரின் எடை பதினேழு அந்தர்களை விஞ்சுமெனின், பத்தாயிரம் ரூபாவும்.

5. இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் காரைக் கைமாற்றுவதற் கான பதிவாளரது எழுத்திலான அங்கீகாரத்திற்கென 3 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பமொன்றைச் செய்ததன்மேல், உத்தேசக் கைமாற்றம் பெறுநரென அத்தகைய விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆள், அத்தகைய மோட்டார்க் காரின் கைமாற்றத்தின் மேல் செலுத்தப்படற்பாலதான இயை பான வரியைப் பதிவாளருக்குச் செலுத்துகின்றவிடத்து எந்தக் கைமாற்றம் தொடர்பில் அத்தகைய வரி செலுத்தப்பட்டதோ அந்தக் கைமாற்றம் உண்மையில் நடைபெறவில்லையெனப் பதிவாளர் திருப்தியடைவாரெனின், அதற்கான விண்ணப்பஞ்செய்யப்படுவதன் மேல், அத்தகைய வரித்தொகையை, அதிலிருந்து ஐம்பது ரூபாப் பணத்தொகையைக் கழித்துக்கொண்டு அவ் வாளுக்குப் பதிவாளர் மீளவளித்தல் வேண்டும். அதே நேரத்தில் பதிவாளர் அத்தகைய மோட்டார்க் காரின் கைமாற்றலுக்கென அவ்வாளுக்கு அவரால் வழங்கப்பட்ட எழுத்திலான அங்கீகாரத்தை இல்லாதாக்குதலும் வேண்டும்.

6. (1) இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் கார் 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணுகக் கைமாற்றப்பட்டதன் விளைவாக அதன் உடைமை மாற்றப்பட்டுள்ளதெனப் பதிவாளருக்குத் தோன்றுகின்ற விடத்து, பதிவாளர், எழுத்திலான அறிவித்தலொன்றின் மூலம், இப்பிரிவில் "உடைமைகொண்டுள்ள ஆள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் அம்மோட்டார்க்காரை உடைமைகொண் டுள்ள ஆளுக்கு அம்மோட்டார்க்காரைக் கைமாற்றுவதற்கான பதிவாளரது எழுத்திலான அங்கீகாரத்திற்காக அம்மோட்டார்க் காரின் பதிவுசெய்யப்பட்ட முதலாவது சொந்தக்காரரால் 3 ஆம் பிரிவின் கீழ்ப் பதிவாளருக்கு விண்ணப்ப மொன்று செய்யப்பட்டிருந்தது என்றுற்போன்று. அம்மோட்டார்க் காரைக் கைமாற்றுவதன் மேலே செலுத்தப்படற்பாலதான இயைபான வரியையும், அதனேடு சேர்த்து அத்தகைய வரியின் இருபது சதவீதத்துக்குச் சமமான பணத் தொகையயான்றைக் கொண்ட தண்டத்தையும், அத்தகைய அறிவித்தல் கிடைத்த தேதியிலிருந்து ஒரு மாதகாலத்துக்குள் செலுத்தும்படி அம் மோட் டார்க் காரை உடைமைகொண்டுள்ள ஆளைத் தேவைப்படுத்தலாம்

(2) உடைமை கொண்டுள்ள ஆளொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கு அத்தகைய அறிவித்தல் அவருக்கு கிடைத்த தேதியிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் வரிசெலுத்தத் தவறியவரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரித்தொகை செலுத்தத் தவறிய வரியாக உள்ள தெனக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் செலுத்தத் தவறிய வரித் தொகையையும் செலுத்தத் தவறியவரின் பெயரையும் வதிவிடத்தையும் பற்றிய விபரங்களைக் கொண்டிருக்கின்ற சான்றிதழொன்றைப் பதிவாளர் அத்தகைய இடத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானொருவருக்கு வழங்கலாம். அதன்மேல் நீதிவான், செலுத்தத் தவறிய வரித் தொகையை அறவிடுவதற்காக அவ்வாறு வரிசெலுத்தத் தவறியவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்குக் காரணங் காட்டும்படி வரிசெலுத்தத் தவறியவரைத் தமக்கு முன்னர்த் தோன்றுமாறு கட்டளையிட்டழைத்தல் வேண்டும் என்பதுடன், போதுமான காரணம் காட்டப்படவில்லையெனின், செலுத்தத் தவறிய வரித்தொகை, அவ்வாறு வரி செலுத்தத் தவறியவர்மீது அத்தகைய நீதிவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்றெனக் கருதப்படுதலும், அதற்கிணங்க அறவிடப்படுதலும் வேண்டும் அவ்வாறு அறவிடப்படும் தொகை பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(3) உடைமை கொண்டுள்ள ஆள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அனுப்பப் பட்ட அறிவித்தலுக்கிணங்க இயைபான வரித்தொகையைச் செலுத்துகின்ற விடத்து, அல்லது உடைமை கொண்டுள்ள ஆளிடமிருந்து இயைபான வரித் தொகை (2) ஆம் உட்பிரிவின்கீழ் அறவிடப்படுமிடத்து, அத்தகைய, ஆள் அத்தகைய வரி எந்த மோட்டார்க் கார் தொடர்பில் செலுத்தப்பட்டதோ, அல்லது விடயத்துக்கேற்றவாறு, அறவிடப்பட்டதோ அந்த மோட்டார்க் காரின் புதிய சொந்தக்காரராக மோட்டார் வாகனச் சட்டத்தின் ஏற்பாடு களின் கீழ்ப் பதிவு செய்யப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்; அத்தகைய பதிவு செய்யப்பட்டதன் மேல், எந்தப் போலிக் கைமாற்றத்தின் விளைவாக அத்தகைய ஆளுக்கு உடைமை மாற்றப்பட்டதோ அந்தப் போலிக் கைமாற்றமானது, 8ஆம் பிரிவின்கீழ்க் குற்றவழக்குத் தொடுக்கும் நோக்கம் தவிர்ந்த மற்றெல்லா நோக்கங்களுக்காகவும், முன்கூட்டியே பதிவாளரின் எழுத்திலான அங்கீகாரத்தோடு செய்யப்பட்ட கைமாற்றம் ஒன்றாகவிருப்ப தாகவும், அவ்வாறு இருந்ததாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவினதும் மூன்றும் உட்பிரிவினதும் நோக்கங் களுக்காக, "வரி" என்ற சொல்லமைப்பு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப் படும் தண்டத்தையும் உள்ளடக்கும்.

7. ஆள் எவரும், பின்வருவனவற்றுள் ஒன்றுதொடர்பில் பதிவாளரைத் திருப்திப்படுத்தினாலொழிய, இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க்காரின் புதிய சொந்தக்காரராக மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய் யப்படுவதற்கு உரித்துடையவராதலாகாது:—

(அ) எந்தக் கைமாற்றத்தின் விளைவாக அவர் அத்தகைய புதிய சொந்தக்காரர் ஆகிஞரோ அந்தக் கைமாற்றம், பதிவாளரின் எழுத்திலான முன்கூட்டிய அங்கீகாரத்துடனேயே செய்யப்பட்டதென்று; அல்லது

(ஆ) எந்தக் கைமாற்றத்தின் விளைவாக அவர் அத்தகைய புதிய சொந்தக்காரர் ஆகிஞரோ அந்தக் கைமாற்றத்திற்குப் பதிவாளரின் எழுத்திலான முன்கூட்டிய அங்கிகாரம் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ்த் தேவைப்படாதென்று.

8. இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் காரின் பதிவுசெய்யப்பட்ட முதலாவது சொந்தக்காரராக உள்ளவரான எவரேனும் ஆள், 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணுக அத்தகைய மோட்டார்க் காரை போலிக் கைமாற்றம் செய்தால் அவர் இச்சட்டத்தின் கீழ்த் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரின் முன்னரான விளக்கத்தின் பின்னர்க் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்—

(அ) எரிபொருள் நிரப்பப்படாத நிலையில் அத்தகைய மோட்டார்க் காரின் எடை பதினேழு அந்தர்களை விஞ்சாதிருக்குமெனின் ஆருயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு;

(ஆ) எரிபொருள் நிரப்பப்படாத நிலையில் அத்தகைய மோட்டார்க் காரின் எடை பதினேழு அந்தர்களை விஞ்சுமெனின், பன்னிரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு,

ஆளாதலும் வேண்டும்.

9. இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் கார், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னராகவும் இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணுகவும் விற்பனை வகையில் போலியாகக் கைமாற்றப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய மோட்டார்க் கார் எந்த ஆளுக்குப் போலியாகக் கைமாற்றப்பட்டதோ அந்த ஆளினல், அந்த மோட்டார்க்காரை அவ்வாளுக்குக் கைமாற்றுவதற்காகப் பதிவாளரின் எழுத்திலான அங்கீகாரத்தைப் பெறுவதற்கென அத்தகைய மோட்டார்க் காரின் பதிவுசெய்யப்பட்ட முதலாவது சொந்தக்காரரால் இச்சட்டம் தொடங்கும் தேதிக்குப் பின்னர் விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருப்பின், செலுத்தப்படற்பாலதாயிருந்திருக்கும் இயைபான வரிக்குச் சமமான பணத்தொகையொன்றை, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் எவரேனும் ஆள் பதிவாளரிடம் செலுத்துவாரெனின், அத்தகைய மோட்டார்க் கார் எல்லா நோக்கங்களுக்காகவும், பதிவாளரது எழுத்திலான முன்கூட்டிய அங்கீகாரத்துடன் கைமாற்றப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

10. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ்ப் பதிவாளரால் திரட்டப்படும் வரிகள் யாவும் திரட்டிய நிதியத்துக்குப் பதிவாளரால் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

11. 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் X ஆம் பாகம் இத்தால் நீக்கப்படுகின்றது.

12. வேறு ஏதேனும் சட்டத்தில் முரண்படுவது எது எப்படியிருப்பினும், இச் சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கிநிற்றல் வேண்டும்.

13. இச்சட்டத்தில் —

"மோட்டார்க் கார்" என்பது, மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதேபொருளைக் கொண்டிருக்கும்;

"இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் கார்" என்பது, இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது கோத்திணைக்கப்பட்ட மோட்டார்க் காரொன்றாகவுள்ளதும், மோட்டார் வாகனச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினது நடைமுறை காரணமாக வருமான உரிமம் ஒன்று வழங்கப்பட்டதன் மேல் அது தொடர்பில் உரிமக் கட்டணம் எதுவும் செலுத்தப்படற்பாலதல்லாத மோட்டார்க் காரொன்றாகவுள்ளதும், 1970, நவம்பர் 15ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் முதன்முறையாகப் பதிவுசெய்யப்பட்டதுமான மோட்டார்க் காரொன்று என்று பொருளாகும்;

"பதிவாளர்" என்பது, மோட்டார் வாகனப் பதிவாளர் என்று, அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் என்று பொருளாகும்;

"கைமாற்றம்" என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளோடும் ஓரினச் சொல்லமைப்புகளோடும், இச்சட்டம் ஏற்புடையதாகும் மோட்டார்க் கார் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது, பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்: -

(அ) விற்பனை காரணமாக எழுகின்ற அத்தகைய மோட்டார்க் காரின் உடைமை மாற்றம்;

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர் —

(i) கொடையளிப்பின் காரணமாக அல்லது ஈடுவைப்பின் காரணமாக அத்தகைய மோட்டார்க்காரின் உடைமையில் எழுகின்ற மாற்றம்; அல்லது

(ii) எவ்வாறுயினும் விவரிக்கப்படும் ஏதேனும் உடன்படிக்கையின் அல்லது ஒழுங்கின் நியதிகளின் கீழ் பணத்துக்காக அல்லது பணத்தின் பெறுமதிக்காக அத்தகைய மோட்டார்க் கார் தொடர்பில் ஏற்படும் உடைமை மாற்றம்.

## 1978 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, ஏற்றுமதிகள் (சிறப்பு வரிச்) சட்டம்

*(1978, யூன் 22 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**1977 நவம்பர் 15/16 ஆம் தேதி நள்ளிரவுக்கு முன்னர் குறித்த சில பண்டங்களை ஏற்றுமதி செய்து அவற்றுக்கான கொடுப்பனவுகளை 1977 நவம்பர் 15/16 ஆம் தேதி நள்ளிரவன்று அல்லது அதற்கு பின்னர் இலங்கை ரூபாவில் பெறுகின்றவர்களான ஆட்கள் மீது அத்தகைய பண்டங்கள் 1977 நவம்பர் 15/16 ஆம் தேதி நள்ளிரவன்று அல்லது அதற்குப் பின்னர் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தால் அத்தகைய பண்டங்களின் மீது அத்தகைய ஆட்கள் செலுத்துவதற்கு ஆளாகவிருந்திருக்கும் ஏற்றுமதித் தீர்வையுடனும் தீர்வை வரிகளுடனும் தொடர்புறுத்தி பார்த்துக் கணிக்கப்படும் வரியொன்றை விதிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்.**

1. இச்சட்டம், 1978 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, ஏற்றுமதிகள் (சிறப்பு வரிச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. எவரேனும் ஆள் –

(அ) 1977 நவம்பர் 15/16 ஆம் தேதி நள்ளிரவுக்கு முன்னர் எவையேனும் பண்டங்களை ஏற்றுமதி செய்திருக்குமிடத்து, அத்துடன்,

(ஆ) அத்தகைய பண்டங்களுக்காக அல்லது அத்தகைய பண்டங்கள் தொடர்பில், 1977 நவம்பர் 15/16 ஆம் தேதி நள்ளிரவன்று அல்லது அதற்குப் பின்னர் இலங்கை ரூபாவில் கொடுப்பனவு பெற்றிருக்குமிடத்து, அல்லது இலங்கை ரூபாவில் வரவு பெற்றிருக்குமிடத்து, அல்லது வேறு விதத்தில் நன்மை பெற்றிருக்குமிடத்து,

அத்தகைய ஆள்—

(i) 1977 நவம்பர் 15/16 ஆம் தேதி நள்ளிரவன்று அல்லது அதற்கு பின்னர் அத்தகைய பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பின், அத்தகைய பண்டங்களின் மீது அறவிடப்படற்பாலதானதும் செலுத்தப்படற்பாலதானது ஆன ஏதேனும் ஏற்றுமதித் தீர்வையினதும் தீர்வைவரியினதும் தொகைகளின் கூட்டுமொத்தத் தொகைக்கும்; அத்துடன்

(ii) அத்தகைய பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நேரத்தில் அத்தகைய பண்டங்களின் மீது அறவிடப்பட்டுச் செலுத்தப்பட்டவையான ஏதேனும் ஏற்றுமதித் தீர்வையினதும் தீர்வை வரியினதும் தொகைகளின் கூட்டுமொத்தத் தொகைக்கும்,

இடையே உள்ள வித்தியாசத்துக்குச் சமமான அத்தகைய தொகையிலான வரியொன்றுக்கு ஆளாதல் வேண்டும்; அது இதனகத்துப் பின்னர் ''வரி'' என்று குறிப்பீடு செய்யப்படும்:

ஆயின், எவ்வாருயினும், 1977 நவம்பர் 15/16 ஆம் தேதி நள்ளிரவுக்கு முன்னர் எவையேனும் பண்டங்களை ஏற்றுமதி செய்து அத்தகைய பண்டங்களுக்காக அல்லது அத்தகைய பண்டங்கள் தொடர்பில் 1977 நவம்பர் 15/16 ஆம் தேதி நள்ளிரவன்று அல்லது அதற்கு பின்னர் இலங்கை ரூபாவில் கொடுப்பனவு பெற்றவரான, அல்லது இலங்கை ரூபாவில் வரவு பெற்றவரான, அல்லது வேறு விதத்தில் நன்மை பெற்றவரான ஆளோருவர், அத்தகைய பண்டங்களில் ஏற்றுமதியிலிருந்து அத்தகைய ஆளுக்குத் திரளக் கூடிய வெளிநாட்டுச் செலாவணிவை வர்த்தக வங்கியொன்று கொள்வனவு செய்வதற்காக, 1977 நவம்பர் 15/16 ஆம் தேதி நள்ளிரவுக்கு முன்னர் அத்தகைய வங்கியோடு அத்தகைய ஆளால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றின் நியதிகளுக்கிணங்க இலங்கை ரூபாவில் கொடுப்பனவினைப் பெற்றிருப்பாரெனின், அல்லது இலங்கை ரூபாவில் வரவு பெற்றிருப்பாரெனின், அல்லது அத்தகைய நன்மை பெற்றிருப்பாரெனின், அவர் அத்தகைய வரியைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

3. வரி செலுத்துவதற்கு ஆளாகும் ஒவ்வோர் ஆளும்—

(அ) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதி; அல்லது

(ஆ) எந்தப் பண்டங்களின் ஏற்றுமதி காரணமாக வரி செலுத்துகின்ற பொறுப்பு அவருக்கு எழுகின்றதோ அந்தப் பண்டங்களுக்காக அல்லது அந்த பண்டங்கள் தொடர்பில், எத்தேதியன்று அத்தகைய ஆள் இலங்கை ரூபாவில் கொடுப்பனவைப் பெறுகின்ருரோ, அல்லது இலங்கை ரூபாவில் வரவு பெறுகின்ருரோ அல்லது வேறு விதத்தில் நம்மை பெறுகின்ருரோ அத்தேதி,

ஆகிய இரண்டு தேதிகளில் எத்தேதி பிந்தியதோ அத்தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள்—

(i) ஆணையாளர் தலைமையதிபதிக்கு அவ்வரியைச் செலுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ii) எந்த ஏற்றுமதித் தீர்வைகளுடனும் தீர்வைவரிகளுடனும் தொடர்புறுத்திப் பார்த்து வரித்தொகை கணிக்கப்படுகிறதோ அந்த ஏற்றுமதித் தீர்வைகள், தீர்வைவரிகள் என்பன பற்றிய விபரங்களைத் தருகின்ற விபரத் திரட்டு ஒன்றையும் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

4. (1) இச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரி அல்லது அதன் பாகம், 3 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படாத விடத்து, அத்தகைய வரி அல்லது அதன் பாகம் செலுத்தத் தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன்—

(அ) செலுத்தத் தவறிய ஆள் தனியாளாக இருப்பாரெனின் அல்லது கம்பனியாக இருக்குமெனின், அத்தகைய தனியாள் அல்லது கம்பனி, அல்லது

(ஆ) செலுத்தத் தவறிய ஆள் குழுமமொன்ருக இருக்குமெனின் அக் குழுமத்தின் பங்காளர்கள் ஒவ்வொருவரும்,

இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகச் செலுத்தத் தவறியவராகக் கருதப் படுதலும் வேண்டும்.

(2) வரியானது ஏதேனும் தொகை தொடர்பில் செலுத்தத் தவறிய தாகக் கருதப்படுகின்றவிடத்து, செலுத்தத் தவறிய தொகையின் இருபது சதவீதத்துக்குச் சமமான பணத்தொகையொன்றினைத் தண்டமாக, செலுத் தத் தவறிய தொகையுடன் சேர்த்து, அந்தச் செலுத்தத் தவறியவர் செலுத்துதல் வேண்டும்.

5. வரி செலுத்துவதற்கு ஆளாகவும் எவரேனும் ஆள் அத்தகைய வரியை 3ம் ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தவில்லையென்றோ அல்லது அத்தகைய வரியாக அவர் செலுத்தியிருக்க வேண்டிய தொகையிலும் பார்க்க குறைந்த தொகையொன் றையே அவ்வாள் செலுத்தியுள்ளாரென்றோ, மதிப்பீட்டாளர் ஒருவருக்குத் தோன்றுகின்றவிடத்து, அவர், தமது துணிவின்படி, வரியாக அத்தகைய ஆள் செலுத்தியிருக்கவேண்டிய தொகையையும் மேலதிகத் தொகையையும் மதிப்பிடலாம் என்பதுடன், அவ்வாறு மதிப்பிடப்பட்ட வரி தொகையை 4 ஆம் பிரிவின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து செலுத்துமாறு அத்தகைய ஆளை எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

6. (1) ஐந்தாம் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட மதிப்பீடொன்றின் தொகை குறித்து இன்னலுறும் எவரேனும் ஆள், அத்தகைய மதிப்பீட்டுக்கு எதிராக, அம்மதிப்பீட்டு அறிவித்தல் அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட பின் னர் முப்பது நாட்களுக்குள், ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின் மீது தமது முடிவைச் செய்தற்கு முன்னர், மேன்முறையீட்டாளர் அவரது வழக்கை நேரிலோ அல்லது அவ த்து அதிகாரம் பெற்ற பிரதிநிதி மூலமோ ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னர் எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பம் ஒன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

(3) ஆணையார் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழ் தமக்கு மேன் முறையீடொன்று செய்யப்பட்டதன் மேல், அத்தகைய மேன்முறையீடு எந்த மதிப்பீட்டுக்கு எதிராகச் செய்யப்பட்டதோ அந்த மதிப்பீட்டை உறு திப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது வெற்றுனதாக் கலாம்,

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப் பட்ட மேன்முறையீடொன்றின் மீது அவரின் முடிவால் இன்னலுறும் எவ ரேனும் ஆள், அம்முடிவுக்கு எதிராக, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், மீளாய்வுச் சபைக்கான மேன் முறையீடுகள் தொடர்பிலான அச்சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங் களுடன், இவ்வுட்பிரிவின் கீழான மேன்முறையீடொன்றுக்கும் ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் கீழ் மீளாய்வுச் சபைக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின் மீது அச்சபையின் முடிவால் இன்னலுறும் எவரேனும் ஆள், அம்முடிவுக்கு எதிராகச் சட்டப்பிரச்சினையொன்றின் மீது உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் உயர்நீதிமன்றத்திற்கான மேன்முறையீடு தொடர்பிலான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், இவ்வுட்பிரிவின் கீழான மேன்முறையீடொன்றுக்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்,

7. ஆறும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதியினுள் மதிப்பீடொன்றுக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, அல்லது மேன்முறையீட்டில் வரித் தொகையானது தீர்மானிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அம்மதிப்பீடு, அல்லது விடயத்திற்கேற்ப மேன்முறையீட்டில் குறைக்கப்பட்டவாறான, உறுதிப்படுத்தப்பட்டவாறான அல்லது அதிகரிக்கப்பட்டவாறான மதிப்பீடு, வரித்தொகை சம்பந்தப்பட்டவரையில். எல்லா நோக்கங்களுக்காகவும் முற்றானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

8. 1963 ஆம் ஆண்டின் 4 இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 109 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றாற்போன்றும், வருமானவரிக்குப் பதிலாக வரியைக் குறிப்பீடு செய்பவை என்றாற் போன்றும், அச்சட்டத்தின் வேறு ஏதேனும் பிரிவின் ஏற்பாடுகளுக்கான அப்பிரிவிலுள்ள குறிப்பீடு, இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றாற்போன்று ஏற்புடையனவாக்கப்படும் அந்த வேறு பிரிவின் ஏற்பாடுகளுக்கான குறிப்பீடு ஒன்று என்றாற்போன்றும், ஏற்புடை யனவாதல் வேண்டும்.

9. 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றாற்போன்றும், வருமானவரிக்குப் பதிலாக வரியை குறிப்பீடு செய்பவை என்றாற்போன்றும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

10. 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 111 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றாற்போன்றும், வருமானவரிக்குப் பதிலாக வரியைக் குறிப்பீடு செய்பவை என்றாற்போன்றும், அச்சட்டத்தின் வேறு ஏதேனும் பிரிவின் ஏற்பாடுகளுக்கான அப்பிரிவிலுள்ள குறிப்பீடு, இச்சட்டத்தின் குறிப்பிட்டுள்ள முறையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றாற்போன்று ஏற்புடையனவாக்கப்படும் அந்த வேறு பிரிவின் ஏற்பாடுகளுக்கான குறிப்பீடு ஒன்று என்றாற்போன்றும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

11. 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 112 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றாற்போன்றும், வருமானவரிக்குப் பதிலாக வரியைக் குறிப்பீடு செய்பவை என்றாற்போன்றும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

12. 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 113 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றாற்போன்றும், அப்பிரிவிலுள்ள வருமானவரிக்கான,

செல்வவரிக்கான அல்லது கொடைவரிக்கான குறிப்பீடு என்றுற்போன்றும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

13. 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றுற்போன்றும், வருமானவரிக்குப் பதிலாக வரியைக் குறிப்பீடு செய்பவை என்றுற்போன்றும், அச்சட்டத்தின் ஏதேனும் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுச்கான குறிப்பீடு, இச்சட்டத்திற் குறிப்பீடப்பட்டுள்ள முறையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்றுற்போன்று ஏற்புடையனவாக்கப்படும் அவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கான குறிப்பீடு ஒன்று என்றுற்போன்றும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

14. பிரிவுகள் 8, 9, 10, 11, 12, 13, என்பவற்றில் ''வரி'' என்பது 4 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டத்தையும் உள்ளடக்கும்.

15. 1963ம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ், 1978 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதி தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டிற்கு எவரேனும் ஆளின் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, 2 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆளினுல் தெலுத்தப்படுவதற்குரியதாகவுள்ளதும், அத்தகைய ஆளினுல் செலுத்தப்பட்டுள்ளதுமான வரித்தொகையானது, அச்சட்டத்தில் முரணுக எது எப்படியிருப்பினும், அத்தகைய இலாபங்களையும், வருமானத்தையும் உண்டாக்குவதில் உறப்பட்ட செலவு ஒன்றுகக் கருதப்படல் வேண்டும்.

16. இச்சட்டத்தின் கீழ் எவரேனும் ஆள் செலுத்துவதற்காளாகவுள்ள ஏதேனும் வரியிலும் பார்க்க அல்லது எவைவேனும் தண்டங்களிலும் பார்க்க மேலதிகமான தொகையைச் செலுத்தியுள்ளாரென, 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் எழுத்தில் செய்யப்படும் கோரிக்கையின் மூலம் ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படும்படி எண்பிக்கப்படின், அத்தகைய ஆள், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையைத் திரும்பப் பெறுதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயினும், இப்பிரிவிலுள்ள எதுவும், மேன்முறையீட்டிற்கான கால வெல்லையை அது நீடிப்பதாகவோ, குறைப்பதாகவோ, அல்லது வேறுவகையில் செல்லுபடியற்றதாகவுள்ள ஏதேனும் மேன்முறையீட்டைச் செல்லுபடியுள்ளதாகதாக்குவதாகவோ, அல்லது முற்றுனதும் முடிவானதுமாகவுள்ள ஏதேனும் மதிப்பீட்டை மீளாய்வு செய்வதற்கு அதிகாரமளிப்பதாகவோ வாசிக்கப்படுதல் ஆகாது அல்லது பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

17. ஆணையாளர் தலைமையதிபதி, எவரேனுமாளுக்கு எழுத்திலான அறிவித்தில் மூலம், அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறுன அத்தகைய காலத்தினுள், இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடிய வாறுன அத்தகைய விபரத் திரட்டுக்களையும் வேறு தகவலையும் கொடுத்துதவும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

18. (1) (அ) 3 ஆம் பிரிவினுல் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு விபரத் திரட்டொன்றைக் கொடுத்துதவத் தவறும்; அல்லது

(ஆ) 17 ஆம் பிரிவின் கீழ் அனுப்பப்படும் ஏதேனும் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும்; அல்லது

(இ) 3 ஆம் பிரிவின் கீழ் அல்லது 17 ஆம் பிரிவின் கீழ்க் கொடுத்துதவப்படும் விபரத்திரட்டொன்றில் பொய்யான அல்லது பிழையான கூற்று ஒன்றைத் தெரிந்து கொண்டே செய்யும்; அல்லது

(ஈ) 17 ஆம் பிரிவின் கீழ் அனுப்பப்படும் அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி யொழுகுவதில் பொய்யான அல்லது பிழையான தகவல் எதனையும் தெரிந்து கொண்டே கொடுத்துதவும்,

ஆள் எவரும், தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானெருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு, அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) தவறென்று ஆட்கள் குழுவொன்றினுல் புரியப்படுமிடத்து, அப்பொழுது—

(அ) அவ்வாட்கள் குழு கம்பனியொன்ருகயிருப்பின், அக்கம்பனியின் ஒவ்வொரு பணிப்பாளரும், அத்துடன்

(ஆ) அவ்வாட்கள் குழு குழுமொன்ருகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படல் வேண்டும்:

ஆயின், எவ்வாருயினும், அக்கம்பனியின் பணிப்பாளர் அல்லது அக்குழுமத்தின் பங்காளர், அத்தகைய தவறு தாம் அறியாதவாறு புரியப்பட்டதென, அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தாம் எல்லா ஊக்கத்தையும் செலுத்தினுரென எண்பிப்பாரெனின், அவர் அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படல் ஆகாது.

19. அமைச்சரின் கருத்துப்படி, ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழ் உறப்படும் வரியை அல்லது ஏதேனும் தண்டத்தைச் செலுத்துவதற்கு ஆளாகும் காரணத்தினுல், அத்தகைய ஆளுக்குக் கணிசமான அளவு இடர்ப்பாடு ஏற்படும் சாத்தியமுள்ளதான விடயம் எதுவும் இச்சட்டத்தை நடைமுறைபடுத்துவதில் எழுமெனின், அத்தகைய வரியை அல்லது தண்டத்தை விட்டு விடுதல் அல்லது குறைத்தல், விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டு பார்க்கும் போது நீதியானதும் ஒப்புரவானதுமாகுமென அமைச்

சர் கருதுவாரெனின், அவர் அத்தகைய வரியை அல்லது தண்டத்தை விட்டு விடலாம் அல்லது குறைக்கலாம்.

20. இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்திருலன்றி—

''மதிப்பீட்டாளர்'' என்பது 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாகும்.

''தீர்வை வரி'' என்பது சுங்கக்கட்டளைச்சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் சட்டத்திருல் அல்லது சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் தீர்வைவரி எனப் பொருளாகும்.

''வர்த்தக வங்கி'' என்பது பணச் சட்டத்தின் 127 (1) ஆம் பிரிவில் உள்ள அதே பொருளையுடையதாகும்;

''கம்பனி'' என்பது இலங்கையில் அல்லது வேறெங்கேனும் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட 'ஏதேனும் கம்பனி எனப் பொருளாகும்.

''ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாகும்;

''ஏற்றுமதி தீர்வை'' என்பது சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களின் மீது அறவிடப்படும் சுங்கத் தீர்வை எனப் பொருளாகும்;

''குழுமம்'' என்பது இலாபத்துக்காகத் தொழில் கொண்டு நடாத்தும் நோக்குடன் ஒருவரோடொருவர் பங்குடைமையிலுள்ளவர்களான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனியாட்களை, அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனியாட்களையும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டுத்தாபனங்களையும் அல்லது கம்பனிகளையும், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுவொன்று எனப் பொருளாகும்;

''பண்டங்கள் என்பது எப்பண்டங்களின் ஏற்றுமதி தொடர்பில், ஏற்றுமதியாளர், 1968 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அந்நியச் செலாவணி உரிமைச்சான்றிதழ்கள் சட்டத்தின் கீழ் அந்நியச் செலாவணி உரிமைச்சான்றிதழ்கள் எதுவும் வழங்கப்படுவதற்கு உரித்துடையவரல்லரோ அப்பண்டங்கள் எவையும் எனப் பொருளாகும்.

''ஆள்'' என்பது குழுமமொன்றையும் உள்ளடக்குவதாகக் கருதப்படல் வேண்டும்

## 1978ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, நாட்டிடை நிதிக் கூட்டுத்தாபன உடன்படிக்கை (திருத்தச்) சட்டம்

*(1978, யூலை 12ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**நாட்டிடை நிதிக் கூட டுத்தாபன உடன்படிக்கைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*1.* இச்சட்டம், 1978ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, நாட்டிடை நிதிக் கூட்டுத்தாபன உடன்படிக்கை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

2. நாட்டிடை நிதிக் கூட்டுத்தாபன உடன்படிக்கைச் சட்டத்தின் 3ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படு கிறது என்பதுடன், அது, அச்சட்டத்தின் 3அ என்னும் பிரிவாகப் பயனுறு தலும் வேண்டும்:—

"ஒப்பப் பணத்தை அதிகரித்தல்

3அ. கூட்டுத்தாபனத்தின் அதிகாரமளிக்கப் பட்ட மூலதனக் கையிருப்பு, உறுப்புரைகளின் IIஆம் உறுப்புரையின் 2ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தி யின் (ii)ஆம் உட்பந்தியினைப் பின்பற்றி அதிகரிக்கப் படுகின்ற விடத்தும், உறுப்புரைகளின் IIஆம் உறுப்புரையின் 2ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தி யின்கீழ் அம்மூலதனக் கையிருப்பின் அதிகரிப்புத் தொகையின் எந்த விகிதாசாரத்தை ஒப்பப்பண மாகச் செலுத்துவதற்கு இலங்கை உரித்துடைய தாயுள்ளதோ அந்த விகிதாசாரத்தை ஒப்பப்பண மாகச் செலுத்துவதற்கு இலங்கை முடிவுசெய் கின்றவிடத்தும், மேற்கூறிய (ஈ) என்னும் பந்தி யின்கீழ் கூட்டுத்தாபனத்தினல் முடிவுசெய்யப்படக் கூடியவாறுன அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்க அத்தகைய ஒப்பப்பணத்தைச் செலுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறுன அத்தகைய பணத் தொகையானது இலங்கையின் திரட்டுநிதியத்தி லிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.".

## 1978 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

*[1978, யூலை 21 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது ]*

### 1963 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1978 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது ;—

(1) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(v) 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் ஆதனத்தின் சொந்தக்காரர் மரணமடைவதன் மேல் அவ்வாதனம் ஆள் எவருக்கும் வந்துறுதல்,

(vi) 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் ஆதனத்தின் சொந்தக்காரரினால் வேறு எவரேனும் ஆளுக்கு அவ் ஆதனம் நன்கொடை அளிக்கப்பட்டதன் மேல் இடம்பெறும் வந்துறுதல், அத்துடன்

(vii) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதும், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு அதனுடன் உடன்படிக்கையொன்றைச் செய்திருக்கின்றதுமான ஏதேனும் கம்பெனியில் பங்குகளாவிருந்து ஏதேனும் ஆதனத்தின் சொந்தக்காரரிடமிருந்து வேறுஎவரேனும் ஆளுக்கு விற்பனை என்ற வகையாக, நன்கொடையாக அல்லது வேறு வகையாக அந்த ஆதனம் எதுவும் வந்துறுதல்.";

(2) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில் —

(அ) அப்பந்தியின் (vi) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(vi) (அ) ஆதனமானது நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றின் கீழ் பயன்பெறுநர் என்ற தன்மையில் அத்தகைய ஆளுக்கு அந்த நப்பிக்கைப் பொறுப்பின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரினால் கைமாற்றப்படுவதன் மூலம் கொள்ளப்பட்டுள்ள விடத்து, அல்லது அந்த ஆதனம் மரணமடைந்தவரின் மரணச் சொத்தினை நிருவகிக்கும் நிறைவேற்றுநரால் அம்மரணமடைந்தவரின்

மரண சாதன வழியுரிமையாளர் அல்லது மரண சாதன மில்லா வழியுரிமையாளர் என்ற தன்மையில் அத்தகைய ஆளுக்குக் கைமாற்றப்படுவதன் மூலம் கொள்ளப்பட்டுள்ளவிடத்து, அவ்வாறு கொள்ளப்படும் நேரத்தில் அவ்வாதனத்தின் பெறுமதியானது, அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளரினால் அல்லது நிறைவேற்றுநரினால் கொள்ளப்பட்ட தேதி 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதிக்கு முந்திய தேதியாகவிருப்பின். 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அவ்வாதனத்தின் சந்தைப் பெறுமதிக்குச் சமமானவொரு தொகையாக விருத்தல் வேண்டும்; அத்துடன் அவ்வாறு கொள்ளப்பட்ட தேதி 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியாக அல்லது அதற்கு பிந்திய தேதியாகவிருப்பின், அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது நிறைவேற்றுநர் அவ்வாதனத்தின் உடைமையைப்பெற்ற நேரத்தில் அவ்வாதனத்தின் சந்தைப் பெறுமதிக்குச் சமமானவொரு தொகையாக விருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வாதமானது, 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இதனகத்துப்பின்னர் இவ்வுட்பந்தியில் ''நன்கொடையளிப்பவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான வேறு எவரேனும் ஆளினால் அளிக்கப்பட்ட நன்கொடை என்ற வகையாக அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டுள்ளவிடத்தும், அவ்வாறு கொள்ளப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலத்தினுள் அத்தகைய ஆதனம் இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆளினால் கைமாற்றப்பட்டுள்ளவிடத்தும், கொள்ளப்பட்ட நேரத்தில் அவ்வாதனத்தின் பெறுமதியானது

(i) அவ்வாதனம் 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னர் நன்கொடையளிப்பவரினால் கொள்ளப்பட்டிருப்பின், 1957ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அவ்வாதனத்தின் சந்தைப் பெறுமதியின், அல்லது

(ii) 1957 ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் நன்கொடையளிப்பவரினால் அவ்வாதனம் கொள்வனவு செய்யப்பட்டிருப்பின், அதன் கொள்வனவு விலையின், அல்லது

(iii) 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், அவ்வாதனம் நன்கொடையளிப்பவரினால் கொள்வனவு மூலமாகவன்றி வேறுவகையாகக் கொள்ளப்பட்டிருப்பின், அவ்வாதனம் அத்தகைய நன்கொடையளிப்பவரினால் கொள்ளப்பட்ட நேரத்தில் அவ்வாதனத்தின் சந்தைப் பெறுமதியின்,

கூட்டு மொத்தத்துக்கும் அத்துடன் நன்கொடை என்ற வகை யாகலன்றி விற்பனை என்ற வகையாக அவ்வாதனத்தை நன் கொடையளிப்பவர் கைமாற்றியிருப்பின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அவர் உரித்துடையவராகவிருக்கக் கூடிய ஏதேனும் கழிவுத்தொகையின் கூட்டு மொத்தத்துக்கும் சம்மானவொரு தொகையாகவிருத்தல் வேண்டும்;' அத் துடன்

(ஆ) அப்பந்தியின் (viii) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(viii) (அ) சந்தைப் பெறுமதிக்குக் குறைவான விலையொன்றுக்கு 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கம்பனியொன்றில் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட பங்குகளை அல்லது அத்தேதி யன்று அல்லது அதன்பின்னர் வழங்கப்பட்ட மிகையூதி யப் பங்குகளை, அல்லது

(ஆ) சந்தைப் பெறுமதிக்குக் குறைவான விலையொன்றுக்கு 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவருக்கு வழங்கப்பட்ட பங்கு களையும் அத்தேதியன்று அல்லது அதன் பின்னர் அவ ருக்கு வழங்கப்பட்ட மிகையூதியப் பங்குகளையும், அத்துடன்

(இ) (அ) என்னும் உட்பந்தியில் அல்லது (ஆ) என்னும் உட் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பங்குகள் அக்கம் பனியிலுள்ள ஏனைய எப் பங்குகளை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு வழங்கப்பட்டுள்ளனவோ அப் பங்குகளையும்,

உள்ளடக்குவதாகவும், அல்லது எந்நேரத்திலும் உள்ளடக்கி யிருந்ததாகவுமிருப்பதுடன், அக்கம்பனியில் அத்தகைய ஆளுக் குரிய வைத்திருக்கையொன்றின் ஒரு பங்காக அவ்வாதனம் அமைந்துள்ளவிடத்து அல்லது அமைகின்றவிடத்து அவ்வாத னம்அத்தகைய ஆளினுல் கொள்ளப்பட்ட நேரத்தில் அதன் பெறுமதியானது (x) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய—

(i) அவ்வைத்திருக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பனவும், 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்டதுமான அத்தகைய பங்கு களின் 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதி யன்றுள்ள சந்தைப் பெறுமதியின்,

(ii) அவ்வைத்திருக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பனவும், 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஒன்றில் குறித்தொதுக்கல் மூலமாக அல்லது கொள்வனவு மூலமாக அவரால் கொள்ளப்பட்டுள்ளனவுமான அத்தகைய பங்குகளைக் கொள்ளுவதற்கான செலவின்,

(iii) அவ்வைத்திருக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பனவும், 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்வனவு மூலமாகவன்றி வேறு வகையாக அவரால் கொள்ளப்பட்டுள்ளனவு மான (சந்தைப் பெறுமதிக்குக் குறைவான விலையில், 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவருக்கு வழங்கப்பட்ட பங்குகளை அல்லது அவருக்கு வழங்கப்பட்ட மிகையூதியப் பங்குகளை உட்படுத்தாத) அத்தகைய பங்குகளைக் கொள்ளும் தேதியன்று உள்ள சந்தைப் பெறுமதியின்,

கூட்டு மொத்தத்தினை அவ்வைத்திருக்கையில் உள்ளடக்கப் பட்ட அல்லது உள்ளடக்கப்பட்டிருக்கும் பங்குகளின் மொத்த எண்ணிக்கையினுல் பிரித்துவரும் தொகைக்குச் சமமான வொரு தொகையாக விருத்தல் வேண்டும்; அத்துடன் அதற் கிணங்க, ஆதனம், ஒன்றுக்கு மேற்பட்ட பங்குகளைக் கொண் டுள்ளவிடத்து, அத்தகைய ஆளினுல் அவ்வாதனம் கொள்ளப் பட்ட நேரத்தில் அதன் பெறுமதியானது இவ்வுட்பந்தியின் மேற்கூறிய ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள ஒரு பங்கின் பெறுமதியினை அவ்வாதனத்தை ஆக்கும் பங்கு களின் எண்ணிக்கையினுல் பெருக்கிவரும் பெறுமதிக்குச் சம மானவொரு தொகையாகவிருத்தல் வேண்டும்; ''

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட் பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

'' (3) மூலதன வருவாய்த் தொகையானது பின்வரும் கழிவுகளைச் செய்த தன் பின்னர் கணிக்கப்படல் வேண்டும் :—

(அ) அத்தகைய வருவாய் எக்கொடுக்கல் வாங்கலின் பயனுகப் பெறப்பட்டதோ அக் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுவதற்கு நேர் முன்னர், அவ் ஆதனத்தின் சொந்தக்காரராகவுள்ள ஆளினுல் அந்த ஆதனம் கொள்ளப்படுவது தொடர்பில் மட் டும் 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்படும் (கொள்வனவு விலை ஏதேனுமிருப் பின் அது தவிர்ந்த) ஏதேனும் செலவினம்;

(ஆ) அந்த ஆதனத்திற்கான எவையேனும் சீர்திருத்தங்களை, சேர்க் கைகளை அல்லது மாற்றங்களைச் செய்வதில் மேற்சொல்லப் பட்ட சொந்தக்காரரினுல் 1957 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேறியன்று அல்லது அதன் பின்னர் உறப்படும் செல வினம் தொடர்பில் 10 ஆம் பிரிவின்கீழ் அல்லது 53 ஆம் பிரி வின்கீழ் அல்லது 53 அ, அல்லது 53 ஆ என்னும் பிரிவின்கீழ் கழிவு எதுவும் அனுமதிக்கப்படாதிருப்பின், அத்தகைய செலவினம்;

(இ) அத்தகைய வருவாய்த் தொகை எக்கொடுக்கல் வாங்கலின் பயனுகப் பெறப்பட்டுள்ளதோ அக்கொடுக்கல் வாங்கல்

தொடர்பில் மட்டும் மேற்சொல்லப்பட்ட சொந்தக்காரரினால் உறப்பட்ட செலவினம்; அத்துடன்

(ஈ) 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இடம்பெறும் ஏதேனும் அசைவற்ற ஆதனச் சொத்தாண்மை மாற்றமொன்றின் விடயத்தில்—

(i) சொத்தாண்மை மாற்றமானது, மூலதன வருவாய்த் தொகையை எந்த ஆள் பெறுகின்றாரோ அந்த ஆளினால் அவ்வாதனம் கொள்ளப்பட்டதன் பின்னர் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் பதினைந்து ஆண்டுகளுக்கு மேற்படாததுமான காலப்பகுதியினுள் இடம்பெறுமிடத்து, பின்வருவனவற்றின் இடையிலான வித்தியாசத்தின் இருபத்தைந்து சத வீதத்துக்குச் சமமானவொரு பணத்தொகை, அத்துடன்

(ii) சொத்தாண்மை மாற்றமானது, மூலதனவருவாய்த் தொகையை எந்த ஆள் பெறுகின்றாரோ அந்த ஆளினால் அவ்வாதனம் கொள்ளப்பட்டதன் பின்னர்ப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் இடம்பெறுமிடத்து, பின்வருவனவற்றின் இடையிலான வித்தியாசத்தின் ஐம்பது சத வீதத்துக்குச் சமமானவொரு பணத்தொகை, அதாவது—

(அ) அந்த ஆளினால் அவ்வாதனம் கொள்ளப்பட்ட நேரத்தில் 3ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட அவ்வாதனத்தின் பெறுமதி; அத்துடன்

(ஆ) அவ்வாறு சொத்தாண்மை மாற்றப்பட்ட நேரத்தில் அவ்வாதனத்தின் பெறுமதி (அதிலிருந்து (அ) அல்லது (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் செலவினத்தைக் கழித்த பின்னர்).''

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (அஇ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"(அஇ) இலங்கைக் குடியரசின் சனாதிபதி என்ற பதவியிலிருந்து எவரேனும் ஆளுக்கு எழும் வேதனாதிகளும், ஒய்வூதியமும் வேறு ஏதேனும் நன்மையும்;"

(2) அவ்வுட்பிரிவின் (அஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(அஉ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு எக் கம்பனியுடன் உடன்

படிக்கையொன்று செய்துள்ளதோ அக்கம்பனியொன்றின் இலாபங்களும் வருமானமும் எக்காலப்பகுதியின்போது அவ்வுடன்படிக்கையின் நியதிகளின் கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனவோ அக்காலப்பகுதியின்போது அல்லது அதன் பின்னர் ஓராண்டு காலத்தினுள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட அக்கம்பனியின் இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து அக்கம்பனியினால் எவரேனும் ஆளுக்குச் செலுத்தப்படும் ஏதேனும் பங்கிலாபம்;

(அஊ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு எக்கம்பனியுடன் உடன்படிக்கையொன்று செய்துள்ளதோ அந்த ஏதேனும் கம்பனியினால் இலங்கையில் வதிபவரல்லாத எவரேனும் ஆளுக்கு 1978 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செலுத்தப்படும் ஏதேனும் பங்கிலாபம்;

(அஎ) உலக உல்லாசப்பிரயாண ஒழுங்கமைப்பின் வருமானம்;

(அஏ) உலக உல்லாசப்பிரயாண ஒழுங்கமைப்பினால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் தனியாளின் அலுவலக முறையான வேதனங்கள்:

(அஐ) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவை எனவறியப்படுவதும், சட்டக்கல்விப் பேரவைக்கட்டளைச்சட்டத்தினால் தாபிக்கப்பட்டதுமான கூட்டுத்தாபனத்தின் வருமானம்; "

(3) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"(எ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதவரும், 6 ஆம் பிரிவு எக்கூட்டுத்தாபனத்திற்கு ஏற்புடையதாகின்றதோ அக்கூட்டுத்தாபனமொன்றினால், அல்லது அப்பிரிவு எப்பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடையதாகின்றதோ அப்பொறுப்பு முயற்சியின் உரிமையாளரினால், அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு எத்தொழில் முயற்சியுடன் உடன்படிக்கை செய்துள்ளதோ அத்தொழில் முயற்சியாகவுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியினால் விடயத்திற்கேற்ப அக்கூட்டுத்தாபனத்தின் அல்லது பொறுப்பு முயற்சியின் நோக்கங்களுக்காக, 1958 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு வேலைக்கமர்த்தப்பட்டிருக்கின்றவருமான எவரேனும் அறிவியலாளரின், தொழில்நுட்பவல்லுநரின், நிபுணரின் அல்லது ஆலோசகரின் ஊழிய வருமானமும் இலங்கையில் எழுந்தவையல்லாத வேதனங்களும்; எவ்வாறாயினும், அத்தகைய விலக்களிப்பானது, அத்தகைய கூட்டுத்தாபனத்தில் அல்லது பொறுப்பு முயற்சியில் அத்தகைய அறிவியலாளரின், எந்திரவியலாளரின், நிபுணரின் அல்லது ஆலோசகரின் ஊழியம் இல்லாதொழியும் தேதி

யன்று, அல்லது அக்கூட்டுத்தாபனம் அல்லது அப்பொறுப்புமுயற்சி தொடர்பில், விடயத்திற்கேற்ப, 6 ஆம் பிரிவின் மூலம் அல்லது மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் மூலம் வழங்கப்பட்ட வரிவிலக்களிப்பானது எத்தேதியில் முடிவடைகின்றதோ, அத்தேதி யன்று, இவற்றுள் எது முந்தியதோ அத்தேதியன்று, முடிவடைதல் வேண்டும்;'';

(4) அவ்வுட்பிரிவின் (எஎஎ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்: -

''(எஎஎ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதவரும், தோதான அமைச்சரின் விதப்புரையின் மீது இப்பிரிவின் நோக்கங்களுக்காகக் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியென அவ்வறிவித்தல் மூலம் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் வெளிப்படுத்தப் பட்ட அத்தகைய ஏதேனும் பொறுப்புமுயற்சியின் உரிமையாளரினால், 1968 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு வேலைக்கமர்த் தப்பட்டிருக்கின்றவருமான எவரேனும் அறிவியலாளரின், தொழில் நுட்பவல்லுநரின், நிபுணரின் அல்லது ஆலோசகரின் ஊழிய வருமானமும் இலங்கையில் எழுந்தவையல்லாத வேதனாதிகளும்; எவ் வாறாயினும், அத்தகைய விலக்களிப்பானது, அவ்வாறு அங்கீகரிக்கப் பட்ட பொறுப்பு முயற்சியில் அத்தகைய அறிவியலாளரின், தொழில்நுட்பவல்லுநரின், நிபுணரின் அல்லது ஆலோசகரின் ஊழியம் இல்லாதொழியும் தேதியன்று அல்லது அத்தகைய பொறுப்புமுயற்சி அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சியொன்றாக இல்லாதொழியும் தேதியன்று, இவற்றுள் எது முந்தியதோ அத்தேதி யன்று, முடிவடைதல் வேண்டும்;'';

(5) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:—

''(க) 54 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் மூலம் இலங்கையில் வதிபவரெனக் கருதப்படும் எவரேனும் தனியாளுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏதேனும் வெளிநாட்டுப் படியும் அல்லது பிரதிநிதித்துவப் படியும், ஏதேனும் காலப் பகுதிக்கு இலங்கைக்கு வெளியே வேலைக்கமர்த்தப்பட்டிருக்கின்ற வேறு எவரேனும் தனியாளினால் பெறப்படுவதும், ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி வெளிநாட்டுப்படிக்குச் சம்மானது மான ஊழியத்திலிருந்து வரும் இலாபங்களின் அத்தகைய பாகமும்;'';

(6) அவ்வுட்பிரிவின் (பஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(பஇ) இலங்கையில் வதியாதிருக்கும் காலப்பகுதியின்போது எவரேனும் ஆளுக்கு இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் ஏதேனும் வர்த்தக வங்கியில் அவரால் அல்லது அவர் சார்பில் தொடங்கப்பட்ட ஏதேனும் கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் அவரது வரவில் இருக்கும் பணங்களின் மீது திரளும் வட்டி;"; அத்துடன்

(7) அவ்வுட்பிரிவின் (ம) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(மம) மீன்பிடிப் படகுகளையும், கடற்பொறிகளையும், மீன் பிடிச் சாதனங்களையும் வேறு மீன்பிடி உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கான மானியமாகக் கடற்றொழில் அமைச்சினால் எவரேனும் ஆளுக்குக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத் தொகை;

(மமம) 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையினால் எவரேனும் ஆளுக்கு மானியமாக 1977ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை;"

5. முதன்மைச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை, முறையே அச்சட்டவாக்கத்தின் 6ஆ, 6இ, 6ஈ, 6உ என்னும் பிரிவுகளாகப் பயனுடையனவாதலும் வேண்டும்:—

"மீன்பிடித் தொழிலும் விலங்கு வேளாண்மையிலும் கமத்தொழிலிலும் ஈடுபட்டுள்ள குறித்த சில கம்பனிகளின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் விலக்களித்தல்.

6 ஆ. (1) இப்பிரிவு, 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கூட்டிணைக்கப்பட்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதும் அத்தேதியன்று அல்லது அதன்பின்னர் இதனகத்துப் பின்னர் குறித்துரைக்கப்படும் பொறுப்பு முயற்சிகளுள் ஒன்றினை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைக் கொண்டு நடாத்துவதற்குத் தொடங்கியுள்ளதும், அதனை அல்லது அவற்றைக் கொண்டு நடாத்துவதில் மட்டுமே ஈடுபட்டுள்ளதுமான ஏதேனும் கம்பனிக்கு ஏற்புடையதாதல் வேண்டும்: அதாவது –

(அ) கரைக்கண்மையில் அல்லது ஆழ்கடலில் மீன் பிடித்தலுக்கான பொறுப்பு முயற்சியொன்று,

(ஆ) கரைக்கண்மையில் அல்லது ஆழ்கடலில் மீன் பிடித்தலுக்கானதும், அத்தகைய ஏதேனும் முயற்சியிலிருந்து பெறப்படும் பொருட்களைப் பதப்படுத்துவதற்கானதுமான பொறுப்பு முயற்சியொன்று.

(இ) விலங்கு வேளாண்மைக்கான பொறுப்பு முயற்சியொன்று அல்லது

(ஈ) தேயிலை, இறப்பர், தெங்கு அல்லது நெல் என்பன தவிர்ந்த வேறு தாவரங்கள், புல்லின மரங்கள், மரங்கள், செடிகள் அல்லது உணவு வகைகள் ஆகியவற்றைக் கொண்டு நிலத்தைப் பயிர் செய்வதற்கானதும் அவ்வாறு பயிர் செய்தமையினால் பெறப்பட்ட பொருட்களைப் பதப்படுத்துவதற்கானதுமான பொறுப்பு முயற்சியொன்று;

(உ) தேயிலை, இறப்பர், தெங்கு அல்லது நெல் என்பன தவிர்ந்த வேறு தாவரங்கள், புல்லின மரங்கள், மரங்கள், செடிகள் அல்லது உணவு வகைகள் ஆகியவற்றைக் கொண்டு நிலத்தைப் பயிர் செய்வதற்கான பொறுப்பு முயற்சி :

ஆயினும், இப்பிரிவு, பின்வருவனவற்றைக் கொண்டு நடாத்தும் ஏதேனும் கம்பெனிக்கு ஏற்புடையதாதல் ஆகாது :—

(i) 1977, நவம்பர் 15 ஆம் தேதிக்கு முன்னர் உளதாயிருந்த பொறுப்பு முயற்சி யொன்று, அல்லது

(ii) 1977, நவம்பர் 15 ஆம் தேதிக்கு முன்னர் உளதாயிருந்த ஏதேனும் தொழிலைக் கூறுபடுத்துவதன் மூலம் அல்லது மீள வமைப்பதன் மூலம் அமைக்கப்பட்டுள்ள பொறுப்பு முயற்சி யொன்று.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய பொறுப்பு முயற்சியிலிருந்து அல்லது பொறுப்பு முயற்சிகளிலிருந்து அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கம்பனியினால் பெறப்படுபவையும், இச்சட்டத்தின் 3 (1) (அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட அக்கம்பனியினால் பெறப்படுபவையுமான (மூலதனச் சொத்துக்களின் விற்பனை மூலம் பெறப்படும் இலாபம் அல்லாத) அக்கம்பனியின் இலாபங்களும் வருமானமும், அக் கம்பனி கூட்டிணைக்கப்பட்ட தேதியன்று தொடங்கி 1983 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு வருமானவரியினின்றும் விலக்களிக்கப்பட்டனவாதல் வேணடும.

6இ. (1) பண்டங்களை அல்லது வியாபாரப் பொருட்களை இலங்கையில் தயாரிப்பதற்கென 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கப்பட்டதும், அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஏதேனும் பொறுப்பு முயற்சி—

(அ) நெல் அரைப்பதற்கான பொறுப்பு முயற்சியொன்று அல்லதெனவும்; அத்துடன்

(ஆ) முன்னரே உளதாயிருந்த ஏதேனும் தொழிலைக் கூறுபடுத்தியதன் மூலம், மீளவமைத்ததன் மூலம் அல்லது கொள்ளுதல் செய்ததன் மூலம் அமைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியொன்று அல்லதெனவும்; அத்துடன்

(இ) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட்ட தயாரிப்பு அல்லதுஉற்பத்திகொண்டுநடாத்தப்படும் இடம் மாநகரசபைப் பிரதேசத்தின் நிருவாக எல்லைகளுக்கு வெளியே அமைந்துள்ளதெனவும்,

வரி மதிப்பீட்டாளர் திருப்திப்படுவாரெனில், அப்பொறுப்பு முயற்சிக்கு இப்பிரிவு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய முயற்சியினது இச்சட்டத்தின் 3 (1) (அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட (அப்பொறுப்பு முயற்சியின் மூலதனச் சொத்துக்களின் விற்பனை மூலம் பெறப்படும் எவையேனும் இலாபங்களும் வருமானமும் அல்லாத) இலாபங்களும் வருமானமும் (3) ஆம் உட்பிரிவினதும் (4) உட்பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைய, அப்பொறுப்பு முயற்சி தொடங்கப்பட்ட தேதியன்று தொடங்கி 1983 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு வருமான வரியினின்றும் விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும்.

(3) 1978 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குவதும், ஆனல் 1984 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதிக்கு முந்தியதுமான ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு நேர் முந்திய ஆண்டின்போது எந்நேரத்திலும், அத்தகைய பொறுப்பு முயற்சியின் மூலதனம் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து, அத்தகைய நேர்முந்திய ஆண்டில் எழும் அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் அம்மதிப்பீட்டாண்டிற்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் ஆகாது.

(4) ஏதேனும் மதிப்பிட்டாண்டிற்கு, அம்மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டிற்கு அப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் வருமானவரியினின்றும் விலக்களித்தலானது—

(i) அத்தகைய நேர்முந்திய ஆண்டு முழுவதும் அப்பொறுப்பு முயற்சி உளதாயிருந்திருக்குமிடத்து, ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றவையும், அத்துடன்

(ii) அத்தகைய நேர்முந்திய ஆண்டின் ஒரு பகுதியில் மட்டுமே அத்தகைய பொறுப்பு முயற்சி உளதாயிருந்திருக்குமிடத்து, அத்தகைய பொறுப்பு முயற்சி உளதாயிருந்த அத்தகைய நேர்முந்திய ஆண்டிலுள்ள நாட்களின் எண்ணிக்கை அவ்வாண்டிலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை எப்பணத்தொகை ஓர் இலட்சம் ரூபாவுக்குக் கொண்டுள்ளதோ அத்தகைய பணத்தொகையை விஞ்சுகின்றவையும்,

ஆன அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகத்திற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(5) இப்பிரிவில் பொறுப்பு முயற்சியொன்று தொடர்பில் "மூலதனம்" என்பது அப்பொறுப்பு முயற்சியில் பயன்படுத்தப்படு

வதற்கென வைத்திருக்கப்படும் அதன் எவையேனும் இலாபங்களைக் கழித்த பின்னர்—

(அ) அப்பொறுப்பு முயற்சியின், ஏதேனும் காணியின், கட்டடத்தின், பொறித்தொகுதியின், எந்திரத் தொகுதியின், அத்துடன் பொருத்திகளின் கொள்விலையினதும், அத்துடன்

(ஆ) அப்பொறுப்பு முயற்சியின் ஏனைய சொத்துக்களினதும் பெறு மதியினதும்,

கூட்டுமொத்தமெனப் பொருளாகும்.

6ஈ. (1) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதற்கு அமைய, வீடுகளின் நிர்மாணத்திற்கும் விற்பனைக்குமெனத் தேசிய வீடமைப்பு ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சி யொன்றைக் கொண்டுநடாத்தும் எவரேனும் ஆள், 1977ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய ஆளினால் அதன் நிர்மாணவேலைகள் தொடங்கப்பட்டதான ஏதேனும் வீட்டை அல்லது மாடிவீட்டை விற்குமிடத்தும் அத்தகைய விற்பனை யானது அவ்வீட்டின் அல்லது மாடிவீட்டின் முதலாவது விற்பனையாக விருக்குமிடத்தும்—

(அ) அத்தகைய வீட்டின் அல்லது மாடிவீட்டின் தளப்பரப்பு ஐந்நூறு சதுர அடிகளுக்கு மேற்படாவிடின், அத்தகைய விற்பனையினின்று எழும் இலாபங்கள், வருமானம் என்பன வற்றின் முழுமையும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப் படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய வீட்டின் அல்லது மாடிவீட்டின் தளப்பரப்பு ஐந்நூறு சதுர அடிகளுக்கு மேற்பட்டும், ஆனால் ஆயிரத்து இருநூற்றைம்பது சதுர அடிகளுக்கு மேற்படாமலுமிருப்பின், அத்தகைய விற்பனையினின்று எழும் இலாபங்களினதும் வரு மானத்தினதும் எழுபத்தைந்து சதவீதம் வருமான வரியி லிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும், அத்துடன்

(இ) அத்தகைய வீட்டின் அல்லது மாடிவீட்டின் தளப்பரப்பு ஆயிரத்து இருநூற்றைம்பது சதுர அடிகளுக்கு மேற்பட்டும், ஆனால் இரண்டாயிரம் சதுர அடிகளுக்கு மேற்படாமலு மிருப்பின், அத்தகைய விற்பனையினின்று எழும் இலாபங் களினதும் வருமானத்தினதும் ஐம்பது சதவீதம் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :

ஆயினும்—

(அ) அத்தகைய விற்பனையானது, மாநகரசபைப் பிரதேசத்தில் அல்லது நகரசபைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதும், அதனுடன்இணைந்துள்ள காணியானது பத்துப்பேர்ச்சுகளுக்கு மேற்படவுள்ளதுமான வீடொன்று தொடர்பிலானதாக விருக்குமிடத்து, பத்துப் பேர்ச்சுகளுக்கு மேற்படவுள்ளதான

இணைந்துள்ள காணியின் அத்தகைய பாகத்தின் விற்பனையினால் பெறப்பட்டதென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படும் அத்தகைய விற்பனையினின்று எழும் இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகமும்,

(ஆ) அத்தகைய விற்பனையானது, மாநகரசபைப் பிரதேசம் அல்லது நகரசபைப் பிரதேசம் தவிர்ந்த வேறு ஏதேனும் பிரதேசத்தில் அமைந்துள்ளதும். அதனுடன் இணைந்துள்ள காணியானது இருபது பேர்ச்சுகளுக்கு மேற்படவுள்ளதுமான வீடொன்று தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, இருபது பேர்ச்சுகளுக்கு மேற்படவுள்ளதான இணைந்துள்ள காணியின் அத்தகைய பாகத்தின் விற்பனையினால் பெறப்பட்டதென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படும் அத்தகைய விற்பனையினின்று எழும் இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகமும்,

(இ) அத்தகைய விற்பனையானது மாநகரசபைப் பிரதேசத்தில் அல்லது நகரசபைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதும், அதனுடன் இணைந்துள்ள காணியானது ஐந்து பேர்ச்சுகளுக்கு மேற்படவுள்ளதுமான மாடிவீடொன்று தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, ஐந்து பேர்ச்சுகளுக்கு மேற்படவுள்ளதான இணைந்துள்ள காணியின் அத்தகைய பாகத்தின் விற்பனையினால் பெறப்பட்டதென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படும் அத்தகைய விற்பனையினின்று எழும் இலாபங்களினதும் அத்தகைய பாகமும்,

(ஈ) அத்தகைய விற்பனையானது மாநகரசபைப் பிரதேசம் அல்லது நகரசபைப் பிரதேசம் தவிர்ந்த வேறு ஏதேனும் பிரதேசத்தில் அமைந்துள்ளது. அதனுடன் இணைந்துள்ள காணியானது, பத்துப் பேர்ச்சுகளுக்கு மேற்படவுள்ளதுமான வீடொன்று தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, பத்துப் பேர்ச்சுகளுக்கு மேற்படவுள்ளதான இணைந்துள்ள காணியின் அத்தகைய பாகத்தின் விற்பனையினால் பெறப்பட்டதென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படும் அத்தகைய விற்பனையினின்று எழும் இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகமும்,

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, விடயத்திற்கேற்ப அத்தகைய வீட்டின் அல்லது அத்தகைய மாடி வீட்டின் விற்பனையினின்று எழும் இலாபங்களாகவும் வருமானமாகவும் கருதப்படலாகாது:

ஆயின், மேலும், அத்தகைய விற்பனையானது வாடகைக்கு கொள்வனவு நியதிகளின் மீதான விற்பனையொன்றாகவிருக்குமிடத்து—

(i) அத்தகைய நியதிகளின் மீது விற்பனை செய்வதற்கான உடன்படிக்கை எத்தேதியில் செய்யப்பட்டதோ அத்தேதியன்று அத்தகைய விற்பனை நடைபெற்றுள்ளதாகக் கருதப்படல் வேண்டும், அத்துடன்

(ii) வாடகைக் கொள்வனவு நியதிகளின் மீது விற்பனை செய்வதற்கான அத்தகைய உடன்படிக்கையின் கீழ் கொள்வனவுகாப்பினால் செலுத்தப்படற்குரியதான வட்டியாகப் பெறப்படும் மொத்தத் தொகையின் அத்தகைய பாகம், இப்பிரிவின் நோக்கங்களுக்காக அத்தகைய விற்பனையினின்று எழும் இலாபங்களினதும் வருமானத்தினதும் பாகமாக அமைவதாகக் கருதப்படல் ஆகாது.

(2) கம்பனியொன்றினால் அதன் பங்காளர்களுக்குச் செலுத்தப்படும் பாங்கிலாபம் எதுவும், அல்லது அத்தகைய பங்கிலாபத்தின் ஏதேனும் பாகம், (1) ஆம் உட்பிரிவின் கீழ் வருமான வரியினின்று விலக்களிக்கப்பட்ட இலாபங்களிலிருந்தும் வருமானத்திலிருந்தும் செலுத்தப்படுமிடத்து, அப்பொழுது, அத்தகைய பங்கிலாபமானது அல்லது அதன் பாகமானது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் 25 (1) (ஆ), 27 (1) ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள், அத்தகைய பங்கிலாபத்திற்கோ அதன் பாகத்திற்கோ ஏற்புடையனவாதலும் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்கிலாபத்தினைச் செலுத்துவதற்கென வரையப்பட்ட அல்லது செய்யப்பட்டபணஆணைச்சீட்டை,காசோலையை அல்லதுவேறுகட்டளையை வழங்கும் ஆள் ஒவ்வொருவரும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் வருமான வரியினின்று விலக்களிக்கப்பட்டுள்ளவையும், அப்பங்கிலாபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவையுமான இலாபங்களினதும் வருமானத்தினதும் தொகையைக் குறித்துரைக்கும் எழுத்திலான கூற்றொன்றினை அத்தகைய பண ஆணைச்சீட்டுடன், காசோலையுடன் அல்லது வேறு கட்டளையுடன் இணைத்தல் வேண்டும்.

6 உ. (1) இப்பிரிவு, நெல் அரைப்பதற்கென 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கப்பட்டதும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியினது இச்சட்டத்தின் 3 (1) (அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்ட (மூலதனச் சொத்துக்களின் விற்பனை மூலம் பெறப்படும் எவையேனும் இலாபங்களும் ஏதேனும்வருமானமும், தவிர்ந்த) இலாபங்களும் வருமானமும், அப்பொறுப்பு முயற்சியானது ஏற்கனவே உளதாயிருந்த ஏதேனும் தொழிலைக் கூறுபடுத்துவதன் மூலம், மீளவமைப்பதன் மூலம் அல்லது கொள்ளுதல் செய்வதன் மூலம் அமைக்கப்படவில்லையென வரிமதிப்பீட்டாளர் திருப்திப்படுவாரெனின், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, அப்பொறுப்பு முயற்சி தொடங்கப்பட்ட தேதி தொடங்கி 1983 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதி வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும்.

(3) கமத்தொழில், காணிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அப்பொறுப்பு முயற்சியின் கொள்ளளவையும்

அப்பொறுப்பு முயற்சி அமைந்துள்ள இடத்தையும் கருத்திற் கொண்டு, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பொறுப்பு முயற்சியொன்று தொடர்பில்—

(i) 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, நெற் சந்தைப்படுத்தற் சபைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட நெற் சந்தைப் படுத்தற் சபைக்கு, அல்லது அச்சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட கொள்வனவுகார ருக்கு அப்பொறுப்பு முயற்சினுல் வழங்கப்பட வேண்டிய அரிசியின் அளவையும், அத்துடன்

(ii) அவ்வாறு வழங்கப்படும் அரிசியின் தரத்தையும்,

குறித்துரைக்கலாம்.

(4) 1978 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்றதும், ஆனல் 1984 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று முந்தியதுமான ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பில், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சி, அம்மதிப்பீட் டாண்டுக்கு நேர் முந்திய ஆண்டில், (3) ஆம் உட்பிரிவின் கீழ் அத் தகைய பொறுப்பு முயற்சி தொடர்பில் கமத்தொழில், காணிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் குறித் துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கி ஒழுகியுள்ளதென்ற பயன்பட அத்தகைய அமைச்சரால் அல்லது அவரினல் அதிகார மளிக்கப்பட்ட ஆளொருவரால் கையொப்பமிடப்பட்ட சான்றித ழொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவத் தவறு மிடத்து, அத்தகைய நேர்முந்திய ஆண்டில் எழும் பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் அம்மதிப்பீட்டாண்டிற்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் ஆகாது.

6. முதன்மைச்சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது;—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின் வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:—

" (அ) ஆளொருவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் வியாபாரத்தில் தொழிலில், உயர் தொழிலில், வாழ்க்கைத் தொழிலில் அல்லது ஊழியத்தில் சொந்தக் காரர் என்ற தன்மையில் அத்தகைய ஆளினல் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, பொருத்திகள் என்பன பயன்படுத்தப்படுவதன் காரணமாக எழும் சேதாரத்துக்கும் தேய்மானத்துக்குமான மதிப்பிறக் கத்திற்கு நியாயமானதென ஆணையாளர் தலைமையதி பதி தமது தற்றுணிபின்படி கருதும் அத்தகைய பணத் தொகை : அத்தகைய பணத்தொகையானது, வழமை யாக, எழுதிய பெறுமதியின் மீது ஆண்டொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட நூற்றுவீதப்படி கணிக்கப்படும்:

ஆயினும், 1978 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1ம் ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டிற்கு ஏதேனும் மூலத்திலிருந்து எவரேனும் ஆளின் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிப்பதில், ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது எவையேனும் பொருத்திகள் தொடர்பில் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ்ப் பணத்தொகை எதுவும் கழிக்கப்படற்குரியதாகவிருக்குமிடத்து., எழுதிய பெறுமதியின் மீது ஆண்டொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட நூற்று வீதப்படி கணிக்கப்படும் பணத்தொகைக்குப் பதிலாக 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1ம் ஆம் தேதியன்றுள்ள அத்தகைய பொறித்தொகுதியின் எந்திரத் தொகுதியின் அல்லது பொருத்திகளின் எழுதிய பெறுமதிக்குச் சமமான பணத்தொகையொன்று கழிக்கப்படுதல் வேண்டும்,'';

(ஆ) அவ்வுட் பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(எஎ) உயர்தொழில் தகமைபெற்ற ஒருவராகவுள்ள அத்தகைய ஆளினால், அவர் எந்த உயர்தொழில் கழகத்தின் உறுப்பினர் ஒருவராக விருக்கின்றாரோ அந்த ஏதேனும் கழகத்திற்கு ஒப்பப் பணம் செலுத்துவதில் அல்லது உயர் தொழிலுக்குரிய புத்தகங்களையும், சஞ்சிகைகளையும், அறிக்கைகளையும் கொள்வனவு செய்வதில், 1978 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செலவழிக்கப்படும் ஏதேனும் பணத்தொகை,'' ;

(இ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், அப்பந்திக்கான காப்புவாசகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய காப்புவாசகத்தினை இடுவதன் மூலமும்:—

"ஆயின், அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, அல்லது எவையேனும் பொருத்திகள் தொடர்பில்—

(அ) அத்தகைய கொள்ளுதலானது, அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது புரியப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர்தொழிலில், வாழ்க்கைத் தொழிலில் அல்லது ஊழியத்தில் அவரால் முன்னர் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பொறித் தொகுதியை, இயந்திரத்தொகுதியை அல்லது எவையேனும் பொருத்திகளைப் புதுப்பிக்கும் நோக்கத்துக்கானதாகவும், அவ்வாறு புதுப்பித்தற்கான செலவுதொகை (ஒ) என்னும் பந்தியின் கீழான கழிவொன்றாக அனுமதிக்கப்பட்டும் இருந்திருப்பின், அல்லது

(ஆ) அத்தகைய பொறித்தொகுதியை, எந்திரத்தொகுதியை அல்லது பொருத்திகளைக் கொள்வனவு செய்வதிலும் நிறுவுவதிலும் செலவழிக்கப்படும் பணத் தொகையானது (ஔ) என்னும் பந்தியின் கீழான அல்லது (க) என்னும் பந்தியின் கீழான கழிவொன்றாக அனுமதிக்கப்பட்டிருப்பின், அல்லது.

(இ) அத்தகைய பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள், 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டிருப்பின், அல்லது 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்டும் அத்தேதியன்று அல்லது அதன் பின்னர் அவரால் முதற்றடவையாகப் பயன்படுத்தப்பட்டும் இருந்திருப்பின்.

இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய ஆளுக்குக் கழிவு எதுவும் அனுமதிக்கப்படலாகாது,'' ;

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில், அப்பந்திக்கான காப்புவாசகத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய காப்புவாசகத்தினை இடுவதன் மூலமும்:—

"அத்தகைய ஆளினாற் நிர்மாணிக்கப்படும் ஏதேனும் கட்டடம் தொடர்பில்—

(அ) அத்தகைய நிர்மாணவேலை இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில்குறித்துரைக்கப்பட்டுள்ள எவையேனும்நோக்கங்களுக்காக அவரால் முன்னர் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கட்டடத்தைப் புதிப்பிப்பதற்கானதாகவும், அவ்வாறு புதுப்பிப்பதற்கான செல்வு தொகை (ஒ) என்னும் பந்தியின் கீழான கழிவொன்றாக அனுமதிக்கப்பட்டும் இருந்திருப்பின், அல்லது

(ஆ) அத்தகைய நிர்மாண வேலை 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் நடைபெற்றிருந்திருப்பின்,

இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய ஆளுக்குக் கழிவு எதுவும் அனுமதிக்கப்படலாகாது,";

(உ) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின் வரும் பந்தியை இடுவதன் மூலமும்.—

"(ஒ) இவ்வுட்பிரிவின் (அ), (ஏ), (ஔ), (க) அல்லது (ங) என்னும் பந்திகளின் கீழ் அல்லது வருமானவரிக் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (11 ஆம்) உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அவற்றின் மதிப்பிறக்கத்திற்கான ஏதேனும் கழிவு அல்லது அவற்றிற்கான விடுதொகை அனுமதிக்கப்பட்டிராதிருப்பின். வரு

மானத்தை உண்டாக்குவதற்கென வேலையிலீடுபடுத்தப் பட்டுள்ள பொறித்தொகுதியை, எந்திரத்தொகுதியை அல்லது பொருத்திகளை (புதுப்பிப்பதற்கல்ல) பழுது பார்ப்பதற்கென அத்தகைய ஆளினால் செலவழிக்கப் படும் பணத்தொகை எதுவும், அல்லது ஏதேனும் பொறித்தொகுதியை, எந்திரத்தொகுதியை அல்லது எவையேனும் பொருத்திகளைப் புதுப்பிப்பதற்கான செலவுதொகை, அல்லது இவ்வுட்பிரிவின் (ஐ) (ஔ), (க), (ச) அல்லது (ஞ) என்னும் பந்திகளின் கீழ் அவற்றின் மதிப்பிறக்கத்திற்கான ஏதேனும் கழிவு அல்லது அவற்றிற்கான விடுதொகை வழங்கப்பட்டிராதிருப்பின், அவ்வாறு வேலையிலீடுபடுத்தப்பட்டுள்ள ஏதேனும் கட்டடத்தை, கருவியை, எவையேனும் தட்டுமுட்டுப் பொருட்களை அல்லது பொருட்களைப் புதுப்பிப்பதற்கெனச் செலவழிக்கப்படும் ஏதேனும் பணத்தொகை, அல்லது அவ்வாறு வேலையிலீடுபடுத்தப்பட்டுள்ள ஏதேனும் கட்டடத்தை, கருவியை எவையேனும் தட்டுமுட்டுப் பொருட்களை அல்லது பொருட்களைப் பழுது பார்த்தற்கெனச் செலவழிக்கப்படும் ஏதேனும் பணத்தொகை;

(ஊ) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(ஓஓ) 1978 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பில்—

(அ) எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் ஏற்றுமதி வியாபாரம் தொடர்பில் மட்டும், அல்லது வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுக்கென எவையேனும் சேவைகளை ஏற்பாடு செய்வது தொடர்பில் மட்டும் இலங்கைக்கு வெளியே உறப்படும் விளம்பரப்படுத்தற்கான செலவு தொகை முழுவதும்;

(ஆ) (i) எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் அல்லது பண்டங்களின் ஏற்றுமதி வியாபாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் மட்டும்; அல்லது

(ii) வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுக்கென எவையேனும் சேவைகளை ஏற்பாடு செய்வது தொடர்பில் மட்டும்,

இலங்கைக்கு வெளியே பயணஞ் செய்வதில் உறப்பட்ட செலவினம், செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அங்கீகாரத்துடன் உறப்பட்டு அந்நோக்கத்துக்கென அவரால் அங்கீகரிக்கப்பட்ட பணத்தொகையை விஞ்சாதிருக்குமிடத்து, அத்தகைய செலவுகள்,";

(எ) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின் வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஔ) (i) 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (v) ஆம் பந்தியில் அல்லது (vi) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதும், அத்தகைய ஆளினல் கொண்டு நடாத்தப்படுவதுமான ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கான ஏதேனும் பொறித் தொகுதியை, எந்திரத் தொகுதியை, எவை யேனும் பொருத்திகளை தளபாடங்களை, தட்டு முட்டுப் பொருட்களை அல்லது பொருட்களை, அல்லது

(ii) அவரால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் ஆழ்கடலில் மீன்பிடித்தல் அல்லது கரைக் கண்மையில் மீன்பிடித்தல் என்ற பொறுப்பு முயற்சிக்கான ஏதேனும் கருவியை அல்லது சாதனத்தை

விடயத்திற்கேற்ப, கொள்வனவு செய்து நிறுவுவதில் அல்லது கொள்வனவு செய்வதில் அத்தகைய ஆளினல் செலவழிக்கப் படும் ஏதேனும் பணத்தொகை :

ஆயினும், ஏதேனும் பொறித்தொகுதியை, எந்திரத் தொகுதியை; எவையேனும் பொருத்திகளை தளபாடங்களை தட்டுமுட்டுப் பொருட்களை, பொருட்களை, கருவிகளை அல்லது சாதனங்களை அத்தகைய ஆள் இலாபங்கள் நிச்சயிக்கப்படும் காலப்பகுதியின்போது விற்குமிடத்து, பயனற்றதெனக் கழிக்குமிடத்து, வேறுவகையில் கையுதிர்க்குமிடத்து அல்லது அவற்றின் சொந்தக்காரராக இல்லாதொழியுமிடத்து, அல்லது அவற்றை, எப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிப்பதில் இப்பந்தியின் கீழான அல்லது (ந) என்னும் பந்தியின் கீழான கழிவு ஒன்று செய்யப்படக் கூடியதாகவுள்ளதோ அப்பொறுப்பு முயற்சியில் பயன்படுத் தாதொழியுமிடத்து, 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட அத்தகைய பொறுப்புமுயற்சியிலிருந்து அத்தகைய ஆளின்இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிக்கும் நோக்கங்களுக்காக அத்தகைய ஏதேனும் பொறித்தொகுதியை, எந்திரத் தொகுதியை அல்லது எவையேனும் பொருத்திகளை, தளபாடங்களை, தட்டுமுட்டுப் பொருட்களை, பொருட்களை, கருவிகளை அல்லது சாதனங்களை—

(i) விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் பணத்தொகை எதுவும், அல்லது விடயத்திற்கேற்ப,

(ii) பயனற்றதெனக் கழிக்கும் தேதியன்று, வேறுவகையில் கையுதிர்க்கும் தேதியன்று அல்லது அத்தகைய

ஏதேனும் பொறுப்பு முயற்சியில் சொத்தாண்மை இல்லாதொழியும் தேதியன்று அல்லது அத்தகைய பொறுப்பு முயற்சியில் அவற்றைப் பயன்படுத்தாதொழியும் தேதியன்று உள்ள அவற்றின் சந்தைப்பெறுமதி,

அப்பொறுப்பு முயற்சியின் வரவு ஒன்றாகக் கருதப்படல் வேண்டும் ;

(ஏ) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (ங) மதிப்பீட்டாண்டிற்கு நேர் முந்திய ஆண்டில் அவரால் கொள்ளப்படுவனவும், அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர்தொழிலில், வாழ்க்கைத் தொழிலில் அல்லது ஊழியத்தில் பயன்படுத்தப்படுவனவுமான ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது எவையேனும் பொருத்திகள் தொடர்பிலான விடுதொகை; அத்தகைய விடுதொகை பின்வருவனவற்றிற்குச் சமமானவொரு தொகையாகவிருக்கும்

(i) அத்தகைய பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் கொள்வனவு மூலம் கொள்ளப்பட்டிருக்குமிடத்து, அவற்றைக் கொள்வனவு செய்வதிலும் நிறுவுவதிலும் அவரால் செலவழிக்கப்படும் பணத் தொகை, அல்லது

(ii) அத்தகைய பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் கொள்வனவு மூலமாகவன்றி வேறு வகையாகக் கொள்ளப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய பொறித்தொகுதியும், எந்திரத்தொகுதியும் பொருத்திகளும் அவரால் கொள்ளப்பட்ட தேதியன்று உள்ள அவற்றின் சந்தைப்பெறுமதியினதும் அவற்றை நிறுவுவதில் அவரால் செலவழிக்கப்படும் ஏதேனும் பணத் தொகையினதும் கூட்டு மொத்தம்:

ஆயினும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ், அத்தகைய ஏதேனும் பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது எவையேனும் பொருத்திகள் தொடர்பில்

(அ) அத்தகைய பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது பொருத்திகள் ஆளொருவரினால் 1977ஆம் ஆண்டு ஏப்பிறில் 1 ஆம் தேதிக் முன்னராகக் கொள்ளப்பட்டுப் பயன்படுத்தப் பட்டிருப்பின்; அல்லது

(ஆ) அத்தகைய பொறித்தொகுதியை, எந்திரத் தொகுதியை அல்லது பொருத்திகளைக் கொள்வனவு செய்வதிலும் நிறுவுவதிலும் செலவழிக்கப்

பட்ட ஏதேனும் பணத்தொகை (ஔ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (க) என்னும் பந்தியின் கீழ்க் கழிவொன்றாக அனுமதிக்கப்பட்டிருப்பின்,

அத்தகைய ஆளுக்குக் கழிவு எதுவும் அனுமதிக்கப் படல் ஆகாது:

ஆயினும், மேலும், ஏதேனும் பொறித்தொகுதியை, எந்திரத்தொகுதியை அல்லது எவையேனும் பொருத்திகளை, அத்தகைய ஆள், இலாபங்கள் நிச்சயிக்கப்படும் காலப்பகுதியின்போது விற்குமிடத்து, பயனற்றதெனக் கழிக்குமிடத்து. வேறுவகையில் கையுதிர்க்குமிடத்து அல்லது அவற்றின் சொந்தக்காரராக இல்லாதொழியுமிடத்து அல்லது அவற்றை, எப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிப்பதில் இப்பந்தியின் கீழ்க் கழிவு ஒன்று செய்யப்படக் கூடியதாகவுள்ளதோ அப்பொறுப்பு முயற்சியில் பயன்படுத்தாதொழியுமிடத்து. அப்பொழுது, 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட அத்தகைய பொறுப்புமுயற்சியிலிருந்து அத்தகைய ஆளின் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிக்கும் நோக்கங்களுக்காக, அத்தகைய ஏதேனும் பொறித் தொகுதியின், எந்திரத்தொகுதியின் அல்லது எவையேனும் பொருத்திகளின்—

(i) விற்பனைமூலம் பெறப்படும் பணத்தொகை எதுவும், அல்லது விடயத்திற்கேற்ப,

(ii) அவற்றைப் பயனற்றதெனக் கழிக்கும் தேதியன்று, வேறுவகையில் கையுதிர்க்கும் தேதியன்று, அல்லது அத்தகைய ஏதேனும் பொறுப்பு முயற்சியில் சொத்தாண்மை இல்லாதொழியும் தேதியன்று, அல்லது அவற்றை அத்தகைய பொறுப்புமுயற்சியில் பயன்படுத்தாதொழியும் தேதியன்று அவற்றின் சந்தைப் பெறுமதி.

அப்பொறுப்புமுயற்சியின் வரவு ஒன்றாகக் கருதப்படல் வேண்டும்:

(ச) மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டில், அவரால் கொண்டு நடாத்தப்பட்ட ஏதேனும் பொறுப்புமுயற்சியின் நோக்கத்துக்காக அத்தகைய பொறுப்பு முயற்சியில் அத்தகைய ஆளினால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நிறைவேற்றலுவலர் ஒருவர் அல்லாத பணியாட்டொகுதி உறுப்பினர் எவரும் குடியிருத்தற்கான வாழ் வீடாகக் கட்டட மொன்றை நிர்மாணிப்பதில்

அவரால் செலவழிக்கப்பட்ட பணத்தொகைக்குச் சமமானதொரு விடுதொகை;

ஆயினும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ்—

(அ) 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் கட்டடத்தை நிர்மாணித்ததில் அவரால் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை தொடர்பில், அல்லது

(ஆ) அக்கட்டடத்தை நிர்மாணிப்பதில் அவரால் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகையானது (க) என்னும் பந்தியின் கீழ் அல்லது (ஞ) என்னும் பந்தியின் கீழ்க் கழிவொன்றாக அனுமதிக்கப்பட்டிருப்பின், அத்தகைய பணத்தொகை தொடர்பில்,

ஆளொருவருக்குக் கழிவு எதுவும் அனுமதிக்கப்படல் ஆகாது;

ஆயினும், மேலும் அத்தகைய ஏதேனும் கட்டடத்தை, அத்தகைய ஆள், இலாபங்கள் நிச்சயிக்கப்படும் காலப்பகுதியின்போது விற்குமிடத்து, பயனற்றதெனக் கழிக்குமிடத்து, வேறு வகையில் கையுதிர்க்குமிடத்து அல்லது அதன் சொந்தக்காரராக இல்லாதொழியுமிடத்து அல்லது அதனை, எப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களையும் வருமானத்தையும் நிர்ணயிப்பதில் இப்பந்தியின் கீழான கழிவு ஒன்று செய்யப்படக்கூடியதாகவுள்ளதோ அப்பொறுப்பு முயற்சியில் பயன்படுத்தாதொழியுமிடத்து, 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட அத்தகைய பொறுப்புமுயற்சியிலிருந்து அத்தகைய ஆளின் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிக்கும் நோக்கங்களுக்காக, அத்தகைய ஏதேனும் கட்டடத்தின்—

(i) விற்பனைமூலம் பெறப்படும் பணத்தொகை எதுவும், அல்லது விடயத்திற்கேற்ப,

((ii) அதனைப் பயனற்றதெனக் கழிக்கும் தேதியன்று, வேறுவகையில் கையுதிர்க்கும் தேதியன்று அல்லது அத்தகைய ஏதேனும் பொறுப்பு முயற்சியில் சொத்தாண்மை இல்லாதொழியும் தேதியன்று அல்லது அதனை அத்தகைய பொறுப்புமுயற்சியில் பயன்படுத்தாதொழியும் தேதியன்று அதன் சந்தைப்பெறுமதி,

அப்பொறுப்பு முயற்சியின் வரவு ஒன்ருகக் கரு தப்படல் வேண்டும்!

(ஞ) மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டில்—

(i) அத்தகைய ஆளினுல் கொண்டு நடாத்தப் பட்ட ஏதேனும் கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சியின் நோக்கத்துக்காக அல்லது (5) ஆம் உட் பிரிவின் கருத்தெல்லேக்குட்பட்ட ஏதே னும் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கத்துக்காக—

(அ) பணியாட்டொகுதியினரின் நலன் புரிக் கட்டடமொன்ருகப் பயன் படுத்துவதற்கென; அல்லது.

(ஆ) அத்தகைய பொறுப்பு முயற்சியின் அல்லது கருத்திட்டத்தின் நோக் கங்களுக்காக வாழ் வீடாகவன்றி வேறுவகையாகக் குடியிருத்தற்கான

ஏதேனும் கட்டடத்தை, அல்லது

(ii) அத்தகைய ஆளினுல் கொண்டு நடாத்தப் பட்ட வியாபாரத்தின் அல்லது தொழி லின் நோக்கத்துக்கென்றே குதமாகப் பயன்படுத்துவதற்கான ஏதேனும் கட் டடத்தை,

நிர்மாணிப்பதில் அத்தகைய ஆளினுல் செல வழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகையின் ஐம்பது சத வீதத்திற்குச் சமமானவொரு விடு தொகை:

ஆயினும், இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடு களின் கீழான கழிவு எதுவும், 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஏதே னும் கட்டடத்தை நிர்மாணித்ததில் அவரால் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை தொடர்பில் ஆளொருவருக்கு அனுமதிக்கப் படல் ஆகாது;

ஆயினும், மேலும், அத்தகைய ஏதேனும் கட் டடத்தை அத்தகைய ஆள், இலாபங்கள் நிச் சயிக்கப்படும் காலப்பகுதியின் போது விற்குமிட த்து, பயனற்றதெனக் கழிக்குமிடத்து, வேறு வகையில் கையுதிர்க்குமிடத்து அல்லது அதன் சொந்தக்காரராக இல்லாதொழியுமிடத்து அல் லது எப்பொறுப்பு முயற்சியின் இலாபங்களேயும் வருமானத்தையும் நிச்சயிப்பதில் இப்பந்தியின்

கிழான கழிவு ஒன்று செய்யப்படக் கூடியதாக வுள்ளதோ அப்பொறுப்பு முயற்சியில் அதனைப் பயன்படுத்தா தொழியுமிடத்து, 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட அத்தகைய ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து அத்தகைய ஆளின் இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிக்கும் நோக்கங்களுக்காக இப்பந்தியின் கீழ் வழங்கப் பட்ட விடுதொகைக்கு மேலாக—

(அ) அக்கட்டடத்தின் விற்பனை மூலம் பெறப் படும் பணத்தொகையின் மேலதிகம், அல்லது விடயத்திற்கேற்ப,

(ஆ) அக்கட்டடத்தைப் பயனற்றதெனக் கழிக் கும் தேதியன்று, வேறுவகையில் கையுதிர்க் கும் தேதியன்று அல்லது அத்தகைய ஏதேனும் பொறுப்பு முயற்சியில் சொத் தாண்மை இல்லாதொழியும் தேதியன்று அல்லது அத்தகைய பொறுப்பு முயற்சி யில் அதனைப் பயன்படுத்தாதொழியும் தேதியன்று அதன் சந்தைப் பெறுமதி யின் மேலதிகம்.

அப்பொறுப்பு முயற்சியின் வரவு ஒன்றாகக் கருதப்படல் வேண்டும்.'';

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூல மும் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட் பிரிவை இடுவதன் மூலமும்:—

'' (5) எவரேனும் ஆளின் இலாபங்களை யும் வருமானத்தையும் நிச்சயிக்கும் நோக்கத் துக்காக—

(அ) அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டமொன்றல்லாத (கமத்தொழில் கருத்திட்டமொன்று தவிர்ந்த வியாபாரத்தை அல்லது தொழிலை அவர் தொடங்குவதில் அவரால் பயன்படுத்தப்பட வுள்ள ஏதேனும் புதிய பொறித்தொகுதியை, எந்திரத்தொகுதியை அல்லது எவையேனும் புதிய பொருத்திகளைக் கொள்வனவு செய்வதிலும் நிறுவுவதிலும் அவரால் உண்மையில் உறப் பட்ட செலவினத்தின் இருபது சதவீதத்திற் குச் சமமானதொரு பணத்தொகை கழிக்கப் படல் வேண்டும்.

(ஆ) கமத்தொழில் பொறுப்பு முயற்சியொன் றில், அல்லது அங்கீகரிக்கப்பட்ட கருத் திட்டமொன்றாகவுள்ள வியாபாரத்தை அல்லது தொழிலை அவர் தொடங்குவதில் அவரால் பயன்படுத்தப்படவுள்ள ஏதே னும் புதிய பொறித்தொகுதியை, எந்தி ரத்தொகுதியை அல்லது எவையேனும் புதிய பொருத்திகளைக் கொள்வனவு செய்

வதிலும் நிறுவுவதிலும் அவரால் உண்மையில் உறப்பட்ட செலவினத்தின் நாற்பது சத வீதத்திற்குச் சமமானவொரு பணத்தொகை கழிக்கப்படல் வேண்டும்;

(இ) அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டமொன்றல்லாத ஏதேனும் கைத்தொழிற் பொறுப்பு முயற்சியின் நோக்கங்களுக்காக, பணியாட்டொகுதியினரின் நலன்புரிக் கட்டடமொன்ருகப் பயன்படுத்துவதற்கென, அல்லது அத்தகைய பொறுப்பு முயற்சியில், அல்லது அதன் நோக்கங்களுக்காக அல்லது அது தொடர்பில் அவரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள கீழ்நிலைப் பணியாட்டொகுதி உறுப்பினர் எவருக்குமான வாழ்வீடொன்ருகப் பயன்படுத்துவதற்கென, அல்லது வாழ்வீடாகவல்லாது அத்தகைய பொறுப்பு முயற்சியின் வேறு நோக்கங்களுக்காகக் குடியிருந்ததற்கான கட்டடமொன்ருகப் பயன்படுத்துவதற்கென ஏதேனும் கட்டடத்தை நிர்மாணிப்பதில் அல்லது புதுப்பிப்பதில் அவரால் உண்மையில் உறப்பட்ட செலவினத்தின் இருபது சத வீதத்திற்குச் சமமானவொரு பணத்தொகை கழிக்கப்படல் வேண்டும்;

(ஈ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டத்தின் அல்லது கமத்தொழிற் பொறுப்பு முயற்சியின் நோக்கங்களுக்காக, பணியாட்டொகுதியினரின் நலன்புரிக் கட்டடமொன்ருகப் பயன்படுத்துவதற்கென அல்லது அத்தகைய கருத்திட்டத்தில் அல்லது பொறுப்பு முயற்சியில் அல்லது அவற்றின் நோக்கங்களுக்காக அல்லது அவை தொடர்பில் அவரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள கீழ்நிலைப் பணியாட்டொகுதி உறுப்பினர் எவருக்குமான வாழ்வீடொன்ருகப் பயன்படுத்துவதற்கென, அல்லது வாழ்வீடாகவல்லாது அத்தகைய கருத்திட்டத்தின் அல்லது பொறுப்பு முயற்சியின் வேறு நோக்கங்களுக்காகக் குடியிருத்தற்கான கட்டடமொன்ருகப் பயன்படுத்துவதற்கென ஏதேனும் கட்டடத்தை நிர்மாணிப்பதிலும் புதுப்பிப்பதிலும் அவரால் உண்மையில் உறப்பட்ட செலவினத்தின் நாற்பது சதவீதத்திற்குச் சமமானவொரு பணத்தொகை கழிக்கப்படல் வேண்டும்;

ஆயினும், ஆளெவரும்—

(i) (அ) ஏதேனும் பொறித் தொகுதியை, எந்திரத்தொகுதியை. அல்லது பொருத்திகளைக் கொள்வனவு செய்வதிலும் நிறுவுவதிலும் செலவழிக்கப்பட்ட பணத்தொகையானது, (1) ஆம் உட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (க) என்னும் பந்தியின்கீழ் கழிவொன்றாக அனுமதிக்கப்பட்டிருப்பின், அல்லது

(ஆ) ஏதேனும் பொறித் தொகுதியை, எந்திரத் தொகுதியை அல்லது எவையேனும் பொருத்திகளைக் கொள்வனவு செய்வதற்கும் நிறுவுவதற்குமான செலவினமானது, 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவரால் உறப்பட்டிருப்பின், அல்லது அத்தகைய பொறித் தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னர் அவரால் கொள்வனவு செய்யப்பட்டு முதற்றடவையாக அத்தேதிக்குப் பின்னர் அவரால் பயன்படுத்தப்பட்டிருப்பின், அத்தகைய ஏதேனும் பொறித் தொகுதியை, எந்திரத் தொகுதியை அல்லது எவையேனும் பொருத்திகளைக் கொள்வனவு செய்வதற்கும் நிறுவுவதற்குமென இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் கழிவெதற்கும் உரித்துடையவராதல் ஆகாது;

(ii) (அ) ஏதேனும் கட்டடத்தைப் புதுப்பிப்பதில் உறப்படும் செலவினம், (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின்கீழ் கழிவொன்றாக அனுமதிக்கப்பட்டிருப்பின், அல்லது

(ஆ) ஏதேனும் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான செலவினம், 1977 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்பட்டிருப்பின்,

அத்தகைய ஏதேனும் கட்டடத்தை நிர்மாணிப்ப தில் அல்லது புதுப்பிப்பதில் உண்மையில் உறப் பட்ட செலவினத்திற்காக இவ்வுட்பிரிவின் (இ) என்னும் பகுதியின்கீழ் அல்லது (ஈ) என்னும் பந்தியின்கீழ் கழிவெதற்கும் உரித்துடையவராதல் ஆகாது :

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக "அங்கீ கரிக்கப்பட்ட கருத்திட்டம்" என்பது

(i) வருமானவரிக் கட்டளைச் சட்டத்தின் 47அ என்னும் பிரிவின் நோக்கங்களுக்காக அங் கீகரிக்கப்பட்ட கருத்திட்டமொன்றென அமைச்சரால் வெளிப்படுத்தப்பட்ட ஏதே னும் கருத்திட்டம் எனப் பொருளாகும், அல்லது

(ii) அப்போதைக்குக் கைத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சரால், இலங்கையின் பொருளாதார முன் னேற்றத்துக்கு அத்தியாவசியமாகவுள்ள தெனக் கருதப்படும் புதிய பொறுப்பு முயற்சியொன்றைத் தாபிப்பதற்கானதும் அத்தகைய அமைச்சரின் வேண்டுகோளின் பேரில், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் இவ்வுட் பிரிவின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப் பட்ட கருத்திட்டமொன்றென வெளிப் படுத்தப்பட்டுக் கசெற்றில் வெளியிடப் பட்டதுமான அத்தகைய ஏதேனும் கருத் திட்டம் எனப் பொருளாவதுடன் 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (v) ஆம் பந் தியில் அல்லது (vi) ஆம் பந்தியில் குறிப் பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியையும் உள்ளடக்கும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவில்—

(அ) "1அ" என்பதிலிருந்து "அனுமதிக்கப் படல் ஆகாது" என்பது வரையிலான சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்;—

"(1) (அ) அல்லது (1) (ஏ) அல்லது (1) (ஐ) என்னும் உட்பிரிவுகளின் கீழ் சேதா ரத்திற்கும் தேய்மானத்திற்குமான மதிப் பிறக்கத்திற்கென, அல்லது (1) (ஒ) என் னும் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பொறித்

தொகுதியை, எந்திரத் தொகுதியை அல்லது எவையேனும் பொருத்திகளை அல்லது ஏதேனும் கட்டடத்தைப் புதுப்பித்தற்காகச் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத் தொகைக்கென, அல்லது (1) (ஔ) அல்லது (1) (க) அல்லது (1) (ங) என்னும் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பொறித்தொகுதியை, எந்திரத் தொகுதியை அல்லது எவையேனும் பொருத்திகளைக் கொள்வனவு செய்வதிலும் நிறுவுவதிலும் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகைக்கென, அல்லது (1) (ச) அல்லது (1) (ஞ) என்னும் உட்பிரிவின் கீழ் ஏதேனும் கட்டடத்தை நிர்மாணிப்பதில் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகைக்கென ஆளெவருக்கும் கழிவு எதுவும் அனுமதிக்கப்படல் ஆகாது ''; அத்துடன்

(ஆ) "இலாபங்களும் வருமானங்களும்'' என்பதில் இருந்து "பிரிவின் கீழ்'' என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"3 (1) (அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட இலாபங்கள், வருமானம் என்பன முழுவதும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகம்; '' ;

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (இஇ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:—

"(இஇ) அத்தகைய ஆளினால் இலங்கையில் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் தொழில் வியாபாரம். உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் தொடர்பில் 1965 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு இலங்கைக்கு வெளியே பயணஞ் செய்வதற்காக உறப்பட்ட, 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஓஓ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ்க் கழிக்கப்படற்குரியதான அத்தகைய ஏதேனும் செலவினம் தவிர்ந்த வேறு ஏதேனும் செலவினம்; '' ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் -

"(ஊ) அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் தொடர்பில் (10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விளம்பரப்படுத்தற்கான செலவு தவிர்ந்த) அத்தகைய ஆளின் விளம்பரப்படுத்தற்கான செலவு தொகையின் காற் பங்கு; "; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(3) ஏதேனும் வியாபாரத்தை அல்லது தொழிலைக்கொண்டு நடாத்துகின்ற அல்லது ஏதேனும் உயர்தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைப் புரிகின்ற ஆள் எவரும், அவரது வியாபாரத்தின், தொழிலின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் நோக்கத்துக்கெனப் பயணம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வாகனம் தொடர்பில் (அத்தகைய ஆளிடம் வேலைக்கமர்ந்துள்ள நிறைவேற்று அலுவலர் ஒருவரல்லாதவரான அலுவலர் ஒருவரால் அத்தகைய நோக்கத்துக்கெனப் பயன்படுத்தப்பட்ட வாகனமொன்றின் விடயத்தில் தவிர), சேதாரத்துக்கும் தேய்மானத்துக்குமான மதிப்பிறக்கத்துக்கென அல்லது புதுப்பித்தலுக்கென ஏதேனும் பணத் தொகைக்கு அல்லது 10 (1) (ஔ) என்னும் பிரிவின்கீழ் அல்லது 10 (1) (க) அல்லது 10 (1) (ங) என்னும் பிரிவின் கீழான ஏதேனும் விடு தொகைக்கு உரித்துடையவராதலாகாது; அத்துடன், கடைசியாகக் கூறப்பட்ட வாகனம் தொடர்பில் அத்தகைய ஆள், அத்தகைய மதிப்பிறக்கத்துக்காக நியாயமானதென ஆணையாளர் தலைமையதிபதி கருதக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைக்கு உரித்துடையவராதலும், வேண்டும்:

ஆயின், 1965, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்கும், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள்,—

(அ) 'வாகனமொன்றின் விடயத்தில் தவிர" என்னும் சொற்களுக்கிப் பதிலாக, "மோட்டார் சைக்கிள் அல்லது பைசிக்கிள் ஒன்றின் விடயத்தில் தவிர" என்னும் சொற்களும், அத்துடன்

(ஆ) "கடைசியாகக் கூறப்பட்ட வாகனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய மோட்டார் சைக்கிள் அல்லது பைசிக்கிள்" என்னும் சொற்களும்,

பதிலிடப்பட்டிருந்தாற் போன்று ஏற்புடையனவாதல் வேண்டும்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும;—

"(ஈ) ஆறும் பிரிவில் அல்லது 6ஆ என்னும் பிரிவில் அல்லது 6இ என்னும் பிரிவில் அல்லது 6உ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியில், மதிப் பீட்டாண்டுக்கு நேர்முந்திய ஏதேனும் ஆண்டில் உறப்பட்ட தான ஏதேனும் நட்டத் தொகை (அத்தகைய நட்டத் தொகை, விடயத்துக் கேற்றவாறு, (1அ) என்னும் உட்பிரிவில் அல்லது (1இ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் முறையில் கணிக்கப்பட்டுக் சழிக்கப்படுதல் வேண்டும்;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(1இ) (அ) இப்பிரிவில் முரணாக எது எப்படியிருப்பினும் இ என்னும் பி ல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் பொறுப்புமுயற்சியில், அப்பொறுப்பு முயற்சியின் தொடக்கத் தேதியிலிருந்து 1983 மார்ச்சு 31 ஆம் தேதி வரைக்கும் அப் பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்தும் ஆளால் உறப் படும் ஏதேனும் நட்டம் 1984 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கான அவ்வாளின் மொத்தச் சட்டமுறையான வருமானத்தின் அத் தகைய பாகத்திலிருந்து மட்டும் (அப்பொறுப்பு முயற்சியி லிருந்து அவ்வாள் பெறும் சட்டமுறையான வருமானமாக அமைகின்றவாறு) கழிக்கப்படற்பாலதாதல் வேண்டும்:

ஆயின், இப்பந்தியின் கீழான கழிவு, இயன்ற வரையில் எம்மதிப்பீட்டாண்டில் நட்டம் ஏற்பட்டதோ அம்மதிப்பீட் டாண்டினை அடுத்துவரும் மதிப்பீட்டாண்டில் அப்பொறுப்பு முயற்சியிலிருந்து அவ்வாளுக்குக் கிடைக்கும் சட்டமுறையான வருமானத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அது அவ்வாறு கழிக்கப்படமுடியாதவரையில், அடுத்த மதிப் பீட்டாண்டில் அப்பொறுப்புமுயற்சியிலிருந்து அவ்வாளுக்குக் கிடைக்கும் சட்டமுறையான வருமானத்திலிருந்தும் அதன் பின்னர் அவ்வாறே தொடர்ந்தும் கழிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற மதிப் பீண்டாண்டில் அப்பொறுப்புமுயற்சியைக் கொண்டு நடாத்து கின்ற ஆளின் மதிப்பிடற்குரிய வருமானத்தைக் கணிப்பதில் 6ஆ என்னும் பிரிவில் அல்லது 6இ என்னும் பிரிவில் அல்லது 6உ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியின் ஏதேனும் நட்டத்தைக் கழிக்கும் நோக்கங்களுக்காக, அத்தகைய நட்டமானது, அப்பொறுப்பு

முயற்சியை அத்தகைய ஆள்கொண்டு நடாத்தும் காலமாகிய 1984 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டில் அப்பொறுப்பு முயற்சியில் கூறப்பட்ட மொத்த நட்டங்களிலிருந்து பின்வருவனவற்றின் கூட்டுமொத்தத்தைக் கழித்து பின்னர் வரும் தொகையாதல் வேண்டும்:—

(i) 1984 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கென அத்தகைய ஆளின் சட்டமுறையான வருமானத்திலிருந்து (அ) என்னும் பந்தியின் கீழ்க் கழிக்கப்பட்டுள்ள அப்பொறுப்பு முயற்சியில் உறப்பட்ட அத்தகைய நட்டங்களின் ஏதேனும் பாகம், அத்துடன்

(ii) அப்பொறுப்பு முயற்சியில் அத்தகைய நட்டம் எந்த மதிப்பீட்டாண்டில் உறப்பட்டதோ அந்த மதிப்பீட்டாண்டின் பின்னர் வரும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட அப்பொறுப்பு முயற்சியின் எவையேனும் இலபங்கள்,

(இ) (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள நட்டம் அல்லது அதன் பாகம், 1984 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற மதிப்பீட்டாண்டுக்கான மொத்தச் சட்டமுறையான வருமானத்திலிருந்து கழிக்கப்பட முடியாததாகவுள்ளவிடத்து, அத்தகைய நட்டம் அல்லது அத்தகைய நட்டத்தின் அத்தகைய பாகம் அடுத்த மதிப்பீட்டாண்டின் மொத்தச் சட்டமுறையான வருமானத்திலிருந்தும் அதன் பின்னர் அவ்வாறே தொடர்ந்தும் கழிக்கப்படுதல் வேண்டும்;''.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

(அ) இப்பிரிவில் ''அங்கீகரிக்கப்பட்ட அன்பளிப்பு'' என்பது —

(அ) 1978 ஏப்பிறில் 1ம் தேதிக்கு முன்னர் அரசாங்கத்துக்குப் பணமாக அல்லது வேறு விதத்தில் வழங்கப்பட்ட தொகையில், அல்லது

(ஆ) 67 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அறக்கோட்டத்துக்கு அல்லது இப்பிரிவின்

நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அறக்கோட்டம் ஒன்ருய் இருத்தல் வேண்டுமெனக் கசற்றில் வெளிப் யிடப்பட்ட அறிவித்தல் மூலம் அமைச்சரால் வெளிப் படுத்தப்பட்டுள்ளவாறுன அத்தகைய ஏதேனும் பகி ரங்க அறக்கோட்ட நம்பிக்கை பொறுப்புக்கு அல்லது நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட தொகையில்,

ஒராயிரம் ரூபாவுக்குக் குறையாத ஓர் அன்பளிப்பு எனப் பொருளாகும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்கென, பணம் தவிர்ந்த வேறு விதத் தில் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பொன் றின் தொகையே, அத்தகைய அன்பளிப்பின் பெறுமதியாகவிருத் தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பெறுமதியே –

(i) அன்பளிப்பவருக்கு அன்பளிப்புச் செய்யப்படும் ஆசனத் தின் உண்மையான செலவு தொகையாகவிருத்தலும் வேண்டும்'; அல்லது

(ii) உண்மையான செலவு தொகையை நிச்சயிக்க முடியாத விடத்து, அன்பளிப்புச் செய்யப்படும் ஆதனத்தின் சந் ஸதைப் பெறுமதியாகவிருத்தலும் வேண்டும்'; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(4) ஆளொருவர் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கு நேர்முந்திய ஆண்டில், அங்கீகரிக்கப்பட்ட அதே அறக்கோட்டத்துக்கோ அல்லது அத்தகைய வெவ்வேறு அறக்கோட்டங்களுக்கோ அல்லது இலங்கை அரசாங்கத்துக்கோ, அல்லது ஓர் அறக் கோட்டத்துக்கும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அறக்கோட் டங்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமோ இரண்டு அன் பளிப்புகளை அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அன்பளிப்புகளை வழங்கியுள்ளவிடத்து அல்லது வழங்கியுள்ளதாகக்கருதப்படு மிடத்து, அவ்வன்பளிப்புகளின் கூட்டு மொத்தத் தொகை அத்தகைய தொகை ஓராயிரம் ரூபாவுக்குக் குறையாததாய் இருக்குமெனின், இப்பிரிவின் நோக்கங்களுக்கென அம்மதிப் பீட்டாண்டு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட அன்பளிப்பொன் ருகக் கருதப்படல் வேண்டும்:

ஆயின், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள், 1978, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கை அர சாங்கத்துக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அன்பளிப்புக்கு ஏற் புடையனவாதலாகாது"

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 இஇ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உடபிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், '(ஈ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனத்திடமிருந்து அல்லது உள்ளூரதிகார சபையிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஏதேனும் கடன் மீதான தொகையொன்றல்லாததுமான ஏதேனும் தொகை,'; என்னும் சொல்லமைப்பை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக "(ஈ) என்னும் பந்தியில் குறிப்பிட்ப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனத்திடமிருந்து அல்லது உள்ளூரதிகாரசபையிடமிருந்து கிடைக்க பெற்ற ஏதேனும் கடன் மீதான தொகையொன்றல்லாததுமான ஏதேனும் தொகை, அல்லது" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்' அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின் வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(எ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் மா கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவினுல் எந்தக் கம்பனியோடு உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்பட்டுள்ளதோ அந்தக் கம்பனியில் ஏலவே உளதான பங்குகள் தவிர்ந்த வேறு சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்வதில் 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் முதலீடு செய்யப்படும் ஏதேனும் பணத் தொகை,"

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16உ என்னும் பிரிவை உடனடுத்து பின் வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்ட வாக்கத்தின் 16ஊ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:—

வரி விதித்தற்குரிய வருமானத்தைக் கணிப்பதில், மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்பட வேண்டிய அங்கீகரிக்கப் பட்ட செலவினங்களுக்கான விடுதொகைகள்.

16ஊ. (1) இப்பிரிவில் "அங்கீகரிக்கப்பட்ட செலவினம்" என்பது—

(அ) இலங்கை அரசாங்கத்துக்கு, உள்ளூரதிகார சபையொன்றுக்கு, இலங்கை அரசாங்கத்தால் தாபிக்கப்பட்ட நிதியமொன்றுக்கு அல்லது உள்ளூரதிகார சபையொன்றால் தாபிக்கப் பட்டு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதான நிதியமொன்றுக்குப் பணமாக அல்லது வேறு விதத்தில் வழங்கப்பட்ட அன்பளிப்பொன்றும் அத்துடன்

(ஆ) அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டம் தொடர்பில் எவரேனும் ஆளால் உறப்பட்ட செலவினம் —

(i) அமைச்சரின் எழுத்திலான முன் அங்கீகாரத்தோடும் ; அத்துடன்

(ii) அத்தகைய எழுத்திலான அங்கீகாரம் வழங்கப்படுகின்ற நேரத்தில் அமைச்சரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு இணங்கவும்,

உறப்பட்டதாயிருக்குமெனின் அத்தகைய செலவினமும்

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, பணம் தவிர்ந்த வேறு விதத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பொன்றின் தொகையே, அத்தகைய அன்பளிப்பின் பெறுமதியாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெறுமதியே —

(i) அன்பளிப்பவருக்கு அன்பளிப்புச் செய்யப்படும் ஆதனத்தின் உண்மையான செலவு தொகையாகவிருத்தலும் வேண்டும், அல்லது

(ii) உண்மையான செலவு தொகையை நிச்சயிக்க முடியாதவிடத்து, அன்பளிப்புச் செய்யப்படும் ஆதனத்தின் சந்தைப் பெறுமதியாகவிருத்தலும் வேண்டும்.

(3) ஏதேனும் மதிப்பீட்டாண்டில் மனைவியின் அல்லது பிள்ளையின் மதிப்பிடற்குரிய வருமானம் முழுவதும், எக்குடும்பத்தில் அத்தகைய மனைவி அல்லது பிள்ளை உறுப்பினர் ஒருவராயுள்ளாரோ அக்குடும்பத்தின் தலைவரது மதிப்பிடற்குரிய வருமானத்தோடு கூட்டுமொத்தமாக்கப்படுமிடத்து. அத்தகைய மனைவியால் அல்லது பிள்ளையால் வழங்கப்பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட செலவினம் இப்பிரிவின் நோக்கங்களுக்கென அக்குடும்பத்தின் தலைவரால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட செலவினமொன்றாய் இருத்தல் வேண்டுமெனக் கருதப்படல்வேண்டும்.

(4) 1978, ஏப்ரல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டில் எவரேனுமாளினால் உறப்பட்ட அல்லது உறப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தொகை, அத்தகைய செலவினம் எந்த மதிப்பீட்டாண்டில் உறப்பட்டதோ அல்லது உறப்பட்டுள்ளதாகக் கருதப்பட்டதோ அந்த மதிப்பீட்டாண்டை உடனடுத்துப் பின்வரும் மதிப்பீட்டாண்டுக்கு அவ்

வாளின் மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து இயன்றவரை கழிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது அவ்வாறு கழிக்கப் படமுடியாத அளவுக்கு, அப்பொழுது, அடுத்துப் பின்வரும் மதிப்பீட்டாண்டிற்கும் அவ்வாறே தொடர்ந்தும், அவ்வாளின் மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்படுதலும் வேண்டும்.''.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்

"(1அ) 1969 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1977 ஏப்பிறில் 1ஆம் தேதிக்குப் பிந்தாமல் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கென, பிள்ளையோ அல்லது தங்கிவாழும் உறவினரோ இல்லாது கணவன் மனைவியைக் கொண்டுள்ள குடும்பம் ஒன்றுக்கு, அத்தகைய கணவன் மனைவி தொடர்பில் மூவாயிரத்து அறுநூறு ரூபாக்கொண்ட விடுதொகையொன்று அவ்வாண்டுக்காக அவரது வரிவிதித்தற்குரிய வருமானத்தை மதிப்பிடுவதில், அத்தகைய குடும்பத்தில் தலைவரது அவ்வாண்டுக்கான மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.'';

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1ஆ) 1978 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கென, பிள்ளையோ அல்லது தங்கிவாழும் உறவினரோ இல்லாது கணவன் மனைவியைக் கொண்டுள்ள குடும்பமொன்றுக்கு, அவ்வாண்டுக்கான வரிவிதித்தற்குரிய அவரது வருமானத்தை மதிப்பிடுவதில், அத்தகைய குடும்பத்தின் தலைவரது அவ்வாண்டுக்கான மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து அத்தகைய கணவன் மனைவி தொடர்பில் ஐயாயிரம் ரூபாக்கொண்ட விடுதொகையொன்று கழிக்கப்படுதல் வேண்டும்.''.

(3) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும்:—

"(2அ) 1969 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 1977 ஏப்பிறில் 1ஆம் தேதிக்குப் பிந்தாமல் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கென, கணவன் மனைவியையும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் அல்லது தங்கிவாழும் உறவினர்களையும், அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் தங்கிவாழும் உறவினர்களையும் கொண்டுள்ள குடும்பமொன்றுக்கு, அந்தக் கணவன் மனைவி தொடர்பில் மூவாயிரத்து அறுநூறு ரூபாக்கொண்ட விடுதொகை ஒன்றும், அத்துடன் —

(அ) அக்குடும்பத்தில் ஒரு பிள்ளை அல்லது தங்கிவாழும் ஓர் உறவினர் இருப்பாரெனின், அத்தகைய பிள்ளை அல்லது தங்கிவாழும் உறவினர் தொடர்பில், அறுநூறு ரூபாக் கொண்ட விடுதொகை ஒன்றும்,

(ஆ) அக்குடும்பத்தில் இரண்டு பிள்ளைகள் அல்லது தங்கிவாழும் இரு உறவினர்கள், அல்லது ஒரு பிள்ளையும் தங்கிவாழும் ஓர் உறவினரும் இருப்பாரெனின், அத்தகைய பிள்ளைகள் அல்லது அத்தகைய தங்கிவாழும் உறவினர்கள் தொடர்பில் அல்லது அத்தகைய பிள்ளையும் தங்கிவாழும் அத்தகைய உறவினரும் தொடர்பில் அறுநூறு ரூபாக் கொண்ட விடு தொகை ஒன்றும்,

(இ) அக்குடும்பத்தில் மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள், அல்லது மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளும், அத்துடன் தங்கிவாழும் உறவினர்களும், அல்லது தங்கிவாழும் உறவினர்கள் மூவர் அல்லது மூவருக்கு மேற் பட்டவர்களும் இருப்பார்களெனின், விடயத்துக்கேற்றவாறு அத்தகைய பிள்ளைகள் தொடர்பில், அல்லது அத்தகைய பிள்ளைகளும் தங்கிவாழும் உறவினர்களும் தொடர்பில், அல்லது தங்கிவாழும் அத்தகைய உறவினர்கள் தொடர்பில் ஓராயிரத்து இருநூறு ரூபாக் கொண்ட விடுதொகை ஒன்றும்,

அவ்வாண்டுக்காக வரிவிதித்தற்குரிய அவரது வருமானத்தை மதிப்பிடுவதில், அத்தகைய குடும்பத்தின் தலைவரது அவ்வாண்டுக்கான மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.'';

(4) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(2ஆ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கென கணவன் மனைவியையும், ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் அல்லது தங்கிவாழும் உறவினர்களையும், அல்லது ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் தங்கி வாழும் உறவினர்களையும் கொண்டுள்ள குடும்பமொன்றுக்கு அந்தக் கணவன் மனைவி தொடர்பில் ஐயாயிரம் ரூபாக்கொண்ட விடுதொகையொன்றும், அத்துடன்

(அ) ஒரு பிள்ளை அல்லது தங்கிவாழும் ஓர் உறவினர் இருப்பாரெனின், அத்தகைய பிள்ளை அல்லது தங்கிவாழும் உறவினர் தொடர்பில், ஓராயிரம் ரூபாக்கொண்ட விடுதொகை ஒன்றும்,

(ஆ) இரண்டு பிள்ளைகள் அல்லது தங்கிவாழும் இரு உறவினர்கள், அல்லது ஒரு பிள்ளையும் தங்கிவாழும் ஓர் உறவினரும் இருப்பாரெனின், அத்தகைய பிள்ளைகள் அல்லது தங்கிவாழும் உறவினர்கள் அல்லது அத்தகைய பிள்ளையும் அத்தகைய தங்கிவாழும் உறவினரும் தொடர்பில், இரண்டாயிரம் ரூபாக் கொண்ட விடுதொகையொன்றும்,

(இ) மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள், அல்லது மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளும் தங்கிவாழும் உறவினர்களும், அல்லது மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட தங்கிவாழும் உறவினர்களும் இருப்பார்களெனின், விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய பிள்ளைகள் தொடர்பில் அல்லது அத்தகைய பிள்ளைகளும் தங்கிவாழும் உறவினர்களும் தொடர்பில் அல்லது அத்தகைய தங்கிவாழும் உறவினர்கள் தொடர்பில் மூவாயிரம் ரூபாக்கொண்ட விடுதொகையொன்றும்,

அவ்வாண்டுக்கான வரிவிதித்தற்குரிய அவரது வருமானத்தை மதிப்பிடுவதில், அத்தகைய குடும்பத்தின் தலைவரது அவ்வாண்டுக்கான மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.'';

(5) அப்பிரிவின் (3அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(3அ) 1969 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1977 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்குப் பிந்தாமல் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கென, ஒரு தனியாளையும் இரண்டு பிள்ளைகளையும் அல்லது தங்கிவாழும் உறவினர்களையும், அல்லது ஒரு தனியாளையும் ஒரு பிள்ளையையும் தங்கிவாழும் ஓர் உறவினரையும் கொண்டுள்ள குடும்பமொன்றுக்கு, விடயத்துக்கேற்றவாறு அத்தகைய தனியாள் தொடர்பில் மூவாயிரம் ரூபாக்கொண்ட விடுதொகையொன்றும், அத்தகைய பிள்ளை அல்லது தங்கிவாழும் உறவினர் தொடர்பில், அல்லது அத்தகைய பிள்ளைகள் அல்லது தங்கிவாழும் உறவினர்கள் தொடர்பில் அல்லது அத்தகைய பிள்ளையும் அத்தகைய தங்கிவாழும் உறவினரும் தொடர்பில் அறுநூறு ரூபாக்கொண்ட விடுதொகையொன்றும், அவ்வாண்டுக்காக வரிவிதித்தற்குரிய அவரது வருமானத்தை மதிப்பிடுவதில், அத்தகைய குடும்பத்தின் தலைவரது அவ்வாண்டுக்கான மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்படுதல்.'';

(6) அப்பிரிவின் (4ஆ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

''(4ஆ) 1969 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1977 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்குப் பிந்தாமல் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கென, ஒரு தனியாளையும் மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் அல்லது மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட தங்கிவாழும் உறவினர்களையும் அல்லது மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் தங்கிவாழும் உறவினர்களையும் கொண்டுள்ள குடும்பமொன்றுக்கு, அத்தகைய தனியாள் தொடர்பில் மூவாயிரம் ரூபாக் கொண்ட விடுதொகையொன்றும், அத்துடன் அத்தகைய பிள்ளைகள் அல்லது தங்கிவாழும் உறவினர்கள் தொடர்பில் அல்லது அத்தகைய பிள்ளைகளும், தங்கிவாழும் உறவினர்களும் தொடர்பில் ஓராயிரத்து இருநூறு ரூபாக் கொண்ட விடுதொகையொன்றும், அவ்வாண்டுக்காக வரிவிதித்

தக்குரிய அவரது வருமானத்தை மதிப்பிடுவதில், அத்தகைய குடும்பத்தின் தலைவரது அவ்வாண்டுக்கான மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.'';

(7) அப்பிரிவின் (4ஆ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(5இ) 1978 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கென ஒரு தனியாளையும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் அல்லது தங்கிவாழும் உறவினர்களையும், அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளையும் தங்கிவாழும் உறவினர்களையும் கொண்டுள்ள குடும்பமொன்றுக்கு, அத்தகைய தனியாள் தொடர்பில் மூவாயிரம் ரூபாக்கொண்ட விடுதொகை யொன்றும், அத்துடன்—

(அ) ஒரு பிள்ளை அல்லது தங்கிவாழும் ஓர் உறவினர் இருப்பாரெனின், அத்தகைய பிள்ளை தொடர்பில் அல்லது தங்கிவாழும் உறவினர் தொடர்பில் ஓராயிரம் ரூபாக்கொண்ட விடுதொகையொன்றும்,

(ஆ) இரண்டு பிள்ளைகள் அல்லது தங்கிவாழும் இரு உறவினர்கள், அல்லது ஒரு பிள்ளையும் தங்கிவாழும் ஓர் உறவினரும் இருப்பாரெனின், அத்தகைய பிள்ளைகள் அல்லது அத்தகைய தங்கிவாழும் உறவினர்கள் தொடர்பில், அல்லது அத்தகைய பிள்ளையும் அத்தகைய தங்கிவாழும் உறவினரும் தொடர்பில், இரண்டாயிரம் ரூபாக்கொண்ட விடுதொகையொன்றும்,

(இ) மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள், அல்லது மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளும் தங்கிவாழும் உறவினர்களும் அல்லது மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட தங்கிவாழும் உறவினர்களும் இருப்பார்களெனின், அத்தகைய பிள்ளைகள் தொடர்பில் அல்லது அத்தகைய பிள்ளைகளும் தங்கிவாழும் உறவினர்களும் தொடர்பில் அல்லது அத்தகைய தங்கிவாழும் உறவினர்கள் தொடர்பில், மூவாயிரம் ரூபாக்கொண்ட விடுதொகையொன்றும்,

அவ்வாண்டுக்காக வரிவிதித்தற்குரிய அவரது வருமானத்தை மதிப்பிடுவதில் அத்தகைய குடும்பத்தின் தலைவரது அவ்வாண்டுக்கான மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.''; அத்துடன்

(8) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், ''(2) ஆம் உட்பிரிவு'' எனத் தொடங்கி ''4ஆ என்னும் உட்பிரிவு'' என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக; ''(2) ஆம் உட்பிரிவு அல்லது (2அ) என்னும் உட்பிரிவு அல்லது (2ஆ) என்னும் உட்பிரிவு அல்லது (3) ஆம் உட்பிரிவு அல்லது (3அ) என்னும் உட்பிரிவு அல்லது (4) ஆம் உட்பிரிவு அல்லது (4ஆ) என்னும் உட்பிரிவு அல்லது (4இ) என்னும் உட்பிரிவு'' என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்.''

13. (1976ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவு, இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின் வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:...

"(ஊ) 1976 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற மதிப்பீட்டாண்டுக்கும் அம்மதிப்பீட்டாண்டினை உடனடுத்துவரும் ஆண்டுக்கும் ஆன வருமானவரியானது இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் VII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்";

(ஆ) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(எ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கான வருமான வரியானது, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையின் VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணிக்கப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "அல்லது VII ஆம் பாகம்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "அல்லது, VIII ஆம் பாகம்" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்"

14. (1976 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகிறது: -

(1) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவ்தன் மூலமும்:—

"(ஏ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் VII ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், 1976 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற மதிப்பீட்டாண்டிற்கும் அதனை உடனடுத்து வரும் மதிப்பீட்டாண்டிற்கும் அத்தனியாளுக்கு அவை ஏற்புடையனவாகுவதில், விடயத்துக்கேற்றவாறு அவ்வட்டவணையில் அப்பாகத்தில் கூறப்பட்ட அத்தகைய பணத்தொகைகள் ஒவ்வொன்றும், அல்லது 23அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் கூறப்பட்ட விதத்தில் கணிக்கப்பட்ட பணத்தொகைகளின் கூட்டுமொத்தத்தொகை அவர் வதிவிலுள்ள நாட்களின் எண்ணிக்கை அத்தகைய நேர் முந்திய ஆண்டிலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்குக் கொண்டுள்ள விகிதாசாரத்தின்படி கழிக்கப்பட்டதென்றுற்போன்று ஏற்புடையனவாதல் வேண்டும்;" அத்துடன்

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(ஐ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் VII ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு, அத்தனியாளுக்கு அவை ஏற்புடையனவாகுவதில், விடயத்துக்கேற்றவாறு அவ்வட்டவணையின் அப்பாகத்தில் கூறப்பட்ட அத்தகைய பணத்தொகைகள் ஒவ்வொன்றும், அல்லது 23 அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் கூறப்பட்ட விதத்தில் கணிக்கப்பட்ட பணத்தொகைகளின் கூட்டுமொத்தத்தொகை, அவர் வதிவிலுள்ள நாட்களின் எண்ணிக்கை அத்தகைய நேர்முந்திய ஆண்டிலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்குக் கொண்டுள்ள விகிதாசாரத்தின்படி கழிக்கப்பட்டதென்றாற்போன்று ஏற்புடையனவாதல் வேண்டும்."

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அப்பிரிவின் (1 அ) என்னும் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும்பந்தியின் (ii) ஆம் உட் பந்தியில் "35 சதவீதம்" என்னும் சொல்லுக்கும் எண்ணுக்கும் பதிலாக "3 சதவீதம்; அத்துடன்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(இ) 1978 ஏப்பிறில் 1ம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டு தொடர்பிலும், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தி இடப்பட்டிருந்தாற்போலவும்:—

"(ஆ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கென கம்பனியினால் எந்தப் பங்கிலாபங்கள் தொடர்பில் வருமானவரி மதிப்பிடப்பட்டதோ அல்லது வருமானவரி செலுத்தப்பட்டதோ அந்தப் பங்கிலாபங்கள் அல்லாதவையும், ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கென அத்தகைய கம்பனியின் வரிசெலுத்தற்குரிய வருமானம் எந்த இலாபங்களின் மீது கணிக்கப்படுகின்றதோ அந்த இலாபங்களிலிருந்து, அம்மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டில் அக்கம்பனியினால் பகிர்ந்தளிக்கப்பட்டவையுமான மொத்தப் பங்கிலாபங்களின் கூட்டுமொத்தத் தொகையின் $33\frac{1}{3}$ சதவீதத்துக்குச் சமமான பணத்தொகையையும்;";

(2) அப்பிரிவின் (1 ஆ) என்னும் உட்பிரிவை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(1 ஆ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், 1976 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு; கம்பனியொன்று எந்த வருமானவரி செலுத்துவதற்கு உள்ளதாதல் வேண்டுமோ அந்த வருமான வரியானது, அத்தகைய மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டு முழுவதிலும், அல்லது அத்தகைய மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் விடயத்தில், அது கூட்டிணைக்கப்பட்ட தேதியிலிருந்து நேர்முந்திய ஆண்டின் இறுதிவரையில் அக்கம்பனி மக்கள் கம்பனியொன்ருக இருந்திருந்தால். பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) அத்தகைய மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய கம்பனியின் வரி செலுத்தற்குரிய வருமானத்தின் நாற்பது சதவீதத்துக்குச் சமமானதொரு பணத்தொகையும், அத்துடன்

(ஆ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கெனக் கம்பனியினல் எந்தப் பங்கிலாபங்கள் தொடர்பில் வருமானவரி மதிப்பிடப்பட்டதோ அல்லது வருமானவரி செலுத்தப்பட்டதோ அந்தப் பங்கிலாபங்கள் அல்லாதவையும், ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கென அத்தகைய கம்பனியின் வரி செலுத்தற்குரிய வருமானம் எந்த இலாபங்களின் மீது கணிக்கப்படுகின்றதோ அந்த இலாபங்களிலிருந்து அம்மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டில் அக்கம்பனியினல் பகிர்ந்தளிக்கப்பட்டவையுமான மொத்தப் பங்கிலாபங்களின் கூட்டு மொத்தத் தொகையின் $33\frac{1}{3}$ சதவீதத்துக்குச் சமமானதொரு பணத்தொகையும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, 'மக்கள் கம்பனி" என்பது, இலங்கையில் வதிவுள்ளதும், அத்துடன் அது தொடர்பில் பின்வருவன பற்றி மதிப்பீட்டாளரைத் திருப்திப்படுத்துவதாயுள்ளதுமான கம்பனி என்று பொருளாகும்:—

(i) அது கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட ஒரு தனியார் கம்பனியல்லதெனவும்!

(ii) 1979 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதியின் விடயத்தில். அக்கம்பனியிலுள்ள பங்காளர்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கு மேற்பட்டிருப்பதெனவும். அத்தேதியன்று அல்லது அத்தேதிக்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதியின் விடயத்தில். நூறுக்கு மேற்பட்டிருப்பதெனவும், அத்துடன் இரண்டிலொன்றின் விடயத்தில், ஒவ்வொரு பங்கினதும் பெயரளவிலான பெறுமதி பத்து ரூபாவுக்கு மேற்படாததெனவும்;

(iii) கம்பனியால் செய்யப்பட்ட எவையேனும் பங்குகளின் பகிர்வில், அல்லது பகிரங்கச் சந்தையில் கம்பனியின் ஒரு பங்கில் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளில் எவரேனும் ஆள் முதலீடு செய்யலாம் எனவும்;

(iv) ஆளெவரேனும் தனியாகவோ அல்லது அவரது மனைவியுடன் அல்லது பராயமடையாத பிள்ளைகளுடன் சேர்ந்தோ நேரடியாக அல்லது நியமத்தர்கள் மூலமாகக் கம்பனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில்,—

(அ) 1979 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதியின் விடயத்தில், பத்துச்சத வீதத்துக்கு மேற்பட வைத்திருக்காதவராயும், அத்துடன்

(ஆ) 1979 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதியின் விடயத்தில், ஐந்து சதவீதத்துக்கு மேற்பட வைத்திருக்காதவராயும்,

உள்ள ஒரு கம்பனி எனவும்;

(v) மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிப்பாளர்களைக் கொண்டதும், அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு பங்கை அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருப்பவர்களாய் உள்ளவருமான ஒரு கம்பனி எனவும்;

(vi) கம்பனியின் பணிப்பாளர்களுள் எவரும் வேறு ஏதேனும் மக்கள் கம்பனியில் பணிப்பாளராகப் பதவி வகிக்கவில்லை எனவும்; அத்துடன்

(vii) இக்கம்பனியில் வேறு ஏதேனும் கம்பனி, நேரடியாகவோ அல்லது நியமத்தர்கள் மூலமாகவோ 1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் பங்கை வைத்திராத ஒரு கம்பனி எனவும்''.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:—

"(அநந) உலக உல்லாசப்பிரயாண ஒழுங்கமைப்பு;"

17. முதன்மை சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது,

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஆஆ) மதிப்பீட்டாண்டுக்கு நேர் முந்திய ஆண்டில் அவர் இலங்கையில் வதிவில்லாதிருந்த அத்தகைய மதிப்பீட்டாண்டாகவும், அல்லது முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டாண்டை அடுத்துறும் மூன்று மதிப்பீட்டாண்டுகளில் ஏதேனும் ஒன்றாகவும் உள்ள விடத்து, 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்

(பஇ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறுக அத் தகைய ஏதேனும் கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் அவரது வரவிருக்கும் பணங்கள்; " ;

(2) அவ்வுட்பிரிவின் (ஞ) என்ற பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்—

" (ஞ) அம்மதிப்பீட்டாண்டு 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற விடத்து, ஆகக்கூடிய பெறுமதி இருபத்தையாயிரம் ரூபா என்பதற்கமையவும், அத்துடன் அம்மதிப்பீட்டாண்டு 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்றவிடத்து, ஆகக்கூடிய பெறுமதி ஐம்பதினுயிரம் ரூபா என்பதற்கமையவும் அவருக்குச் சொந்தமாயிருக்கின்ற ஏதேனும் நகை, அல்லது அவர் குடும்பமொன்றின் தலைவராய் இருப்பாரெனின் அவருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் சொந்தமாயிருக்கின்ற ஏதேனும் நகை; " ;

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:—

" (1) ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பில் ஆளொருவரினுல் கொடுத்துதவப்பட்ட செல்வ விபரத்திரட்டிற்கிணங்க அத்தகைய ஆள் குடும்பமொன்றின் தலைவராக இருக்குமிடத்து, அக்குடும்பத்தின் உறுப்பினரொருவராகவுள்ள தனியாள் ஒவ்வொருவரினதும் செல்வமும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அக்குடும்பத் தலைவரினது செல்வத்தின் பாகமாக அமைவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற்கிணங்க, அத்தகைய எல்லா உறுப்பினர்களினதும் தேறிய செல்வத்தின் பெறுமதி, அக்குடும்பத் தலைவரின் அம்மதிப்பீட்டாண்டிற்கான தேறிய செல்வத்துடன் கூட்டு மொத்தமாக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்—

(அ) 1964, மார்ச் 31 ஆம் தேதியன்று முடிவடையும் மதிப்பீட்டாண்டிற்கான அக்குடும்பத்தலைவரின் கூட்டு மொத்தமாக்கப்பட்ட தேறிய செல்வம் ஓர் இலட்சம் ரூபாவாகுமிடத்து அல்லது அதை விஞ்சுமிடத்து அத்தகைய தேறிய செல்வமும்,

[ஆ] 1964 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனல் 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான அக்குடும்பத் தலைவரின் கூட்டு மொத்தமாக்கப்பட்ட தேறிய செல்வம், ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து, ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சுவதான அவரது தேறிய செல்வத்தின் அத்தகைய பாகமும். அத்துடன்

(இ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான அக்குடும்பத் தலைவரின் கூட்டு மொத்தமாக்கப்பட்ட தேறிய செல்வம், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சிமிடத்து, இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சுவதான அவரது தேறிய செல்வத்தின் அத்தகைய பாகமும்,

அம்மதிப்பீட்டாண்டிற்கான அவரது வரிவிதித்தற்குரிய செல்வமாகுமென் பதோடு, அக்குடும்பத் தலைவர் அத்தகைய வரிவிதித்தற்குரிய செல்வம் தொடர்பில் செல்வவரி செலுத்துவதற்கும் ஆளாவார்.'':

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

'' (2) (அ) 1964 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக, ஓர் இலட்சம் ரூபாவையும், அத்துடன்

(ஆ) 1978 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக, இரண்டு இலட்சம் ரூபாவையும்,

விஞ்சுவதான, குடும்பமொன்றில் அல்லது அறக்கொடை நிறுவனமொன் றில், உள்ளடக்கப்பட்டவரான தனியாளொருவர் தவிர்ந்த ஆளொரு வரின் தேறிய செல்வத்தின் அத்தகைய பாகம், அம்மதிப்பீட்டாண்டிற் கான அவரது வரிவிதித்தற்குரிய செல்வமாதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வரி விதித்தற்குரிய செல்வம் தொடர்பில் அத்தகைய ஆள் செல்வ வரிக்கு ஆளாதலும் வேண்டும்''.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகிறது:—

''அறக்கொடை நிறுவன மொன்றின் வரிவிதித்தற் குரிய செல்வம்

34 (1) (அ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக, அறக் கொடை நிறுவனமொன்றின் தேறிய செல்வம், ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய நிறு வனத்தின் வரிவிதித்தற்குரிய செல்வமாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரிவிதித்தற்குரிய செல்வம் தொடர்பில் அத்தகைய நிறுவனம் செல்வ வரிக்கு ஆளாதலும் வேண்டும்.

(ஆ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக, அறக்கொடை நிறுவனமொன்றின் தேறிய செல்வம் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய தேறிய

செல்வம் முழுவதும் அத்தகைய நிறுவனத்தின் வரிவிதித்தற்குரிய செல்வமாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரி விதித்தற்குரிய செல்வம் தொடர்பில் அத்தகைய நிறுவனம் செல்வ வரிக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக, அறக்கொடை நிறுவனமொன்றின் வரிவிதித்தற்குரிய செல்வம் தொடர்பில் அந்நிறுவனம் செலுத்துவதற்கு ஆளாகும் செல்வ வரித் தொகையானது. அந்நிறுவனத்தின் வரிவிதித்தற்குரிய செல்வம் எத்தொகையினால் ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சுகிறதோ அத்தொகையை எவ்விடயத்திலும் விஞ்சுதலாகாது.

(ஆ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக, அறக்கொடை நிறுவனமொன்றின் வரி விதித்தற்குரிய செல்வம் தொடர்பில் அந்நிறுவனம் செலுத்துவதற்கு ஆளாகும் செல்வரித் தொகையானது, அந்நிறுவனத்தின் வரிவிதித்தற்குரிய செல்வம் எத்தொகையினால் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சுகிறதோ அத்தொகையை எவ்விடயத்திலும் விஞ்சுதலாகாது.".

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"குறித்த சில சூழ்நிலைகளில் செல்வவரி குறைக்கப்படுதல்

38. (1) 1972 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்குப் பிந்தாமல் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்காக எவரேனுமாளினால் செலுத்தப்படற்பாலதான செல்வ வரி, அம்மதிப்பீட்டாண்டுக்கான அவரது மதிப்பிடப்பிடற்குரிய வருமானத்தின் ஐம்பது சதவீதத்தினை விஞ்சுதலாகாது.

(2) 1977 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்காக எவரேனுமாளினால் செலுத்தப்படற்பாலதான செல்வவரி, அம் மதிப்பீட்டாண்டுக்கான அவ்வாளின் மதிப்பிடற்குரிய வருமானத்தினதும், அத்துடன் இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் விலக்களிக்கப்பட்டு இலாபங்களாகவும் வருமானமாகவும் உள்ளவையும், இவை அவ்வாறு விலக்கப்பட்டிராதவிடத்து, அம்மதிப்பீட்டாண்டுக்கான அவ்வாளின் மதிப்பிடற்குரிய வருமானத்தை கணிப்பதில்

கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்க கூடியவையுமான எவையேனும் இலாபங்களினதும் வருமானத்தினதும் (வதிவிடமொன்றின் தேறிய ஆண்டுப் பெறுமதியையும் இச்சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் மானியத்தையும் தவிர) கூட்டு மொத்தத் தொகையின் எண்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது."

22, முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் என்னும் பிரிவு, அப்பிரிவிலுள்ள "1978, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்கும்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:—

"1976, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டுக்கு".

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:—

"(இ) 1965 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று, அல்லது அதற்குப் பின்னர், ஆனல் 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்கும், இச்சட்டத்திற்கான ஆறும் அட்டவணையின் I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் அல்லது வீதங்களில்; அத்துடன்";

(2) அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(ஈ) 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்கும் இச்சட்டத்திற்கான ஆறும் அட்டவணையின் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் அல்லது வீதங்களில்."

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:—

"(இ) அத்தகைய தனியாளின் எவரேனும் பிள்ளைக்கு, அத்தகைய பிள்ளை இருபத்தொரு வயதுக்கு மேற்பட்டிருந்தாலும் சரி அல்லது குறைவாக இருந்தாலும்சரி, அத்தகைய பிள்ளையின் திருமணத்தைக் கருதி, அத்தகைய ஒவ்வொரு பிள்ளையின் திருமணம் தொடர்பிலும், 1977 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்குமிடத்து ஆகக்கூடிய பெறுமதி பத்தாயிரம் ரூபா என்பதற்கமையவும், அத்துடன்

1977 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்குமிடத்து ஆகக்கூடிய பெறுமதி இருபத்தையாயிரம் ரூபா என்பதற்கமையவும்;"

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவானது, அதிலுள்ள "அவரது பெற்றோரின் வருமானத்துடன் கூட்டுமொத்தமாக்கப்படலாகாது'.' என்னும் சொற்களுக்குப் பதிலாக அவரது பெற்றோரின் வருமானத்துடன் கூட்டுமொத்தமாக்கப்படலாகாது:

ஆயின், 1975 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்கும் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், "இருபத்தைந்து வயது" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "இருபத்தொரு வயது" என்னும் சொல்லமைப்பு இடப்பட்டிருந்தாற்போன்று ஏற்புடையனவாதல் வேண்டும்.' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(8) 1970 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டில் தனியாளொருவர் இலங்கையை விட்டு வெளியேறி, அவர் இலங்கையை விட்டு வெளியேறிய தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட குறைந்தபட்சம் பன்னிரண்டு மாதங்களைக்கொண்ட காலத்துக்கு இலங்கைக்குத் திரும்பாதிருக்குமிடத்து, அவர் எத்தேதியில் இலங்கையை விட்டு வெளியேறினாரோ அத்தேதியில் தொடங்கி அவர் இலங்கைக்குத் திரும்பி இலங்கையில் வதிவு உள்ளவராகும் அத்தேதியன்று முடிவடைகின்ற காலத்துக்கு, இலங்கைக்கு வெளியில் ஏதேனுமிடத்தில் ஊழியத்தில் இருந்ததிலிருந்து எழுகின்ற அல்லது பெறப்பட்ட அவரது இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்".

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 69இ என்னும் பிரிவு, "1975 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் தேதிக்கு முன்னர்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"1978 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் தேதிக்கு முன்னர், அல்லது அம்மதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து மூன்றாண்டுகளுக்குள், இவற்றுள் எத்தேதி பிந்தியதோ அத்தேதியிலிருந்து".

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(10) தேசிய அரசுப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆளொருவரின் விடயத்தில், அத்தகைய ஆளுக்கு அரசாங்கத்தினால்—

(அ) ஏற்பாடு செய்யப்பட்ட வதிவிடத்தின் வாடகைப் பெறுமதியும்,

(ஆ) பதவிக்குரிய வாகனத்தைப் பேணுவதற்காக அத்தகைய ஆ க் கொடுப்பனவு செய்யப்படும் படியும், அத்துடன்

(இ) அத்தகைய ஆளுக்குக் கொடுப்பனவு செய்யப்படும் மாதாந்த ஊதியத்திலிருந்து எழுநூறு ரூபாப் பணத்தொகையும்,

அப்பதவியிலிருந்து அத்தகைய ஆளுக்குக் கிடைக்கின்ற இலாபங்களையும் வருமானத்தையும் நிச்சயிப்பதில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாகாது.''.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73ஆ என்னும் பிரிவானது, "1976 ஆம் ஆண்டு ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கு நேர்முந்திய ஆண்டில்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"1976 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டுக்கு நேர்முந்திய ஆண்டில் அல்லது 1977 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டுக்கு நேர் முந்திய ஆண்டில்.''.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "1976 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கு நேர்முந்திய ஆண்டில்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"1976 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டுக்கு நேர்முந்திய ஆண்டில், அல்லது 1977 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டுக்கு நேர்முந்திய ஆண்டில்.''.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73ஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "1976 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டின் போது'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"1976 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டின்போது, அல்லது 1977 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டின்போது.''.

32 முதன்மைச் சட்டவாக்கத்தின் 73உ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "1976 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்

தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டில்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"1976 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டில் அல்லது 1977 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டில்,''.

*33.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:

"(1) எவரேனும் ஆளின் வருமானம், செல்வம் அல்லது நன்கொடைகள் பற்றியும், அத்துடன் அவருக்கு மனைவி. (முற்றிலும் தொழிலிலிருந்து பெறப்பட்ட வருமானத்தைப் பெறுகின்ற பிள்ளையொன்று தவிர்ந்த) பிள்ளை அல்லது தங்கி வாழும் உறவினர் உள்ளாரெனின், அத்தகைய மனைவியின், பிள்ளையின் அல்லது தங்கிவாழும் உறவினரின் வருமானம் அல்லது செல்வம் பற்றியும் விபரத் திரட்டினைக் கொடுத்துதவுவதற்கு அவரைத் தேவைப் படுத்தி மதிப்பீட்டாளர் ஒருவரால் அவருக்கு எழுத்தில் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கியொழுக அவ்வாள் தவறுகின்றவிடத்து, அல்லது 96 ஆ (4) என்னும் பிரிவின்கீழ் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட விபரத் திரட்டினைக் கொடுத்துதவுவதற்குத் தவறுகின்றவிடத்து அவ்வாளை -

(அ) அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அல்லது அத்தகைய பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியமைக்கான தண்டமாக இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றினைச் செலுத்தும்படியும், அத்துடன்

(ஆ) அத்தகைய விபரத்திரட்டினைக் குறித்துரைக்கப்பட்ட காலமொன்றுக்குள் கொடுத்துதவும்படியும்,

ஆணையாளர் தலைமையதிபதி எழுத்தில் கட்டளையிடலாம்.

*34.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2 ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது—

"(2) ஆளொருவர், வருமானம், செல்வம், அல்லது நன்கொடைகள்பற்றிய விபரத்திரட்டு ஒன்றினைச் கொடுத்துதவியுள்ளவிடத்து. மதிப்பீட்டாளர்—

(அ) அவ்விபரத்திரட்டை ஏற்றுக்கொண்டு அதற்கிணங்க மதிப்பீடொன்றைச் செய்யலாம்; அல்லது

(ஆ) அவ்விபரத்திரட்டை அவர் ஏற்காவிட்டால், அத்தகைய ஆளின் மதிப்பிடற்குரிய வருமானத்தொகை, வரிவிதித்தற்குரிய செல்வம் அல்லது வரிவிதித்தற்குரிய நன்கொடைகள் என்பனவற்றை மதிப்பிட்டு அதற்கிணங்க அவரை மதிப்பீடு செய்து, அத்தகைய ஆளுடைய விபரத்திரட்டினை ஏற்காமைக்கான காரணங்களை அவ்வாளுக்கு எழுத்தில் அறிவிக்கலாம்.'',

35. முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:—

"94. ஏதேனும் மதிப்பீட்டாண்டில் வருமானவரி, செல்வ வரி அல்லது நன்கொடை வரி விதிக்கப்படுவதற்கு உட்பட்டுள்ள எவரேனுமாள் மதிப்பீடு செய்யப்படவில்லையென அல்லது முறையான தொகையிலும் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளாரென மதிப்பீட்டாளரொருவருக்குத் தோன்றுகின்றவிடத்து, மதிப்பீட்டாளர் அவரது கருத்திற்கிணங்க அத்தகைய ஆள் எத்தொகைக்கு அல்லது எந்த மேலதிகத் தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டுமோ அத்தொகைக்கு அல்லது அந்த மேலதிகத் தொகைக்கு அத்தகைய ஆளை மதிப்பீடு செய்யலாமென்பதுடன், மதிப்பீட்டு அறிவித்தல், மேன்முறையீடு, வேறு நடவடிக்கைகள் என்பன பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய மதிப்பீட்டுக்கும் அல்லது மேலதிக மதிப்பீட்டுக்கும் அதன்கீழ் அறவிடப்படும் வரிக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆயின் —

(அ) (i) 1972 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பில், அம்மதிப்பீட்டாண்டின் இறுதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னரும்,

(ii) முறையே 1972 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று 1973 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அத்துடன் 1974 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கிய மதிப்பீட்டாண்டுகள் தொடர்பில், 1979 மார்ச்சு 31 ஆம் தேதிக்குப் பின்னரும், அத்துடன்

(iii) 1975 ஏப்றில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பில், அம் மதிப்பீட்டாண்டின் இறுதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரும்,

இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதும், விடயத்துக்கேற்ப வருமான வரி அல்லது செல்வ வரி பற்றியதும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டில் செய்யப்பட்டு அந்த மதிப்பீட்டாண்டை அடுத்துப் பின்வரும் மே மாதம் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன் முன்னர் அவரினாற் செய்யப்பட்ட விபரத்திரட்டில் நன்கொடையளிப்பவரினால் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் நன்கொடை தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான நன்கொடை வரி பற்றியதுமான மதிப்பீடு எதுவும் செய்யப்படலாகாது;

(ஆ) ஏதேனும் மதிப்பீட்டாண்டில் எவரேனும் ஆள் மதிப்பீடு செய்யப்படாமை அல்லது குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டமை, மோசடி காரணமாகவோ அல்லது வேண்டுமென்று தட்டிக் கழித்தல் காரணமாகவோ நிகழ்ந்திருக்குமிடத்து, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், அம்மதிப்பீட்டாண்டின் முடிவுக்குப் பின்னர் எந்நேரத்திலேனும் ஒரு மதிப்பீடோ அல்லது மேலதிக மதிப்பீடோ செய்யப்படலாம்; அத்துடன்

(இ) மதிப்பீட்டாளர், ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக எவரேனும் ஆளால் அனுப்பப்பட்ட விபரத்திரட்டு ஒன்றினை ஏற்காமல் அம் மதிப்பீட்டாண்டிற்கென அவ்வாளின் மதிப்பீடொன்றைச் செய்கின்ற விடத்து, விபரத் திரட்டினை ஏற்காமைக்கான அவரது காரணங்களை அத்தகைய ஆளுக்கு அவர் எழுத்தில் அறிவிக்க வேண்டும்"

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 96ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது; —

"(4) 1972 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு வருமானவரி, செல்வவரி, அல்லது நன்கொடை வரி அறவிடற்படற்குரியவரான ஒவ்வோர் ஆளும் அத்தகைய வரி, வருமான வரி. செல்வ வரி அல்லது நன்கொடை வரி என்பதற்கிணங்க, அவரது வருமானம், செல்வம் அல்லது நன்கொடைகள் பற்றியும், அவருக்கு மனைவி, (முழுவதும் தொழிலால் வரும் வருமானத்தைப் பெறும் பிள்ளையொன்று தவிர்ந்த) பிள்ளை அல்லது தங்கிவாழும் உறவினர் இருப்பாரெனின் அத்தகைய மனைவியின், பிள்ளையின் அல்லது தங்கி வாழும் உறவினரின் வருமானம் அல்லது செல்வம் பற்றியும் ஆன விபரத் திரட்டு ஒன்றினை ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில்—

(அ) அம்மதிப்பீட்டாண்டு, 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குமிடத்து, அத்தகைய வரியின் காலாண்டுத் தவணைப் பணக் கொடுப்பனவைச் செய்யும் நேரத்திலும்; அத்துடன்

(ஆ) அம்மதிப்பீட்டாண்டு, 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குமிடத்து, அம்மதிப்பீட்டாண்டுக்கு நேர் முற்போந்த மதிப்பீட்டாண்டில் மே 15 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும்,

கொடுத்துதவுதல் வேண்டும்".

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(3) ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கென ஏதேனும் வருமானவரி செல்வ வரி, அல்லது நன்கொடை வரி அறவிடப்படற்குரியவரான எவரேனும் ஆள், அம்மதிப்பீட்டாண்டிற்கான அவ்வரியின் காலாண்டுத், தவணைப் பணமாக, மதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி அத்தகைய தவணைப்பணமாக அவர் செலுத்தியிருக்க வேண்டிய முறையான தொகைக்கும் குறைந்த தொகையொன்றைச் செலுத்தியிருக்குமிடத்து, மதிப்பீட்டாளர், அவரது கருத்தின்படி அத்தகைய ஆளால் எந்தத் தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டுமோ அந்தத் தொகையை மதிப்பீடு செய்யலாம் என்பதுடன், அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கும் அவ்வாளால் செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையில்

ஏதேனும் மேன்முறையீட்டின் மீதான அமைச்சரின் முடிவு இறுதியானதும் முற்றுனதுமாதல் வேண்டும்.

(3) மூன்றும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சிறப்புக் கணக்கில் அவரது வரவில் இருக்கும் எவையேனும் பணங்களை 6 ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தில் குறிப்பிடப்பட்ட எவையேனும் நோக்கங்களுக்காக 1979 ஏப்பிரில் 30 ஆம் தேதிக்குப் பின்னர் கைமீட்கின்ற எவரேனும் ஆள், அத்தகைய பணங்கள் எந்த நோக்கத்துக்காகக் கைமீட்கப்பட்டனவோ அந்த நோக்கத்துக்காக அவற்றைப் பயன்படுத்தத் தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதோடு, நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், கைமீட்கப்பட்ட பணத்துக்குச் சமமான ஒரு தொகையையும் இருபதினுயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு தொகையையும் குற்றப்பணமாகச் செலுத்த ஆளாதலும் வேண்டும்.

(4) வேறேதேனும் சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய சிறப்புக் கணக்கில் அவரது வரவில் இருக்கும் பணங்களை 1979 ஏப்பிரில் மாதம் 1 ஆம் தேதிக்குப் பின்னர் கைமீட்டு அப்பணங்களை 6 ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் எவரேனும் ஆளின் 1979, ஏப்பிரில் மாதம் 1 ஆம் தேதியன்றே அதன் பின்னரோ தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கான வரியிடக்கூடிய வருமானத்தைக் கணிக்கையில், அந்த மதிப்பீட்டாண்டுக்கான அத்தகைய ஆளின் மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து அவ்வாறு பயன்படுத்தப்பட்ட பணங்கள் தொடர்பில் கழிப்பு எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

7. நான்காம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரி செலுத்தப்பட்டதன் பின்னர் 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய எதேனும் சிறப்புக் கணக்கில் எவரேனும் ஆளின் வரவில் இருக்கும் மீதித் தொகை மீது சேமிப்புக் கணக்குகளின் வரவில் இருக்கும் பணங்கள் மீது வங்கியினுற் செலுத்தப்பட வேண்டிய நடப்பு வட்டி வீதத்திலான வட்டி, வங்கியினுல் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு வருமதியாகத் திரளும் வட்டி, 1979, ஏப்பிரல் மாதம் 30 ஆம் தேதிக்குப் பின்னர் அவ்வாளால் கைமீட்கப்படலாம்.

8. இச்சட்டம் ஏற்புடையதாகின்றவரும் 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கில் பணங்களை வைப்பிட்டுள்ளவரும், அந்தப் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரியைக் கொடுத்துள்ளாரென 4 ஆம் பிரிவின் கீழ்க் கருதப்படுபவரும் ஆன எவரேனும் ஆள், பின்வருவனவற்றுக்கு ஆளாகமாட்டார்; அதாவது

(அ) 1977 ஏப்பிரில் மாதம் 1 ஆம் தேதியன்றே அதன் முன்னரோ தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்காக—

(i) வருமானவரி விதித்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் ஏதேனும் வருமானவரியை அல்லது செல்வ வரியை, அல்லது.

(ii) 1971 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கம், மூலதன வரிச் சட்டத்தின் கீழ் மூலதனவரியை,

அத்தகைய பணங்களாற் பிரதிபலிக்கப்படும் இலாபங்கள் அல்லது வருமானங்கள் அல்லது செல்வம் தொடர்பில் அல்லது அத்தகைய இலாபங்கள் அல்லது வருமானம் எந்த மொத்த விற்பனை வரவில் இருந்து எழுந்தனவோ அந்த மொத்த விற்பனை வரவின் மேல் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் 1977 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதியன்றோ அதன் முன்னரோ முடிவடையும் ஏதேனும் காலாண்டுக்கான தொழில் மொத்த வரவு வரி எதையும் செலுத்துவதற்கு ஆளாகமாட்டார்; அல்லது.

(ஆ) வருமானவரி விதித்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் அல்லது 1971 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, மூலதனவரிச் சட்டத்தின் கீழ் அல்லது 1962 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க' நிதிச் சட்டத்தின் கீழ், 1977 ஏப்பிரில் மாதம் 1 ஆம் தேதியன்றோ அதன் முன்னரோ தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டு சம்பந்தமாக அல்லது 1977 ஏப்பிரில் மாதம் 1 ஆம் தேதிக்கு முந்திய ஏதேனும் காலம் சம்பந்தமாக, அத்தகைய பணங்களால் பிரதிபலிக்கப்படும் இலாபங்கள், அல்லது செல்வம் வருமானங்கள் தொடர்பில் அல்லது அத்தகைய இலாபங்கள் அல்லது வருமானம் எந்த மொத்த விற்பனை வரவில் இருந்து எழுந்தனவோ அந்த மொத்த விற்பனை வரவு தொடர்பில், தவறெதற்கும் அவர்க்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ஆளாக மாட்டார்.

9. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும், வருமானவரி விதித்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1978 நவம்பர் மாதம் 15 ஆம் தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டை அல்லது மேற் சொல்லப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் இறுதியானதும் முற்றானதுமாகிவிட்ட வேறேதேனும் கருமத்தை மீள ஆராய்வதற்கு அதிகாரமளிப்பதாக வாசிக்கப்படுதலோ பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

10. (1) வங்கியின் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும், அத்துடன் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும், இச்சட்டத்தை நடைமுறைக்கிடும்போது அவரது அறிவுக்கு எட்டிய எல்லா விடயங்கள் சம்பந்தமாகவும் இரகசியத்தைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், இரகசியத்தைப் பேணுவதற்கு உதவுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் நோக்கத்துக்கென, வங்கியின் அலுவலர் அல்லது ஊழியர் ஒருவர், 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளனவும் அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்குப் பற்றியனவுமான பின்வரும் விபரங்களை, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு, அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது நீதிமன்றமொன்றிற்குத் தெரிவிக்கலாம்; அதாவது—

42, முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) "கைத்தொழிற் பொறுப்பு முயற்சி" என்பதற்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:—

"கைத்தொழிற் பொறுப்பு முயற்சி" என்பது 10 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக —

(அ) எந்தப் பொறுப்பு முயற்சியின் விடயத்தில் அப்பொறுப்பு முயற்சியில் செய்யப்பட்ட வேலையின் கணிசமான பாகமொன்றின் நோக்கங்களுக்கெனப் பொறிமுறை வழிகள் பயன்படுத்தப்படவில்லையென ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடைகிருரோ அந்தப் பொறுப்பு முயற்சி தவிர, பொறிமுறை வழிகளால் எவையேனும் பொருட்களை, பண்டங்களை அல்லது சாமான்களைத் தயாரித்தலுக்கான அல்லது உற்பத்தி செய்தலுக்கான, அல்லது பொறிமுறை வழிகளால் எவையேனும் பொருட்களை, பண்டங்களை அல்லது சாமான்களை ஏதேனும் பதப்படுத்துதலுக்கு உட்படுத்துவதற்கான அல்லது சுரங்கமறுத்தலுக்கான அல்லது அச்சிடுவதற்கான அல்லது எந்திரத் தொகுதிகளை அல்லது வாகனங்களை அல்லது கலன்களைப் பழுதுபார்த்தலுக்கனா ஒரு பொறுப்பு முயற்சி என, அல்லது

(ஆ) ஆட்களை அல்லது பண்டங்களை ஏற்றியிறக்குவதற்கான ஒரு பொறுப்பு முயற்சி என, அல்லது

(இ) கரைக்கண்மையில் மீன்பிடித்தலுக்கான அல்லது ஆழ்கடலில் மீன் பிடித்தலுக்கான ஒரு பொறுப்பு முயற்சி என,

பொருளாகும்; " ; அத்துடன்

(ஆ) "எழுதிய பெறுமதி" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்: —

' " 1957 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னரோ, அல்லது சட்டமுறையான வருமானமானது, ஆணையாளர் தலைமையதிபதியின் பணிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு மார்ச்சு முப்பத்தோராம் நாள் தவிர்ந்த அத்தகைய வேறு ஏதேனும் நாள் வரையிலும் கணிக்கப்படவேண்டுமென 12 (2) ஆம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினுல் பணிக்கப்பட்டுள்ளவிடத்து, 1957 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டுக்கு நேர்முந்திய ஆண்டில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நாளுக்கு முன்னரோ கொள்வனவு செய்யப்பட்ட பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் எவற்றையும் குறிப்பிடும்போது "எழுதிய பெறுமதி" என்பது அவரால் கொள்வனவு செய்யப்பட்ட தேதியிலிருந்து, ஆனுல் 1977 மார்ச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் அத்தகைய பொறித் தொகுதியில்,எந்திரத்தொகுதியில் அல்லது பொருத்திகளில் ஏற்பட்ட மொத்த மதிப்பிறக்கத்தைக் குறைக்கும் ஒரு பணத்தொகையிலாவதும் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்புவாச

கத்தின் கீழ் கழிக்கப்பட்ட ஏதேனு பணத்தொகையினதும் கூட்டு மொத்தத்தைக் கழித்த பின்னர், அதன் சொந்தக்காரருக்கு ஏற்பட்ட அதன் செலவு தொகையின் மீதியும் எனப்பொருளாகும்; அத்துடன் அத்தகைய செலவுதொகையானது அத்தகைய பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது பொருத்திகள் தொடர்பில் வருமானவரிக் கட்டளைச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (ஈ) (1) என்னும் பந்தியின்கீழ் (உ) (1) என்னும் பந்தியின்கீழ் ஏதேனும் கழிவு அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய உண்மையான செலவு தொகைக்கும் அந்தக் கழிவு தொகைக்குமிடையிலான வித்தியாசத் தொகையாகக் கருதப்படுதல் வேண்டும்;'.

43. முதன்மைச்சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது ;—

(1) வதிவில்லாத தனியாட்கள் தொடர்பிலான விடயத்தில்—

(அ) அவ்விடயத்தின் (ஊ) என்னும் பந்தியில் "1976, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"1976 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கும், அதனை உடனடுத்துவரும் மதிப்பீட்டாண்டிற்கும்"; அத்துடன்

(ஆ) அவ்விடயத்தின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(எ) 1978, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும்—

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் முதல் 15,000 ரூபாவின் மீது 15 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவின் மீது 20 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவின் மீது 25 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவின் மீது 30 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவின் மீது 40 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவின் மீது 50 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவின் மீது 60 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் மிகுதியின் மீது 70 சதவீதம்"; அத்துடன்

(2) "(இலங்கை அரசாங்கமும் ஐக்கிய இராச்சிய அரசாங்கமும் தவிர்ந்த வேறு) அரசாங்கங்கள்" தொடர்பிலான விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலமும் "(இலங்கை அரசாங்கமும் ஐக்கிய இராச்சிய அரசாங்கமும் தவிர்ந்த வேறு) அரசாங்கங்கள் —

இலங்கை அரசாங்கமும் ஐக்கிய இராச்சிய அரசாங்கமும் தவிர்ந்த வேறு அரசாங்கங்களின் வரிவிதித்தற்குரிய வருமானம்—

(அ) 1965 ஏப்பிறில் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் 63 சதவீதம்

(ஆ) 1965 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனல் 1978 ஏப்பிறில் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் 56 சதவீதம்

(இ) 1978 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் 66 சதவீதம்".

44. முதன்மைச்சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அவ்வட்டவணையின் VIIஆம் பாகத்தில் காணப்படும், "1976, ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"1976 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கும் அதனை உடனடுத்துறும் மதிப்பீட்டாண்டிற்கும்", அத்துடன்

(2) அவ்வட்டவணையின் VIIஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"பாகம் VIII

1978, ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான வருமான வரி வீதங்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் முதல் 1800 ரூபாவின் மீது $7\frac{1}{2}$ சதவீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 1800 ரூபாவின் மீது 10 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின் மீது $12\frac{1}{2}$ சதவீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின் மீது 16 சத வீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின் மீது 20 சத வீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின் மீது 25 சத வீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின் மீது 30 சத வீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின் மீது 35 சத வீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 4800 ரூபாவின் மீது 40 சத வீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின் மீது 45 சத வீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின் மீது 50 சத வீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின் மீது 55 சத வீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின் மீது 60 சத வீதம்,

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின் மீது 65 சத வீதம்.

வரிவிதித்தற்குரிய வருமானத்தின் மிகுதியின் மீது 70 சதவீதம்.'',

45. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஆறும் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணை இடப்படுகிறது : –

"ஆறும் அட்டவணை

பாகம் I

1965 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனல் 1978 ஏப்பிறில் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டின்போது அளிக்கப்பட்ட நன்கொடைக்கான நன்கொடை வரியானது, 1974 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு நேர்முந்திய ஆண்டின் போது அளிக்கப்பட்ட நன்கொடைகளுக்கு வரிவிதித்தற்குரிய எல்லா நன் கொடைகளினதும் பெறுமதியின் முதல் 50,000 ரூபாவின் மீதான வீதம், அவ்வட்டவணையின் அப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள 5 சதவீதத்திற்குப்பதிலாக 3 சதவீதமாதல் வேண்டுமென்ற வேறுபாட்டுக்கமைய, ஐந்தாம் அட்டவணையின் IIஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட அதே வீதமாதல் அல்லது வீதங்களாதல் வேண்டும்.

## பாகம் II

1978, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு நேர் முந்திய ஆண்டின்போது அளிக்கப்பட்ட நன்கொடைகளுக்கான நன்கொடை வரிவீதங்கள், பின்வருவனவாதல் வேண்டும்: —

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் முதல் 50,000 ரூபாவின் மீது இல்லை.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 30,000 ரூபாவின் மீது 5 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 30,000 ரூபாவின் மீது 7½ சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 30,000 ரூபாவின் மீது 10 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 40,000 ரூபாவின் மீது 13 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 50,000 ரூபாவின் மீது 14 சதவீதம்,

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 100,000 ரூபாவின் மீது 16 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 100,000 ரூபாவின் மீது 18 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 100,000 ரூபாவின் மீது 24 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 100,000 ரூபாவின் மீது 30 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 125,000 ரூபாவின் மீது 32 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 125,000 ரூபாவின் மீது 36 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 2,00,000 ரூபாவின் மீது 42 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 3,50,000 ரூபாவின் மீது 48 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 5,00,000 ரூபாவின் மீது 55 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் அடுத்த 6,00,000 ரூபாவின் மீது 60 சதவீதம்.

வரிவிதித்தற்குரிய எல்லா நன்கொடைகளினதும் பெறுமதியின் மிகுதியின் மீது 70 சதவீதம். ”

## 1978 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க வரி மன்னிப்புச் சட்டம்

*(1978, நவம்பர் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**வருமானவரி விதித்தல் பற்றிய சட்டத்தின் கீழ் ஆள் ஒருவர் சேர்த்துவைத்த எந்த இலாப வருமானங்கள் தொடர்பில் வருமானத் திரட்டைக் கொடுத்துதவாது விட்டிருக்கின்றாரோ, அல்லது மேற்படி சட்டத்தின் கீழ் அவ்வாளால் கொடுத்துதவப்பட்ட ஒரு திரட்டில் எந்தச் சேர்த்துவைத்த இலாப வருமானங்களை வெளிவிடாமல் விட்டாரோ அந்த சேர்த்துவைத்த இலாப வருமானங்களை பிரதிபலிக்கும் பணங்களைத் தேசிய சேமிப்பு வங்கியில் சிறப்புக் கணக்கில் வைப்பிடுவதை இயலக்கூடியதாகச் செய்வதற்கும்; அத்தகைய சிறப்புக் கணக்குகளில் வைப்பிடப்பட்ட பணங்கள் மீது வரி விதிப்பதற்கும், அறவிடுவதற்கும்; அத்தகைய சிறப்புக் கணக்குகளில் வைப்பிடப்பட்ட பணங்களைக் குறிப்பிட்ட நோக்கங்களுக்காகக் கைமீட்பதை இயலக்கூடியதாகச் செய்வதற்கும்; அத்தகைய சிறப்புக் கணக்குகளில் பணங்களை வைப்பிடும் ஆட்களுக்கு அத்தகைய பணங்களைப் பிரதிபலிக்கின்ற இலாப வருமானங்கள் தொடர்பிலான குறித்த சில வரிகளைச் செலுத்துவதறகான பொறுப்பிலிருந்து காப்பளிப்பதற்கும், அத்தகைய இலாப வருமானங்கள் தொடர்பிலான தவறுகளுக்காக அவர்களுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படாதவாறு அவ்வாட்களுக்குக் காப்பளிப்பதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ஆன ஒரு சட்டம்.**

1. இச் சட்டம் 1978 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, வரி மன்னிப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதோடு, 1978 திசெம்பர் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, வரி விதித்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் 1977 ஏப்பிரில் மாதம் 1 ஆம் தேதியன்றோ அல்லது அதன் முன்னரோ தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீடு ஆண்டுக்காக, 1977 மார்ச்சு மாதம் 31 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ எழுகின்ற அல்லது வருமதியாகத் திரளுகின்ற எவையேனும் இலாப வருமானங்கள் தொடர்பில் அத்தகைய வரியைச் செலுத்துவதற்கு ஆளாக இருந்தவரும், அத்துடன் அத்தகைய ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்காக அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வருமான வரித் திரட்டொன்றைக் கொடுத்துதவாதவரும், அல்லது அத்தகைய ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்காக அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவராற் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் திரட்டில் அத்தகைய இலாபங்களை அல்லது வருமானத்தை வெளிவிடத் தவறியுள்ளவருமான ஆள் எவருக்கும் இச் சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள், வருமானவரி விதித்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1977, மார்ச்சு மாதம் 31 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ எழுகின்ற அல்லது வருமதியாகத் திரளுகின்ற எவையேனும் இலாப வருமானங்கள் தொடர்பிற் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் வரியைச் செலுத்தாமற் தட்டிக்கழித்தார் என்ற சார்த்துரையின் பேரில் அல்லது சந்தேகத்தின் பேரில் எவ்வாள் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியால் அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் வேறெவரேனும் அலுவலரால் நுண்ணாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவோ அவ்வாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகின்ற ஆளாக இல்லாத வரும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவரும் ஆன ஒவ்வோர்ஆளும், இந்தச் சட்டத்தில் இனிமேல் ''இச்சட்டம் ஏற்புடையதாகின்ற ஆள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

3. இச்சட்டம் ஏற்புடையதாகின்ற எவரேனும் ஆள், 1977, மார்ச்சு 31 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ எழுந்த அல்லது வருமதியாகத் திரண்ட சேர்த்துவைத்த இலாபங்களை அல்லது வருமானத்தைப் பிரதிபலிக்கும் பணமாக அமைகின்றதும், அத்துடன், வருமானவரி விதித்தல் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ்—

(அ) எத்தொகை தொடர்பில் வருமானத் திரட்டுக் கொடுத்துதவ அத்தகைய ஆள் தவறியுள்ளாரோ அத்தொகையாக அமைகின்றதும்; அல்லது.

(ஆ) அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் வருமானத் திரட்டில் எத்தொகையை அத்தகைய ஆள் வெளிவிடத்தவறியுள்ளாரோ அத்தொகையாக அமைகின்றதும்—

ஆன பணங்களை வைத்திருக்கின்றவிடத்து, அப்போது, அத்தகைய ஆள், அப்பணங்களை 1979 மார்ச்சு மாதம் 31 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ வங்கியில் அந்த நோக்கத்துக்கென அவரால் திறக்கப்படக்கூடிய அத்தகைய சிறப்புக் கணக்கில் அவரது பேரில் வைப்பிடலாம்.

4. (1) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வங்கியில் ஒரு சிறப்புக் கணக்கில் பணங்களை வைப்பிடும் ஒவ்வோராளும்—

(அ) இந்தச் சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் அமைந்த வெளிப்படுத்துகை ஒன்றை வங்கிக்குச் செய்தல் வேண்டும்; அத்துடன்.

(ஆ) அவ்வாறு வைப்பிடப்பட்ட பணங்களின் 30 சத வீதத்துக்குச் சமமான தொகையுடைய ஒரு வரியை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்த ஆளாதல் வேண்டும்,

(2) ஒராமுட்பிரிவின் கீழ் எவரேனும் ஆளினால் செலுத்தப்படற் பாலதான வரியானது, எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கில் அத்தகைய ஆளின் வரவில் இருக்கும் பணத்திலிருந்து 1979, ஏப்பிரில் மாதம் 30 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னேரோ வங்கியினால் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) மூன்றும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கில் எவரேனும் ஆளின் வரவில் இருக்கின்ற பணங்களிலிருந்து (2) ஆம் உட்பிரிவின் கீழான வரியை ஆணையாளர் தலைமையதிபதிக்கு வங்கி செலுத்துவது அத்தகைய ஆளால் அதிகாரமளிக்கப்பட்ட செலுத்துகையாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரி அவ்வாளால் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**5.** வேறேதேனும் சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கில் எவையேனும் பணங்களை வைப்பிட்டுள்ள ஆள், 1983 ஏப்பிரில் 1 ஆம் தேதிக்கு முன்னர் 4 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வரி செலுத்தப்பட்டதன் பின்னர் அத்தகைய சிறப்புக் கணக்கில் அத்தகைய ஆளின்வரவில் இருக்கும் மீதிப் பணத்தொகை முழுவதையுமோ அல்லது அதன் பாகம் எதையுமோ (அத்தகைய மீதித்தொகை மீது வருமதியாகத் திரளும் வட்டி தவிர) 6 ஆம் பிரிவிற்கு குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக வன்றிக் கைமீட்பதை வங்கி அனுமதித்தலாகாது.

**6.** (1) மூன்றும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான அத்தகைய ஏதேனும் சிறப்புக் கணக்கில் எவையேனும் பணங்களை வைப்பிட்டுள்ள எவரேனும் ஆள், 4 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரி செலுத்தப்பட்டதன் பின்னர், அத்தகைய சிறப்புக் கணக்கில் அவரது வரவில் இருக்கும் மீதித்தொகையை 1983, மார்ச்சு 31 ஆம் தேதிக்குப் பின்னர் கைமீட்கலாம்:

ஆயின், எப்படியிருப்பினும், அத்தகையை ஆள், 1979, ஏப்பிரில் 30 ஆம் தேதிக்குப் பின்னர் அத்தகைய மீதித்தொகை முழுவதையும் அல்லது அதன் பாகம் எதனையும் பின்வரும் நோக்கங்களுக்காக கைமீட்கலாம்:—

(அ) சாதாரண பங்குகளை—

(i) 1963 இன் 4 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16 இஇ என்னும் பிரிவின்கீழ் அல்லது இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமானதென இந்தப் பிரிவின் கீழ் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கம்பனியில் வாங்குதல்; அல்லது,

(ii) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மாகொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் மாகொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள ஏதேனும் கம்பனியில் வாங்குதல்; அல்லது,

(ஆ) 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கம், உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16ஊ என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள் அங்கீகரிக்கப்பட்ட செலவினமாக உள்ள ஏதேனும் செலவினத்தைச் செய்தல்; அல்லது.

(இ) ஒரு வீட்டை வாங்குதல் அல்லது கட்டியமைத்தல், தேசிய வீடமைப்பு ஆணையாளரின் கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் அவரால் அங்கீகரிக்கப்பட்டிருப்பின், அவ்வாறு வீட்டை வாங்குதல் அல்லது கட்டியமைத்தல்.

(2) ஒராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக ஒரு வீட்டை வாங்குதலை அல்லது கட்டியமைத்தலை அங்கீகரிப்பதற்குத் தேசிய வீடமைப்பு ஆணையாளர் மறுக்குமிடத்து, அத்தகைய மறுப்பினால் இன்னலுறும் ஆள் எவரும், அதற்கெதிராக, வீடமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய

வித்தியாசப்படும் தொகையை உடனடியாகச் செலுத்தும்படி எழுத்திலான அறிவித்தல் மூலம் அவ்வாளைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்: ஆயின் —

(அ) (i) முறையே 1972 ஏப்பிறில் 1 ஆம் தேதி, 1973 ஏப்பிறில் 1 ஆம் தேதி, 1974, ஏப்பிறில் 1 ஆம் தேதி ஆகிய தேதிகளில் தொடங்கும் மதிப்பீட்டாண்டுகள் தொடர்பில், 1979 மார்ச்சு 31 ஆம் தேதிக்குப் பின்னரும், அத்துடன்,

(ii) 1975 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பில், அம்மதிப்பீட்டாண்டின் இறுதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரும்,

இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரி அல்லது செல்வ வரி பற்றிய அல்லது ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டில் செய்யப்பட்டு அந்த மதிப்பீட்டாண்டை அடுத்துப் பின்வரும் மே மாதம் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன் முன்னர் அவரினுற் செய்யப்பட்ட நன்கொடைகள் பற்றிய விபரத்திரட்டில் நன்கொடையளிப்பவரினுல் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் நன்கொடை தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான நன்கொடை வரி பற்றிய மதிப்பீடு எதுவும் செய்யப்படலாகாது.

(ஆ) இவ்வுட்பிரிவின் கீழ் எத்தனியாளுக்கு மதிப்பீடொன்று செய்யப்பட்டதோ அத்தனியாள் தொடர்பில், முற்போந்த இவ்வேற்பாடுகளுக்கிணங்க மேலதிகமதிப்பீடொன்றை மதிப்பீட்டாளர் செய்வதனை இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும் தடை செய்தலாகாது;

(இ) ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆள் மதிப்பீடு செய்யப்படாமை அல்லது குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டமை, மோசடி காரணமாகவோ அல்லது வேண்டுமென்று தட்டிக்கழித்தல் காரணமாகவோ நிகழ்ந்திருக்குமிடத்து, இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், அம்மதிப்பீட்டாண்டின் முடிவுக்குப் பின்னர் எந்நேரத்திலும் ஒரு மதிப்பிட்டோ அல்லது மேலதிக மதிப்பிட்டோ செய்யப்படலாம்;

(ஈ) மதிப்பீட்டாளர், ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக எவரேனும் ஆளால் அனுப்பப்பட்ட விபரத்திரட்டு ஒன்றினை ஏற்காமல் அம்மதிப்பீட்டாண்டிற்கென அவ்வாளின் மதிப்பீடொன்றைச் செய்கின்றவிடத்து, விபரத்திரட்டினை ஏற்காமைக்கான அவரது காரணங்களை அத்தகைய ஆளுக்கு அவர் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.''

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவு, அப்பிரிவின் (12) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(12 அ) மேன்முறையீடு தொடர்பில் மேன்முறையீட்டாளரினது அல்லது வேறு எவரேனும் ஆளினது சான்றினை ஆணையாளர் தலைமையதிபதி கேட்கின்றவிடத்து, அத்தகைய சான்று பற்றிய பதிவொன்றினை அவர் பேணுதல் வேண்டும் அல்லது பேணுவித்தல் வேண்டும்.''.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது;—

"(1 அ) ஆணையாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்றைப் பெற்றதன் மேல்—

(அ) ஆணையாளர் தலைமையதிபதியால் 97 (7) ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலுக்கிணங்க அவரால் கொடுத்துதவப்பட்ட ஆவணங்கள், ஆட்களின் பெயர்கள் என்பன பற்றிய நிரலின் பிரதியொன்றையும், அத்துடன்

(ஆ) 97 (12 அ) என்னும் பிரிவின் கீழ் பேணிவரப்பட்ட சான்றுப் பதிவுப் பிரதியொன்றையும்,

சபைக்கு அனுப்புதல் வேண்டும்."

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(அ) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீளவிலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(2) (அ) ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு ஆளொருவர் எந்தச் செல்வவரிக்கு ஆளாகவுள்ளாரோ அந்தச் செல்வவரியினதும், அத்துடன்

(ஆ) அம்மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆள் எந்த வருமானவரிக்கு ஆளாகவுள்ளாரோ அவ்வருமானவரியினதும். கூட்டுமொத்தம், அம்மதிப்பீட்டாண்டிற்கான அவ்வாளின் மதிப்பிடற்குரிய வருமானத்தினதும், அத்துடன் இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவையும் அவ்வாறு விலக்களிக்கப்படாதிருப்பின் அத்தகைய மதிப்பீட்டாண்டிற்கான அவ்வாளின் மதிப்பிடற்குரிய வருமானத்தைக் கணிப்பதில் கணக்கிற்கு எடுத்திருக்கப்படவேண்டியதுமான எவையேனும் இலாபங்களினதும் வருமானத்தினதும் (வதிவிடமொன்றின் தேறிய ஆண்டுப் பெறுமதியும் இச்சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் மானியமும் நீங்கலாக) கூட்டுமொத்தத்தில் எண்பது சதவீதத்தை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய விஞ்சு தொகையானது, அம்மதிப்பீட்டாண்டிற்கு எந்தச் செல்வவரிக்கு அவர் ஆளாகவுள்ளாரோ அந்தச் செல்வ வரிக்கு எதிராக ஈடு செய்யப்படுதல் வேண்டும்,".

41. முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "88 (1). 107 (6)" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "88 (1). 96 ஆ (4) 107 (6)" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(அ) கணக்கு வைத்திருப்பவரின் பெயரும், வருமானவரிக் கோப்பு இலக்கமும்;

(ஆ) தொழிலின் பெயர் எதுவுமிருப்பின் அப்பெயரும், வருமானவரிக் கோப்பு இலக்கமும்;

(இ) வைப்புத் தேதி அல்லது கைமீட்புத் தேதி

(ஈ) வைப்பிட்ட தொகை அல்லது கைமீட்ட தொகை;

(உ) அத்தகைய சிறப்புக் கணக்குத் தொடர்பில் 4 (1) (அ) என்னும் பிரிவின் கீழ் கூறப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவையான அத்தகைய வேறு விபரங்கள்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செலாற்றும் வங்கியின் அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அலுவலர் அல்லது ஊழியர் எவரும், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

11. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுதினலன்றி—

''ஆணையாளர்தலைமையதிபதி'', ''இலாபங்கள்'', ''வருமானம் ''வரி மதிப்பீட்டாண்டு' என்னும் சொல்லமைப்புக்கள், முறையே 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ள அதே பொருள்களையுடையனவாதல் வேண்டும்;

''வங்கி'' என்பது 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினல் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி எனப் பொருளாகும்;

''வருமானவரி விதித்தல் பற்றிய அப்போதைக்கான சட்டம்'' என்பது வருமானவரிக் கட்டளைச் சட்டம் என அல்லது 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் எனப் பொருளாகும்.

''ஆள்'' என்பது ஒரு கம்பனியையும், ஓர் ஆட்கள் குழுவையும் ஒரு பங்குடைமையையும் உள்ளடக்கும்.

பிரிவு 4 (1) (அ)

அட்டவணை

1978 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வரி மன்னிப்புச் சட்டம்

4 (1) (அ) என்னும் பிரிவின் கீழான வெளிப்படுத்துகை

வருமானவரிக் கோப்பு இல.
(ஏதேனுமிருப்பின்) :..........................

சிறப்பு மன்னிப்புச் சேமிப்புக்கள் வைப்புக் கணக்கு இல.:.........

தொழிலின் பெயர்:
(ஏதேனுமிருப்பின்):....................

தேதி:.. ......

.................................................................................. என்னும் இடத்தைசேர்ந்த
(முகவரி)

திரு./திருமதி/செல்வி..........................................................................................
(முழுப்பெயர்)

ஆகிய நான்/நாம், இத்தால்—

(1) பின்வருமாறு செய்யும்படி உங்களை வேண்டிக்கொள்கிறேன்/கொள் கிறோம்:—

(அ) 1978 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ''வரிமன்னிப்பு''ச் சட்டத்தின் நியதிகளின்படி, ... ...... ...... .............. ........ என்னுமிடத்தைச் சேர்ந்த....... .. ......... .............. .......... என்பவரின் பெயரில் சிறப்பு மன்னிப்புச் சேமிப்புக்கள் வைப்புக் கணக்கில் இடப்படுவதற்கென...... ...... .......... ............ ... ரூபாவான பணத்தொகையை (ரூபா ஏற்றுக்கொள்ளவும்.

(ஆ) இத்தொகையின் மீது வருமதியாகவுள்ள.................................... ரூபாத் தொகையினதான (ரூபா ) வரியை, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு நேரடியாகவே அனுப்பவும்.

(இ) அந்தக் கணக்கில் உள்ள மீதித்தொகையை வைத்திருக்கவும்.

ஒப்படைக்கப்பட்ட தொகை ரூபா .. ..................

கழிபடற்பாலதான 30% வரியைக் கழிக்க

ரூபா ......... ......... ......

---

மீதிப் தொகையானது தேசிய சேமிப்பு வங்கியினால் சிறப்பு மன்னிப்புச் சேமிப்புக்கள் வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்படற்பாலது.

---

(2) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 6 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகவன்றி, 1983, ஏப்பிரில் 1 ஆம் தேதிக்கு முன்னர் இந்த மீதித் தொகையின் எப்பாகத்தையும் கைமீட்கமாட்டேன்/கைமீட்கமாட் டோம் என்று உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம்;

(2) எனது/எமது சிறப்பு மன்னிப்புச் சேமிப்புக்கள் வைப்புப் பாசுப் புத்தகத்தை உங்கள் ஏமமான கட்டுக்காவலில் வைத்திருப்பதற்கு உடன்படு கிறேன்/உடன்படுகிறோம்;

(4) உங்கள் வங்கியிலுள்ள சேமிப்பு வைப்புக்கள் பற்றிய அப்போதைக் கானவையும் காலத்துக்குக் காலம் வலுவுக்கு வரக்கூடியவையுமான விதி களினால் பிணிக்கப்பட்டவராக/பிணிக்கப்பட்டவர்களாக இருப்பேன்/இருப் போம் என்று மேலும் உடன்படுகிறேன்/உடன்படுகிறோம்.

...... ...... ...... ..........................

வைப்பிடுபவரின் ஒப்பம்

எனது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது

......................................................

கிளை முகாமையாளரின் ஒப்பம்.

## 1978ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க
## இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுதாபனச் சட்டம்

(1978ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைத் தாபிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம்.

1. இச்சட்டம், 1978ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்; (அது இதனகத்துப் பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்.)

### பாகம் I

### இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அமைப்பு

2. (1) இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட வேண்டியதான ஒரு கூட்டுத்தாபனம் தாபிக்கப்படுதல்வேண்டும்; அது இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" என்று குறிப்பீடு செய்யப்படும்.

(2) கூட்டுத்தாபனம், (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல்வேண்டும் என்பதுடன், இடையறு வழியுரிமையும், பொது இலச்சினையொன்றும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அது, அத்தகைய பெயரைக்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனம், அமைச்சரின் முன்னங்கீகாரத்தோடு, இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியில் கிளை அலுவலகங்களையும் தாபிக்கலாம்.

3. (1) கூட்டுத்தாபன அலுவல்களின் முகாமையும் நிருவாகமும், பணிப்பாளர் சபை ஒன்றுக்கு உரித்தாக்கப்படல்வேண்டும்; அது இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும். அச்சபை அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல்வேண்டும்:—

(அ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச்சரால் நியமிக்கப்படும் தவிசாளர் ஒருவர் ;

(ஆ) பணச்சபையால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் ஒருவர் ;

(இ) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவர் ;

(ஈ) வர்த்தகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சிலுள்ள அலுவலர் ஒருவர் ; அத்துடன்

(உ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சிலுள்ளவரும், அத்தகைய அமைச்சரினல் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலர் ஒருவர்

(2) இச்சட்டத்தின் IIIஆம் பாகத்திலுள்ள ஏற்பாடுகள், சபையின் உறுப்பினர்களுக்கு ஏற்புடையனவாதல்வேண்டும்.

4. காலத்துக்குக்காலம் அமைச்சர் விடுக்கக்கூடிய அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைய, கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் சபை பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம், அத்துடன் புரியலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய சபையின் கடமையாதலும் வேண்டும்.

## பாகம் II

## குறிக்கோள்களும், தத்துவங்களும், பணிகளும்

5. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(1) வர்த்தகத்திலான அல்லது வர்த்தகத்திலல்லாத ஆபத்துக்களின் விளைவாகக் கொடுப்பனவுகளைப் பெறுமைக்கு அல்லது தாமதித்துப் பெற்றமைக்கு எதிரீடாக, சாமான்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதியாளர்களுக்குக் காப்புறுதிப் பூட்கைகளை வழங்குதலும்;

(2) கப்பலேற்றுவதன் முன்னரும், கப்பலேற்றுவதன் பின்னருமான நிதி வசதிகளைச் செய்வதற்கு, வங்கிகளுக்கும் வேறு நிதி நிறுவனங்களுக்கும் உத்தரவாதங்கள் அளித்தலும் ;

(3) இலங்கையிலிருந்து எவரேனும் ஆளினல் அல்லது ஏதேனும் நிறுவனத்தினல் ஏற்றுமதிசெய்யப்பட்ட சாமான்கள் தொடர்பில் அல்லது இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியில் அத்தகைய ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அளிக்கப்படவேண்டிய எவையேனும் சேவைகளை உரிய முறையில் புரிவதற்காக வெளிநாடுகளிலுள்ள ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு உத்தரவாதங்கள் அளித்தலும் ;

(4) இலங்கையிலிருந்து சாமான்களையும் சேவைகளையும் ஏற்றுமதிசெய்தலை மேம்படுத்துவதற்காகவும் அபிவிருத்திசெய்வதற்காகவும் ஏற்றுமதியாளர்களுக்கு நிதி உதவியை ஏற்பாடுசெய்தலும் ;

(5) வெளிநாடுகளில் சந்தைநிலை ஆய்வுகளையும், விளம்பரப்படுத்தலையும் வேறேதேனும் மேம்படுத்தல் நடவடிக்கையையும் பொறுப்பேற்பதில் ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கு எதிரீடாக ஏற்றுமதியாளர்களுக்கு உத்தரவாதங்களை ஏற்பாடுசெய்தலும் ;

(6) ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்காக வங்கிகளாலும் வேறு நிதி நிறுவனங்களாலும் வழங்கப்படும் கடன் வசதிகள் தொடர்பில் அத்தகைய வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் மீள நிதியளித்தலும் மீள நிதியளித்தல் வசதிகளை ஏற்பாடுசெய்தலும் ;

(7) இலங்கையிலிருந்து ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்காக வெளிநாடுகளில் சந்தைநிலை ஆய்வுகளைப் பொறுப்பேற்றலும், ஏற்றுமதி மேம்படுத்தலின் பல்வேறு அம்சங்கள்பற்றி கருத்தரங்குகளையும் கற்கை நெறிகளையும் நடாத்துதலும், சந்தைப்படுத்தற்கான சாத்தியக் கூறுகள், நடவடிக்கைமுறைகள் என்பன பற்றிய தகவலைச் சேகரித்தலும் பரப்புதலும் ;

(8) அரசாங்கத்தின் முகவராகச் செயலாற்றுதலும், அல்லது அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு அதன் சொந்தச்சார்பில் காப்புறுதியையும் உத்தரவாதங்களையும் ஏற்பாடு செய்வதற்கும், தேசிய நலனுக்கு அவசியமானவையென அரசாங்கம் கருதும் அத்தகைய பொறுப்புகளை ஏற்றலும், அத்தகைய பணிகளை நிறைவேற்றுதலும்;

(9) ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் புதிய சந்தைகளை அடையப்பெறுவதற்கும். போட்டியிடக்கூடிய கொடுப்பனவு நியதிகளின்மீது, அவர்களின் சாமான்களை வெளிநாட்டில் விற்பனை செய்வதற்கும் ஏற்றுமதியாளர்களுக்கு உதவியளித்தலும்; அத்துடன்

(10) கூட்டுத்தாபனம் அதன் குறிக்கோள்களுள் எவற்றையும் எய்துவதற்கு அவசியமானவையெனக் கருதக்கூடிய அத்தகைய வேறு பணிகளை நிறைவேற்றுதலும்.

6. கூட்டுத்தாபனம், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, பின்வரும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிக்கலாம், புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம்:—

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளலும் வைத்திருத்தலும் கூட்டுத்தாபனத்தால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை கையாளுதலும்;

(ஆ) நாணய மாற்றுண்டியல்களையும், வாக்குறுதிப் பத்திரங்களையும், வேறு கைமாற்றத்தகு அல்லது மாற்றத்தகு சாதனங்களையும் வரைதலும், ஆக்குதலும், ஏற்றுக்கொள்ளுதலும், அவற்றிற்குக் கழிவு கொடுத்தலும், அவற்றை நிறைவேற்றுதலும், அவற்றில் புறக்குறிப்பிடுதலும், அவற்றை வழங்குதலும் பேசிப் பெறுதலும்;

(இ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் அங்கீகரிக்கப்படக்கூடிய அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது கடன்கள் பெறுதலும்;

(ஈ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அளிக்கப்பட்டதான அமைச்சரின் அங்கீகாரத்தோடு கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறாகத் தோதான அரசாங்க பிணைப் பொறுப்புகளில் கூட்டுத்தாபனத்தின் பணங்களை முதலீடு செய்தலும்;

(உ) ஏதேனும் முதலீட்டைப் பாதுகாப்பதற்கு அல்லது காசாகப் பெறுதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது உசிதமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தலும்;

(ஊ) ஏற்றுமதிகள் விரிவடைவதனை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி யாளர்களுக்கும் வங்கிகளுக்கும் அல்லது வேறெவரேனும் ஆளுக்கும் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைபொறுப்பு இன்றிக் கடன்கள் என்றவகையாக நிதி உதவி ஏற்பாடு செய்தலும்;

(எ) கூட்டுத்தாபனத்தின் வேலையை நிறைவேற்றும் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறாக அத்தகைய அலுவலர்களையும் சேவை யாளர்களையும் தொழிலுக்கமர்த்துதலும்;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் தொழிலைத் திறமையாகக் கொண்டு நடாத்து வதற்குக் கையளித்தல் அவசியமெனக் கூட்டுத்தாபனம் கருதக் கூடியவாறாக, கூட்டுத்தாபனத்தின் பணிகள் அல்லது கடமைகள் எவற்றையும் கூட்டுத்தாபனத்தின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப் பினருக்கு அல்லது அலுவலருக்கு அவ்வாறு கையளித்தலும்;

(ஐ) கூட்டுத்தாபனத்தால் தொழிலுக்கமர்த்தப்படும் ஆட்களுக்கெனச் சகாய நிதியம் ஒன்றைத் தாபித்தலும் பேணுதலும், அத்தகைய நிதியத்துக்கு உதவுதொகைகள் அளித்தலும், கடன்கள் ஒய்வூதி யங்கள் அல்லது வேறு கொடுப்பனவுகள் வழங்குவதன் மூலம் ஊழியர்களதும் அவர்களின் தங்கிவாழுநர்களதும் சேமநலத்துக்கு ஏற்பாடு செய்தலும்;

(ஒ) அதன் அலுவலர்களும், சேவையாளர்கள், முகவர்கள் ஆகியோரை நியமித்தலும், வேலைக்கமர்த்துதலும், அவர்களுக்கு ஊதியமளித் தலும், அவர்களைக் கட்டுப்படுத்தலும், அதன் அலுவல்களின் நிருவாகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் நெறிப் படுத்துதலும் முடிவுசெய்தலும்;

(ஓ) அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் அவசிய மாகக்கூடியவாறான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அத் தகைய ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும் செய்து கொள்ளுதலும் புரிதலும்;

(ஔ) கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட ஏதேனும் காப்புறுதிப் பூட் கையால் அல்லது உத்தரவாதத்தினால் எழுகின்ற ஏதேனும் பொறுப்பை, எவரேனும் காப்புறுதியாளரிடம், ஏதேனும் ஒழுங் கமைப்பிடம் அல்லது ஏதேனும் அரசாங்கத்திடம் மீளக் காப்புறுதி செய்தலும் வேறு காப்புறுதியாளர்களுக்கு மீளக் காப்புறுதியளிக்க முற்படுதலும்;

(க) பிராந்திய அல்லது சர்வதேச ஏற்றுமதிக் கடன் காப்புறுதி அல்லது மீள்காப்புறுதித் திட்டங்களில் வேறு காப்புறுதியாளர்களுடன் கூட்டு முயற்சி செய்தலும் பங்குகொள்ளுதலும்;

(ங) அதன் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் முகாமை, தொழில் நுட்ப, நிருவாகப் பயிற்சிகளை ஏற்பாடு செய்தலும்;

(ச) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துக்கு பகிரங்கக் கூட்டுத்தாப னத்துக்கு அல்லது இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியே யுள்ள ஏதேனும் நிறுவனத்துக்கு முகாமை, தொழில் நுட்ப, நிருவாக ஆலோசனையையும் சேவைகளையும் கொடுத்துதவுதலும்; அத்துடன்

(ஞ) அதன் குறிக்கோள்களை எய்துவதன் இடைநேர்விளைவான அல்லது அதற்கு உகந்தனவான அத்தகைய வேறு எல்லாக் காரியங்களையும் செய்தலும்.

## பாகம் III

### பணிப்பாளர் சபை

7. ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினராகவிருந்தால் அல்லது அவ்வாறு ஆகினல்;

(ஆ) கூட்டுத்தாபனத்தால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ், ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை நேரடியாக அல்லது மறைமுகமாகக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்தால்; அல்லது

(இ) சபையின் உறுப்பினர் என்ற முறையில் அவரது பணிகளை அவர் நிறைவேற்றுவதைப் பங்கப்படுத்தும் வகையில் பாதிக்கும் சாத்திய முள்ள அத்தகைய ஏதேனும் நிதிசார் அக்கறையை அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்,

அவர் சபையின் தவிசாளராக அல்லது அதன் உறுப்பினராக நியமிக் கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

8. மூன்றும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொரு வரும், அவர் இறப்பதன்காரணமாக அல்லது பதவிதுறப்பதன் காரணமாக அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் காரணமாக முன்னரே பதவியை வறி தாக்கினலொழிய, மூன்றுண்டுக் காலத்துக்குப் பதவி வகித்தல்வேண்டும் என்பதுடன், மீளநியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

9. சபையின் உறுப்பினர் எவரும், எப்போதேனும், அமைச்சருக்கு முகவரி யிடப்பட்டு அப்பயன்பட எழுதப்பட்ட கடிதத்தின்மூலம், தமது பதவியைத் துறக்கலாம்.

10. (1) அமைச்சர், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அதற் கான காரணம் எதுவும் காட்டாமல் தவிசாளரை அல்லது எவரேனும் உறுப் பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்; அத்தகைய அகற்றுகை நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது;

ஆயின், எவ்வாருயினும், உறுப்பினர் எவரும், எந்த அமைச்சரோடு கலந் தாலோசித்து அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டாரோ அந்த அமைச்சரின் அல்லது அத்தகைய உறும்பினரைப் பெயர்குறித்து நியமிக்கும் அமைச்சரின் அல்லது அதிகாரியின் கலந்தாலோசனையுடன் அன்றி, இவ்வுட்பிரிவின்கீழ் அகற் றப்படுதலாகாது.

(2) சபையின் உறுப்பினர் எவரும் பதவியை வறிதாக்கினல், அல்லது முற்போந்த உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டால், 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்ட அதே முறையில் வேருெர் ஆளை அமைச்சர் நியமிக்கலாம். அத்தகைய ஓர் உறுப்பினருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட ஆளெவரும், அவர் எந்த உறுப் பினரின் பின் பதவிக்குவருகின்ருரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுருதெஞ்சியுள்ள பாகத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) சபையின் உறுப்பினர் எவரும், ஏதேனும் காலத்தின்போது, சுக வீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், அத்தகைய காலத்தின் போது பதிற் கடமையாற்றுவதற்சாக, 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்ட அதேமுறையில், வேறெவரேனும் ஆளை அமைச்சர் நியமிக்கலாம்.

11. தவிசாளருக்கு அல்லது சபையின் எவரேனும் உறுப்பினருக்குக் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அளிக்கப்படலாம்.

12. (1) சபையின் தவிசாளர் சமுகமாகவிருப்பின், சபையின் எல்லாக் கூட்டங்களிலும் அவர் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய கூட்டமெதிலும் தவிசாளர் சமுகமளிக்காவிடில், சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், அவ்வுறுப்பினர்களில் ஒருவரை, அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கெனத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் கூட்டமெதற்குமான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாக இருத்தல்வேண்டும் என்பதுடன், அத்தகைய சபையின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பிலுமான நடவடிக்கைமுறையைச் சபையானது ஒழுங்குபடுத்தலாம்.

(3) சபையின் கூட்டமெதிலும் முடிவு எடுக்கப்படுவதற்கான எல்லாப் பிரச்சினைகளும், சமுகமளித்துள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையோரின் வாக்கைக் கொண்டு முடிவுசெய்யப்படுதல்வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தலைமைதாங்கும் உறுப்பினருக்கு அறுதியிடும் வாக்கு இருத்தல்வேண்டும்

13. கூட்டுத்தாபனத்தால் நடாத்தப்பட்ட அல்லது நடாத்தப்படக் கருதப்பட்ட ஏதேனும் அலுவலில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள உறுப்பினர் ஒருவர், அத்தகைய அலுவல் பற்றிக் கலந்துரையாடப்படும் சபையின் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளியிடுதல் வேண்டும். அந்த வெளியிடுகையானது சபையின் கூட்டநிகழ்ச்சிக் குறிப்புகளில் பதியப்படுதல்வேண்டும் என்பதுடன், அத்தகைய உறுப்பினர், அத்தகைய அலுவல்தொடர்பில் சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிவில் பங்குபற்றுதலுமாகாது; அத்துடன் அத்தகைய கலந்தாராய்வு நடக்கும்போது அல்லது அத்தகைய முடிவு எடுக்கப்படும்போது அத்தகைய கூட்டத்தைவிட்டு அவர் வெளியேறுதல் வேண்டும்,

14. சபையின் செயல் அல்லது முடிவு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஒரு வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

15. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபையின் கட்டுக் காவலில் இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றப்படலாம்.

(3) சபையின் இரண்டு உறுப்பினர்கள் சமுகமாகவிருக்கும்போது தவிர, கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவ்விரண்டு உறுப்பினர்களும், அவர்கள் சமுகமாக இருந்தனர் என்பதற்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் IV

## நிதி

16. (1) கூட்டுத்தாபனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ஐம்பது இலட்சம் ரூபாவாதல் வேண்டும்; இத்தொகையில் இருபத்தைந்து இலட்சம் ரூபா, முதலில் இலங்கை மத்திய வங்கியினாலும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தினாலும் சரிசம விகிதத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மேல், மீதியாகவுள்ள இருபத்தைந்து இலட்சம் ரூபாக்கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம், இலங்கை மத்திய வங்கியிலிருந்தும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தி லிருந்தும் சரிசம விகிதத்தில் கூட்டுத்தாபனத்தினால் பெறப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் அதிகாரமளிக்கப்பட்டதும் செலுத்தப்பட்டது மான மூலதனம், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டோடு அளிக்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்துடன் கூட்டுத்தாப னத்தால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய தொகையால் காலத்துக் குக் காலம் அதிகரிக்கப்படலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மூலதனத்திலான அதி கரிப்புத்தொகை, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டோடு அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தவணைப்பணங்களில் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

17. (1) அமைச்சரின் வேண்டுதலின்பேரில், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், அவரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்த கைய தொகைவரையில், கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகள், உத்தரவாதங்கள் என்பன தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்கு உத்தரவாதமளித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்ட பணத்தொகையெதுவும் திரட்டு நிதியத்தி லிருந்து செலுத்தப்படலாம்.

(3) சபையின் தீர்மானமொன்றைப் பின்பற்றி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டதும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக் கூடியதுமான அத்தகைய உத்தரவாதத் தொகையின் பகுதியெதுவும், கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட எவையேனும் காப்புறுதிப் பூட்கைகள், உத்தரவாதங்கள் என்பன தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் ஆகக் குறைந்த ஒதுக்குகளுக்கு மேற்பட்ட ஏதேனும் உரிமைக் கோரிக்கையைக் கொடுப்பதற்காகக் கூட்டுத்தாபனத்தால் பெறப்படலாம்.

18. கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட எவையேனும் காப்புறுதிப் பூட் கைகள், உத்தரவாதங்கள் என்பனவற்றின்கீழ் கூட்டுத்தாபனம் ஏற்கக்கூடிய பொறுப்பின் ஆகக்கூடிய வரம்பு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் காலத்துக்குக் காலம் தீர் மானிக்கப்படல் வேண்டும்.

19 (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும்

(2) பின்வருவன நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) பதினாறும், பதினேழாம் பிரிவுகளின் கீழ் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை;

(ஆ) கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகள், உத்தரவாதங்கள் என்பன தொடர்பிலான கட்டுப்பணமாகக் கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்:

(இ) கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட பண வழங்கல்கள் எல்லாம்; அத்துடன்

(ஈ) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் அதனால் பெறப்பட்ட அறவீடுகளும் விதிப்பனவுகளும் உட்பட எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பின்வருவன கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:—

(அ) கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகள், உத்தரவாதங்கள் என்பவற்றின் கீழ் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும், அதனால் உறப்பட்ட செலவினம் எதனையும் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும்.

20. (1) கூட்டுத்தாபனத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், கூட்டுத்தாபனம், அச்சட்டத்தின் அப்பாகத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனம் என்றுற்போன்று, அத்தகைய கூட்டுத்தாபனத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் அதன் கணக்குகளுக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல்வேண்டும்.

21. (1) ஒவ்வோர் ஆண்டுக்குமான கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபமானது, வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரோடு கலந்தாலோசித்து அமைச்சர் அளிக்கும் அங்கீகாரத்துடன் கூட்டுத்தாபனம் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய விதத்தில் முதலீடு செய்யப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் பங்கு மூலதனத்தின் மீது பங்கிலாபம் எதுவும் செலுத்தப்படுதலாகாது.

22. (1) பணிப்பாளர் ஒருவர் அல்லது சபையினால் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவர் அல்லாத ஆளெவரும், இச்சட்டத்தின் கீழ் சபையினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களை, பணிகளை அல்லது கடமைகளைப் பிரயோகிப்பதில், நிறைவேற்றுவதில் அல்லது

புரிவதில், சபையினுல் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென அல்லது எழுதி நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் எவற்றிலும் கையொப்பமிட்டு அவற்றை எழுதி நிறைவேற்றுதலாகாது.

(2) பணிப்பாளர்களால் அல்லது பற்றுச்சீட்டுக்களில் கையொப்பமிடுவதற்குச் சபையினுல் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினுல் கையொப்பமிடப்பட்ட அத்தகைய பற்றுச்சீட்டுக்கள், கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட்ட தொகைகளுக்கான பயனுள்ள பொறுப்பு விடுவிப்பாதல் வேண்டும்.

## பாகம் V

## கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதியினர்

23. (1) கூட்டுத்தாபனத்தின் தவிசாளர், கூட்டுத்தாபனத்தின் முகாமைப் பணிப்பாளராகப் பணியாற்றுதல் வேண்டும்.

(2) தவிசாளர், சபையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் தொழிலை நெறிப்படுத்துவதற்கும், கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கமைப்புக்கும், அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும், கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களது நிருவாகக் கட்டுப்பாட்டுக்கும் (பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்.

(3) தவிசாளர், இச்சட்டத்தினுல் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை சபையின் அங்கீகாரத்தோடு, ஊழியர் எவருக்கும் எழுத்து மூலமாகக் கையளிப்பது அவசியமென அவர் கருதும் போதெல்லாம், அவ்வாறு செய்யலாம். அத்துடன் அத்தகைய ஊழியர், தவிசாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைய, அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

24. (1) சபை, அதன் பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கு அவசியமென அது கருதும் அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும், சபை தீர்மானிக்கக்கூடியவாறுன அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர்கள், சபை தீர்மானிக்கக்கூடியவாறுன அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) சபையின் வேண்டுதலின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அந்த அலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சின் செயலாளரினதும் சம்மதத்துடன், அதே போன்ற சம்மதத்துடன் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய காலத்துக்குக் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச்சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, போக்குவரத்துச் சபை சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்துக்கு அரசாங்கத்துக்குச் சேவை செய்வதற்கு உடன்பட்டுள்ள எவரேனும் ஆளைக் கூட்டுத்தாபனம் தொழிலுக்கமர்த்துமிடத்து, அக்கூட்டுத்தாபனத்தில் அந்தஆளின் சேவைக்காலம் எதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) கூட்டுத்தாபனத்தின் வேண்டுதலின் பேரில், உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர் எவரும் அல்லது உள்ளூர் அதிகார சபையின் வேறு அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், விடயத்துக்கு ஏற்றவாறு, அந்த உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினது அல்லது உள்ளூர் அதிகாரச் சபையினது அத்தகைய உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கு, கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது கூட்டுத்தாபனமும், உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையும் அல்லது அந்த உள்ளூர் அதிகாரசபையும் உடன்பட்டுக்கொள்ளக்கூடியவையும், ஓய்வூதியங்கள் அல்லது சகாய நிதிய உரிமைகள் பற்றியன உட்பட்டவையுமான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) சபையின் வேண்டுதலின் பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மத்துடன், அதே போன்ற சம்மதத்துடன் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது கூட்டுத்தாபனமும். சொல்லப்பட்ட பகிரங்க கூட்டுத்தாபனமும் உடன்பட்டுக் கொள்ளக்கூடியவையும் ஓய்வூதியங்கள், சகாய நிதிய உரிமைகள் பற்றியன உட்பட்டவையுமான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(9) ஏழாம் அல்லது எட்டாம் உட்பிரிவைப் பின்பற்றி ஆளெவரும் கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினர் அமைந்தவராயிருக்கும் அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

25. கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணிப்பாளர்களும், அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

26. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட கூட்டுத்தாபனம் ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும்வேண்டும்.

## பாகம் VI

### பொது

27. கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் சேதம் அல்லது இழப்பு கூட்டுத்தாபனப் பணிப்பாளரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் வேண்டுமென்றே செய்த செயலினால் அல்லது தவறுகையினால் ஏற்பட்டாலொழிய, அத்தகைய சேதத்துக்கு அல்லது இழப்புக்கு அவர் ஆளாதலாகாது.

28. (1) துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும்—

(அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, சபைக்கு எதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது, கூட்டத்தாபனத்தின் எவரேனும் பணிப்பாளரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, அவருக்கு எதிராக,

தொடுக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தில் கூட்டுத்தாபனத்தால் அல்லது கூட்டுத்தாபனத்துக்குக்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட செலவுகள் எவையும், கூட்டுத்தாபனத்தின் நிதிகளிலிருந்து செலுத்தப்படுதல்வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுதொகை எதுவும், கூட்டுத்தாபனத்தின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளினால், இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட செலவுகள் எவையும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் புரியப்பட்டதென நீதிமன்றம் கருதினால், (அத்தகைய செலவுகள், அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலொழிய) கூட்டுத்தாபனத்தின் நிதிகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

29. கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பணிப்பாளரும், ஊழியரும் அல்லது கணக்காய்வாளரும், அவரது கடமைகளை மேற்கொள்ளுமுன்னர், கூட்

டுத்தாபனத்தின் எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய எல்லா விடயங்கள் தொடர்பிலும், கண்டிப்பாக இரகசியத்தைக் கடைப் பிடிப்பாரெனச் சூளுரைத்து ஒரு வெளிப் படுத்துக்கையில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர, அத்தகைய ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அல்லது விடயத்தை வெளிக் காட்டுவதில்லையென அக்தகைய வெளிப்படுத்துகையின் மூலம் அவர் சூளுரைத்தலும் வேண்டும்:—

(அ) பணிப்பாளர் சபையினால், ஒரு நீதிமன்றத்தினால், அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது விடயம் எவ்வாள் பற்றியதோ அவ்வாளினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும் போதும்;

(ஆ) அவரது கடமைகளைப் புரிவதிலும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகுவதற்காகவும்.

30. இச்சட்டத்தின் கீழ் அல்லது இதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின் கீழ் எவரேனும் ஆளுக்குச் சேர்ப்பிக்கும்படி தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தல், கட்டளை அல்லது ஆவணம்—

(அ) அவ்வாளிடம் ஒப்படைப்பதன் மூலமும் அல்லது அத்தகைய ஆளுக்கு முகவரியிடப்பட்ட ஓர் உறையில், வழமையான அல்லது கடைசியாக அறிந்த அவ்வாளின் இருப்பிடத்தில் அல்லது தொழிலிடத்தின் முகவரியில் அதை ஒப்படைப்பதன் மூலமும்;

(ஆ) அவ்வாளின் வழமையான அல்லது கடைசியாக அறிந்த இருப்பிடத்துக்கு அல்லது தொழிலிடத்துக்கு முகவரியிட்டுப் பதிவு அஞ்சலில் அதை அனுப்புவதன் மூலமும்,

சேர்ப்பிக்கப்படலாம்.

31. (1) எவ்விடயங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அவ்விடயங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றில் எது தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் ஒவ்வொன்றும் கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதி ஒவ்வொன்றும், அது கசற்றில் வெளியிடப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்துக்கெனக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்கு விதி ஒவ்வொன்றும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடிக்குப் பங்கமின்றி நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

32. (அ) இச்சட்டத்தின் ஏற்பாடு எதனையும் அல்லது இதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின் ஏற்பாடும் எதனையும் மீறும்; அல்லது

(ஆ) தமது அறிவுக்கெட்டியவரை, உண்மையில்லாத அல்லது சரியில்லாத தகவல் எதனையும், அல்லது , உள்ளடக்கத்தை அல்லது உள்ளடக்கத்தின் பாகம் எதனையும் கொண்ட ஆவணம் எதனையும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கொடுத்துதவும்; அல்லது

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், கூட்டுத்தாபனத்தின் அலுவலர் எவரும், அவரது கடமைகளைப் புரிவதை வேண்டுமென்றே தடை செய்யும்,

ஆளெவரும், ஒரு தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியலுக்கு, அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்துக்கு, அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

33. இலங்கை மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படும் பொதியிலடைத்தல் கடன் உத்தரவாதத் திட்டம், ஏற்றுமதிப் புரிகை உத்தரவாதத் திட்டம் ஆகியன தொடர்பானவையும், நியமித்த தேதியன்று உள்ளவையுமான (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 188 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அரசாங்கத்தின் முகவராகச் செயலாற்றும் இலங்கை மத்திய வங்கியின் எல்லாச் சொத்துக்களும், கடன்களும், பொறுப்புக்களும், கடப்பாடுகளும், கூட்டுத்தாபனத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

34 ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தோராம் ஆண்டின் 2 ஆம் இலக்க, காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் முரணுகை எது எப்படியிருப்பினும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தின் பங்கு மூலதனத்துக்கு உதவுதொகை செலுத்தலாம்.

35. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தோராம் ஆண்டில் 2ஆம் இலக்க, காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் முரணுகை எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காப்புறுதித் தொழிலைக் கூட்டுத்தாபனம் கொண்டு நடாத்ததுதல் வேண்டும்.

36. பணச் சட்டத்தில் முரணுகை எது எப்படியிருப்பினும், இலங்கை மத்திய வங்கி, கூட்டுத்தாபனத்தின் பங்கு மூலதனத்துக்கு உதவு தொகை செலுத்தலாம்.

37. (1) அமைச்சர், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் மூலம், கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை, திரிபுகளுடனே அல்லது திரிபுகளின்றியோ, கூட்டுத்தாபனத்துக்கு ஏற்புடையனவாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யலாம்.

(2) இச்சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளினால் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்புடையனவாக்கப்பட்ட கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளைத் தவிர்ந்த அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், கூட்டுத்தாபனத்துக்கு ஏற்புடையனவாதலாகாது;

38. வேறேதேனும் எழுத்திலுள்ள சட்டத்தில் முரணுகை எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுள்ளனவாதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்துக்கு இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

## 1978ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

*(1978, திசெம்பர் மாதம் 27ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**1979ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ வெளிநாடுகளிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், குறித்த நிதியாண்டில் அரசாங்கத்தின் சில முயற்சிகள் சம்பந்தமாக நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு, குறித்த நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்துக்கு அப்பணங்களைத் திருப்பிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், முற்கூறிய கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர்வினவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*1. இச்சட்டம் 1978ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. (1) இச்சட்டத்தில் ‘‘1979ஆம் நிதியாண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும் 1979ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆந் தேதி தொடக்கம் 1979ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலத்துக்கான சேவைக்காக ஆயிரத்து அறுநூற்று எண்பத்துநான்கு கோடியே இருபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தி நாலாயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத்தொகையானது, செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி —*

*(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறெந்த நிதியத்தினின்று அல்லது பணங்களினின்று வழங்கப்படுமாறு இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளினின்றும்; அத்துடன்*

*(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ வெளிநாட்டிலோ திரட்டப்படும்படி இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியினின்றும், (எவ்விதமாயினும், அத்தகைய வரும்படியின் கூட்டு மொத்தத்தொகை எண்ணூற்றுப்பதினெட்டுக் கோடியே அறுபது இலட்சம் ரூபாவுக்கு மேற்படலாகாது).*

*பெறப்படல் வேண்டும்.*

*இதன்கண் முன்னர் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆயிரத்து அறுநூற்று எண்பத்துநான்கு கோடியே இருபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்து நாலாயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு ரூபாக்கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.*

*(2) இப்பிரிவின் (1ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகாரமளிக்கும் எழுத்திலான*

வேறு எந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் பங்கமின்றிப் பயனுடையவாதல் வேண்டும்.

3. *(1)* இரண்டாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டின் போது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிறையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகைய முயற்சியின் கணக்கில் வரவு வைக்கப்படுதல்வேண்டும்; ஆனால், அவ்வாறு வரவு வைக்கப்பட்ட வரவுகளின் கூட்டு மொத்தத்தொகை அந்த அட்டவணையின் IIIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித் துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைக்கு மேற்படலாகாது. அத்தகைய முயற்சியினின்றும் அத்தகைய ஆகக்குறைந்த எல்லைக்கு மேலாகப் பெறப் படும் வரவுகள் எவையும் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல்வேண்டும்.

*(2)* இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டின்போது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித் துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியின் பேரில் அரசாங்கத்துக்கு ஏற் படும் செலவினம், அந்த நிதியாண்டின்போது அத்தகைய முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகளிலிருந்து கொடுபடுதல்வேண்டும்; ஆனால் அத் தகைய செலவினம், அந்த அட்டவணையின் IIஆம் நிரையிலுள்ள அதன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற் படலாகாது.

*(3)* இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டின் முடிவில் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியினின்றும் நிலுவையாகவுள்ள பற்று மீதி, அந்த அட்டவணையின் IVஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது; அத்துடன் அந்த நிதியாண்டின் முடிவில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புகள், அந்த அட்டவணையின் Vஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக் கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

4. இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதியாண்டில் எப் போதேனும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1ஆம் நிரை யிற் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்த முயற்சியினின்றும் அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகைய முயற்சியின்மீது அரசாங்கத்தினால் உறப்பட்ட செல வினங்களுக்குப் போதியனவாயிராவிடின், அமைச்சர் அத்தகைய செலவினத் திற்கு அவசியமெனத் தம்மாற் கருதப்படும் அத்தகைய தொகைகள் முற் பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களி லிருந்து கொடுக்கப்படுதல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம் கட்டளை மூலம் பணிக்கலாம். எவ்வாறுயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப் படும் பணத்தொகைகளின் கூட்டு மொத்தத்தொகை அந்த அட்டவணையின் IIஆம் நிரையுலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செல வினங்களின் ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாமல் இருத்தல்வேண்டும். அத் தகைய முயற்சி சம்பந்தமாக அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட எப்பணத் தொகைகளும் அமைச்சராற் கட்டளைமூலம் பணிக்கப்படும் முறை யில் திரட்டு நிதியத்திற்குத் திரும்பக் கொடுக்கப்படுதல்வேண்டும்.

5. *(1)* இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனுக அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத் தலைப்பின் கீழ்த் தோன்றும் எந்த நிகழ்ச்சித்திட்டத்தின்கீழும் மீண்டுவருஞ் செலவினத்திற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்து, ஆனுல் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்தியமில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள் திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளைமூலம் அதே நிகழ்ச்சித்திட்டத்திற்கு உட்பட்ட ஆக்கப்பொருட் செலவினத்திற்கெனச் செய்யும் பகிர்வுக்கு அல்லது அதே தலைப்பிற்கு உட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்வரும் மீண்டு வருஞ் செலவினம் அல்லது ஆக்கப்பொருட் செலவினம் என்ற பகிர்வுக்கு மாற்றப்படலாம்.

*(2)* இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் ஆக்கப் பொருட் செலவுக்குப் பகிரப்பட்டுள்ள எப்பணங்களும் அப்பகிர்விலிருந்து வேறெதற்கும் மாற்றப்படலாகாது.

6. *(1)* வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள் அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும் விடக் குறைவாயிருக்குமென; அல்லது

*(2)* ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாவென

அமைச்சர் திருப்தியடையுமிடத்து, திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து, அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப்பெறலாம்.

7. இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் IIஆம் நிரையிலும் IVஆம் நிரையிலும் Vஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும் அல்லது IIIஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளுள் எதனையும் அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகாரத்தோடு, 1980 மே மாதம் 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளை மூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம். அத்தகைய எந்தக் கட்டளையும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப் பட்டிருக்கக்கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின்மூலம் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையை, அவ்வட்டவணையின் தோதான நிரைகளுக்கு ஏதேனும் முயற்சியையும் அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக் கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும் சேர்ப்பதன்மூலம் திருத்தலாம்.